மாமன்னன்
சரபோசியின் 221 - ஆம் பிறந்தநாள் விழாக்
கருத்தரங்கம்

சரபோசியின் பன்முகமாட்சி

இடம் : தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 5.

நாள் : 25-9-1997 வியாழன்

அமைப்பு :

தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

V2193, 1y7L77
N97
இ14759

மாமன்னன்
சரபோசியின் 221 - ஆம் பிறந்தநாள் விழாக்
கருத்தரங்கம்

சரபோசியின் பன்முகமாட்சி

இடம் : தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 5.

நாள் : 25-9-1997 வியாழன்

அமைப்பு :

தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தஞ்சைச் சோழர் மரபில் முதலாம் இராசராசன்போலத் தஞ்சை மராட்டிய மரபில் மாமன்னராகத் திகழ்ந்தவர் சரபோசி!

24.9.1777இல் பிறந்து ஒன்பதாவது வயதில் மன்னர் துளசாவால் (1763-1787) தத்தெடுக்கப்பட்டார். துளசாவின் தம்பி அமர்சிங் (1787-17 அரசரானதால் சரபோசி கிறிஸ்டியன் ஃபிரடரிக் சுவார்ட்சு (1726-1798) பொறுப்பில் வளர்ந்தார். மேநாட்டுக் கல்வி கற்றார். இளமையில் ரூபம், குணம் இவற்றில் மிகச் சிறந்தவராக இருந்தார் என்று மோடி ஆவணம் கூறுகிறது.

சுவார்ட்சின் பெருமுயற்சியால் அமர்சிங் பதவி நீக்கம் செய்யப்பட்டு ஆண்டொன்றுக்கு 25000 வராகன் ஓய்வூதியம் அளிக்கப்பட்டு திருவிடைமருதூர் அரண்மனைக்கு அனுப்பப்பட்டார். 30.6.1798இல் சரபோசி அரசரானார்.

25.10.1799இல் கும்பினியரோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். தஞ்சை நகரமும் 300 கிராமங்களும் மட்டுமே தமக்கு உரியதாக வைத்துக்கொண்டு நாட்டைக் கும்பினியாருக்கு அளித்துவிட்டார். நாட்டு நிகர வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கும் ஒரு லட்சம் வராகனும் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் ஆட் சுமையின்றிக் கல்வி, கலை வளர்ச்சியில் ஈடுபட்டார்.

சரபோசிக்கு யமுனாபாயி சாகேப், அகல்யாபாய் சாகேப் என்ற இரு மனைவியர் உண்டு. நாயுடு குடும்பத்தைச் சேர்ந்த முத்தம்மாள் என்பவரைத் தம் திருமணத்திற்கு முன்னரே 'எடுத்துக் கொண்டிருந்தார்' என்று ஆவணம் கூறுகிறது.

சரபோசி-அகல்யாபாயி சாகேப் தம்பதியினருக்கு கலக்ஷ்னாபாயி சாகே ராஜகுமரம்பாபாயி சாகேப், பாயம்மாபாயி சாகேப் என்ற மூன்று மகள்களும், 1808இல் சிவாசி என்ற மகனும் பிறந்தனர்.

8.3.1832இல் சரபோசி காலமானார். சிவாசி (1832-1855) அரசரானார்.

உலகெங்குமிருந்து ஏறக்குறைய 5000 ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழி நூல்களைப் பெற்றும், பன்மொழிச் சுவடிகளைப் பராமரித்தும், பெயர்த்து எழுதி தொகுத்தும், பட்டியல் தயாரித்தும் சரசுவதி மகால் நூலகத்தைக் கண்போலப் பாதுகாத்தார்.

.... 2

சரசுவதிமகால் நூலகத்தை ஆங்கிலேயரிடமிருந்து மீட்டுக் காத்துத் தஞ்சையில் நிலைக்கச் செய்தவர் சிவாசி அரசரின் மனைவி காமாட்சியம்பாபாய் சாகேப் அவர்கள். பல அறப்பணிகளை ஆற்றிப் பொதுப் பணிகளை, சமயப் பணிகளை, சமூகப் பணிகளைத் திறம்படச் செய்த அந்த அம்மையாருக்கும் எதிர்காலத்தில் விழா எடுப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து வரலாற்றுப் பெருமை பெற்று விளங்கும் தஞ்சையில் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 25.9.1997 அன்று தன் வட்டார அலுவலகத்தைத் தொடங்குகிறது.

அந்த நன்னாளில் தஞ்சை வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சரபோசி பிறந்த நாள் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

தஞ்சை மாவட்ட ஆட்சியர் திருமிகு து.நா.இராமநாதன் அவர்கள் சிறந்த ஆர்வத்தாலும், ஆலோசனைகளாலும், அரிய ஒத்துழைப்பாலும், ஊக்கத்தாலும் கருத்தரங்கம் சிறப்புடன் நடைபெறுகிறது.

கருத்தரங்க ஏற்பாடுகள் அனைத்தையும் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறைத்தலைவர் முனைவர் செ.இராசு அவர்கள் முன்னின்று சிறப்பாகச் செய்துதவி உள்ளார்கள். விழாச் சிறக்க தமிழ்நாடு ஆவணக்காப்பக விவரச் சுவடிப் பதிப்பாசிரியர் முனைவர் கே.எஸ்.கே.வேல்மணி உதவியாகச் செயலாற்றி வருகிறார். ஆவணக்காப்பக உதவி ஆணையர் திரு.வி.இராமகிருட்டிணன், தஞ்சை அலுவலகம் திரு.கோபால், சரசுவதி மகால் நூலகக் குடவாயில் பாலசுப்பிரமணியன் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முதுமுனைவர் ம.சா.அறிவுடைநம்பி, முனைவர் இராசு.பவுன்துரை, முனைவர் எ.சுப்பராயலு அவர்கள் உள்ளிட்ட கல்வெட்டியல் துறையினர், திரு.தேவராசன், சரசுவதி மகால் அலுவலர்கள் ஆகியோர் பல அரிய ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்துள்ளனர். தமிழ்ப் பல்கலைக்கழக அலுவலர்களும் பணியாளர்களும் சிறந்த ஒத்துழைப்பை நல்கினர்.

மிகக் குறுகிய காலத்தில் ஆய்வுக் கட்டுரைகளை அளித்த கட்டுரையாளர்களை மனமாரப் பாராட்டுகின்றோம்.

கட்டிடக் கலைஞராக, ஆலயத் திருப்பணியாளராக, வரலாற்று நூல் தொகுப்பித்தவராக, ஓலைச்சுவடி தேடிக் காத்தவராக, கலப்புமணம் செய்தவராக, புத்தகப் பிரியராக, தோட்டக்கலை நிபுணராக, பறவைகள் - விலங்குகள் நண்பராக, ஏழை பங்காளராக, நகரமைப்பு வல்லுநராக, உணவுடன் இலவசக் கல்வி தந்தவராக, ...

மருத்துவக் கலை ஆய்வாளராக, உயர்ந்த நீதிமானாக, இசைக்கலை மேதையாக, பன்மொழி அறிஞராக, ஆங்கிலக் கல்வி தந்த முதல்வராக, இலக்கியம்படைத்த கவிஞராக, அச்சுக்கலை கண்டவராக, கல்வெட்டுப்படி எடுத்துக் காத்தவராக, கர்ப்பிணிப் பெண்களுக்கு மருந்தும், குழந்தைகளுக்குப் பாலும் அளித்த வள்ளலாக, ஊனமுற்றோர்பால் பரிவுடையவராக, மனித நேயம் மிக்க மாமனிதராக வாழ்ந்து காட்டியவர் சரபோசி.

தமிழ்நாடு ஆவணக்காப்பக மாவட்ட விபரச் சுவடிக்கு (District Gazette சான்றுகள் தொகுக்கும் பணிக்காக சென்னை தமிழ்நாடு ஆவணக்காப்பகமும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகமும் இக்கருத்தரங்கை நடத்துவதில் பெருமை கொள்கிறது.

சரபோசி போற்றுதும்! சரபோசி போற்றுதும்! என வாழ்த்தி மகிழ்கின்றோம்.

முனைவர் சி. கருணாகரன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-5.

சி.கே.கரியாலி, இ.ஆ.ப.,
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்று
வரலாற்றுத்துறை ஆராய்ச்சிச் சிறப்
ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-8.

கருத்தரங்குக் கட்டுரைகள்

அமர்வுத் தலைவர்கள் : முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்
முனைவர் செ.இராசு

கட்டுரையாளர்கள்:	தலைப்பு:
திரு. பெருமாள்	சரபோசியும் சரசுவதி மகாலும்
திரு. ம. சீராளன்	சரபோசியும் தஞ்சைப் பெரிய கோயிலும்
திரு. பா. ஜெயக்குமார்	சரபோசியும் சத்திரங்களும்
திரு. குடவாயில் பாலசுப்பிரமணியம்	சரபோசி காலக் கலை வளர்ச்சி
முனைவர் இராசு பவுன்துரை	சரபோசி காலக் கட்டிடக் கலை
முனைவர் செ. இராசு	சரபோசியின் கல்வெட்டுக்கள்
திரு. ட. மணிகண்டன்	சரபோசி மன்னர் காத்த தமிழ்ச்சுவடிகள்
திரு. த. பத்மநாபன்	சரபோசி கால நூலகத்தின் சமூகப் பணிகள்
முனைவர் ம.சா. அறிவுடைநம்பி	சரபோசி காலத் தமிழ் இலக்கியங்கள்
திரு. இராக் விவேகானந்த கோபால்	மராத்தி, மோடி ஆவணங்களில் சரபோசி
புலவர் சீனிவாசன்	சரபோசி கால வடமொழி இலக்கியங்கள்
திரு. நா. விசுவநாதன்	சரபோசி காலத் தெலுங்கு இலக்கியங்கள்
திருமதி க. இராமதிலகம்	சரபோசியின் காசி யாத்திரை
முனைவர் வே. இரா. மாதவன்	சரபோசியின் மருத்துவத் தொண்டு
அருள்திரு ஆ. ஜான்துரை	சரபோசியும் வேதநாயக சாஸ்திரியும்
அருள்திரு ஜே. துரைராசு	சரபோசியும் மேனாட்டவர்களும்
புலவர் சொக்கலிங்கம்	சரபோசி பிள்ளைத் தமிழ்

தமிழ்ப் பல்கலைக்கழகமும் தஞ்சை மராட்டியர் தொடர்பான ஆய்வுகளும்

தஞ்சையில் அமைந்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சை மராட்டியர் தொடர்பான பல ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் வெளியீடு '<u>தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்</u>' பல்கலைக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு விழாவில் 15.9.1983 அன்று வெளியிடப்பட்டது. அந்நூல் அவ்வாண்டுக்குரிய சிறந்த தொல்லியல் வரலாற்று நூலாகத் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசையும் பெற்றது. அதனைத் தொடர்ந்து 1986ஆம் ஆண்டு '<u>தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்</u>' என்னும் நூலும் வெளிவந்தது.

இந்நூல்களில் உள்ள 60 செப்பேடுகளையும், 125 கல்வெட்டுக்களையும் தொகுத்து வெளியிட்டவர் கல்வெட்டியல் துறைத்தலைவர் முனைவர் செ.இராசு ஆவார்.

அரிய கையெழுத்துச் சுவடித்துறைத்தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் கே.எம்.வேங்கடராமையா அவர்கள் மோடி ஆவணங்கள் மூலம் '<u>தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு</u>', '<u>தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்</u>' ஆகியவைகளை வெளியிட்டார். அவர் தொகுத்தளித்த '<u>தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும்</u>' என்ற மூன்று நூல்களையும் அரிய கையெழுத்துச் சுவடித்துறைத் தலைவர் முனைவர் பா.சுப்பிரமணியன் பதிப்பித்துள்ளார். இந்நூலுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாக பூனா சென்று மோடி ஆவணப் பயிற்சி பெற்ற திரு.இராசு விவேகானந்த கோபால் மோடி வல்லுநராகப் பணிபுரிந்தார். வேங்கடராமையா நூலுக்குச் சரசுவதி மகால் மோடித் தமிழாக்கம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகமும் சிலவற்றை மொழிபெயர்த்தது. அரிய கையெழுத்துச் சுவடித்துறை இணைப்பேராசிரியர் முதுமுனைவர் ம.சா.அறிவுடைநம்பி அவர்கள் '<u>தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்</u>' என்ற தலைப்பில் இரண்டு ஆய்வேடுகள் அளித்தார். முதல் தொகுதி 1994இல் அச்சாகியுள்ளது. அறிவுடைநம்பி அவர்கள் தம் முதுமுனைவர் பட்டத்திற்கு '<u>மராட்டிய மன்னர் வளர்த்த நுண்கலைகள்</u>' என்ற தலைப்பில் ஆய்வேடு அளித்து முதுமுனைவர் (டி.லிட்.) பட்டமும் பெற்றுள்ளார்.

...2

கல்வெட்டியல் துறையில் செல்வி சீ.நீலாவதி '<u>தஞ்சை மராட்டிய மன்னர் காலக் கோயில் ஆட்சி முறையும் பொருளியல் நிலையும்</u>' என்ற தலைப்பிலும், அரிய கையெழுத்துச் சுவடித் துறையைச் சேர்ந்த சோ.சுந்தரி, வெ.சியாமளா, கௌ.சந்திரா, ழ.புஷ்பரோசமேரி, த.ஆனந்த லட்சுமி, பெ.வெங்கட்டேசுவரி ஆகியோர் '<u>மராட்டிய மன்னர் கால அரசியலும், சமுதாயமும்</u>', '<u>மராட்டிய மன்னர்களின் சமயப்பணி</u>', '<u>இரண்டாம் சரபோஜி</u>', <u>மராட்டியர் காலத்து மகளிர் நிலை</u>', '<u>மோடி ஆவணங்கள் கூறும் வரலாற்றுச் செய்திகள்</u>', '<u>மராட்டியர் காலத்துக் கல்விநிலை</u>' என்ற தலைப்புக்களிலும் ஆய்வியல் நிறைஞருக்கான ஆய்வேடுகள் அளித்துள்ளனர்.

கட்டிடக் கலைத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் இராசு பவுன்துரை அவர்கள் மராட்டியர் கட்டிடக் கலை பற்றிப் பல கள ஆய்வுகள் செய்துள்ளார்; பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

தத்துவ மைய இணைப்பேராசிரியர் தம் '<u>தஞ்சை நகரச் சக்தி கோயில்கள்</u>' என்னும் நூலில் தஞ்சை மராட்டியர் பணிகளை விவரித்துள்ளார்.

சுமார் 50 ஆண்டுகட்கு முன் முக்கியமான தஞ்சை வரலாற்றுச் சிறப்புமிக்க மோடி ஆவணங்கள் சென்னை ஆவணக் காப்பகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவை படிவசதியின்மை காரணமாக மராட்டிய மாநிலத்திற்கு அனுப்பத் தமிழக அரசு தீர்மானித்து ஆணையும் பிறப்பித்தனர்.

தமிழ் நாட்டு ஆவணங்கள் - தஞ்சை மாவட்டம் தொடர்பான ஆவணங்கள் தஞ்சைக்கே வரவேண்டும் என்று முனைவர் செ.இராசு அவர்கள் முயன்று அன்றைய ஆவணக்காப்பக இயக்குநர் திரு.கே.பரமசிவம் அவர்கள் உதவியால் 268 மூட்டை, 119 பெரிய நோட்டில் எழுதப்பட்ட மோடி ஆவணங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

பின்னர் கடலூர், கோவை, திருச்சி, இராமநாதபுரம் மாவட்ட ஆவணக் காப்பகங்களிலிருந்தும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்தும் 750 கட்டு மோடி ஆவணங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துவரப்பட்டன.

....3

அவைகளைக் குளிர்சாதன அறையில் வைத்துப் பாதுகாத்து வருகிறோம். அந்த ஆவணங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ், ஆங்கில ஆவணங்களும் கலந்துள்ளன.

ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் மோடி ஆவணங்களைப் படிக்கவும், பதிப்பிக்கவும் வல்லுநரைக் கோரியுள்ளோம்.

எதிர்காலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் மோடி ஆவணங்களை ஆய்வு செய்து அரிய நூல்களை வெளியிடும் என்பது உறுதி.

முனைவர். செ. இராசு
கல்வெட்டியல் துறைத்தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

SRI SARFOJI MAHARAJA

கலைமகள்

சரபோஜி மன்னர் கால ஓவியம்



Serfojee Rajah 1822

THE

Justice of the Peace,

1958

AND

PARISH OFFICER.

By RICHARD BURN, LL.D.

LATE CHANCELLOR OF THE DIOCESE OF CARLISLE.

Signature of Raja Serfoji with year in the title page of the book.



Romanus II. junior. A.D. 959, Nov. 15.

The death of Constantine was imputed to poison; and his son Romanus, who derived that name from his maternal grandfather, ascended the throne of Constantinople. A prince who, at the age of twenty, could be suspected of anticipating his inheritance, must have been already lost in the public esteem; yet Romanus was rather weak than wicked; and the largest share of the guilt was transferred to his wife, Theophano, a woman of base origin, masculine spirit, and flagitious manners. The sense of personal glory and public happiness, the true pleasures of royalty, were unknown to the son of Constantine; and, while the two brothers, Nicephorus and Leo, triumphed over the Saracens, the hours which the emperor owed to his people were consumed in strenuous idleness. In the morning he visited the circus; at noon he feasted the senators; the greater part of the afternoon he spent in the *sphæristerium*, or tennis-court, the only theatre of his victories; from thence he passed over to the Asiatic side of the Bosphorus, hunted and killed four wild boars of the largest size, and returned to the palace, proudly con-

Good Epithet

Comments made by Raja Serfoji in the margin of the book.

சரபோசி மன்னரும் சரசுவதி மகாலும்

– பெருமாள்
சரசுவதி மகால் நூல
தஞ்சாவூர்

தஞ்சை நகரில் உள்ள வரலாறு கூறும் சின்னங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று. இந்நூலகம் தஞ்சை நாயக்க மன்னர்களுள் ஒருவரான இரகுநாத நாயக்கர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்வந்த நாயக்க மன்னர்கள் மற்றும் மராத் மன்னர்களால் வளர்க்கப்பட்டு இன்று உலகப் புகழ் பெற்று விளங்குகிறது. தஞ்சையை ஆண்ட மன்னர்களுள் இரண்டாம் சரபோசி மிகவும் முக்கியமானவர். இவர் இந்நூலகத்திற்கு அரிய சுவடிகளையும், நூல்களையும் தொகுத்துப் புகழ்பெறச் செய்தார். ஆகையால் அவர் பெயரால் தஞ்சாவூர் மகாராசா சரபோசியின் சரசுவதி மகால் என்று அழைக்கப்படுகின்றது.

சரபோசியின் கல்வியறிவு:

இரண்டாம் சரபோசி மன்னர் 1798 முதல் 1832 வரை தஞ்சை அரசராக திகழ்ந்தார். இவர் கல்வி, கலை, மருத்துவம், மற்றும் தென்னிந்தியப் பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

இலக்கியப்பணி:

சரபோசி மன்னர் கல்வியில் சிறந்து விளங்கியது மட்டுமன்றி நூல்கள் இயற்றும் வல்லமையும் பெற்றிருந்தார். அவர் இயற்றிய சில நூல்கள் முத்திராரட்சஸ நாடக கதா, விவகார பிரகாசம், சங்காவிசுவேசுவர பரிணயம், மோகினி மகேச பரிணய குமாரசம்பவ சம்பு, கஸ சாஸ்திரம், வைத்திய ராஜ சிந்தாமணி போன்றவைகள் ஆகும். இவர் அவைக் களத்தில் பல புலவர்கள் இருந்தனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர் இரங்கநாதகவி, கோவிந்த கவி, விருப்பாட்ச கவி, துண்டிலதசிவா, ருக்மாஜிபண்டிதர், உட்கே கோவிந்தாச்சாரியார் போன்ற கவிஞர்கள் அவையை அலங்கரித்தனர். அவர்கள் எழுதிய நூல்கள் சிலவற்றை இந்நூலகத்தில் காணலாம்.

நூல்கள் தொகுப்பு:

சரபோசி மன்னர் தாம் எழுதிய நூல்கள், அவைப் புலவர்களின் நூல்கள், இசை வல்லுநர்களின் நூல்கள், மருத்துவ நிறுவனத்தில் எழுதப்பட்ட நூல்கள், காசி யாத்திரையின்போது படி எடுக்கப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட நூல்களைத் தமது சரசுவதி மகால் நூலகத்தில் வைத்துப் பாதுகாத்தார். தவிர, பல நூல்களைப் பொன்னும் பொருளும் கொடுத்து வாங்கியுள்ளார். ஆங்கிலேயருடன் நட்புக் கொண்ட தஞ்சைக்கு வரும் ஆங்கிலேயர்களின் நூல்களை அன்பளிப்பாகப் பெற்றதுடன் இங்கு ப புரிந்த ஆங்கில அலுவலர்கள் பணிமுடிந்து செல்லும்பொழுது சரபோசி மன்னரின் நூல்

.... 2

(1810), 3. தமிழும் இங்கிலீசுமாயிருக்கிற அகராதி (A Dictionary of Malabar and English Language by Fabricius, Vepery, 1809) போன்றவை மிக முக்கியமானவை ஆகும். அவர் தொகுத்த ஐரோப்பிய நூல்கள் சுமார் 4500க்கு மேல் இந்நூலகத்தில் உள்ளன. அவற்றுள் 3830 ஆங்கில நூல்கள், 420 பிரெஞ்சு நூல்கள், 100 (சுமார்) ஜெர்மன் நூல்கள், 100 இசை வரைவு நூல்கள் மற்றும் டேனிஷ், டச்சு மொழி நூல்கள் உள்ளன.

ஆங்கில நூல்கள் மெட்ராஸ் பஞ்சாங்கம், சட்டிடச் கலை, தாவர இயல், இலக்கியம், சமயம், நிலஇயல், புவியியல், வரலாறு, மருத்துவம், இயற்கை வரலாறு, குறிப்பு நூல்கள், அகராதிகள், தத்துவம், காலமுறை இதழ்கள் என அனைத்து வகையான நூல்களும் உள்ளன. அவற்றுள் ஆங்கிலமொழி புதினம், வரலாறு, மருத்துவம், இயற்கை வரலாறு நூல்கள் அதிக அளவில் உள்ளன. இத்தொகுப்பில் இந்திய நூலகங்களில் கிடைக்கா பல அரிய முதற்பதிப்பு நூல்கள் உள்ளன. மற்றும் ஆங்கிலத்திற்கு எழுதப்பட்ட முதல் அகரா யான சாமுவேல் ஜான்சன் அகராதியின் (இரண்டு பாகம்) ஐந்தாம் பதிப்பு உள்ளது. ஆங்கில-இந்துஸ்தானி அகராதி, ஆங்கில-மலையாளம், ஆங்கில-பெங்காலி அகராதிகளும் தமிழ், இந்துஸ்தானி, சீனம், லத்தீன், செர்மானியம், பாரசீகம், போர்ச்சுகீசியம் மொழி தொடர்பான இலக்கண நூல்களும் உள்ளன.

நாட்டு நடப்பையும் ஆட்சி முறையையும் அறிந்து கொள்வதற்காக 78 ஆண்டேடுகள் மற்றும் நெறிகாட்டிகள் வாங்கியுள்ளார். அவற்றுள் 1807ஆம் ஆண்டு முதல் சென்னை மாகாணத்தின் ஆட்சி முறையைக் கூறும் மெட்ராசு அல்மனக் 42 நூல்கள் உள்ளன. மேனாட்டு அறிஞர்கள் வரைந்த அரிய டேனியல் படங்கள், பிரெஞ்சு ஓவியர் சார்லஸ் லீ புருன் வரைந்த முக ஒற்றுமைப் படங்கள் மற்றும் உலக வரைபடங்கள் உள்ளன. இந்நூலகத்தில் உள்ள மிகப் பழமையான அச்சு நூல் 1692 மற்றும் 1696இல் பாரிஸ் மற்றும் ஆம்ஸ்டர்டாம் நகரில் பிரெஞ்சு மொழி விபரத்துடன் அச்சிடப்பட்ட உலக வரைபடங்கள் ஆகும். 1788ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் ஏ.ஜே.ரன்னல் அவர்களால் அச்சிடப்பட்ட இந்திய வரைபடம் உள்ளது. அதில் அக்காலத்து இடப் பெயர்களும், பிரிவுகளையும் அறிய லாம். அவ்வரைபடத்தில் தஞ்சாவூரிலிருந்து ஆந்திராவில் உள்ள ஓங்கோல் நகர் வரை உள்ள பகுதி கர்நாட்டிக் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தான் இப்பகுதியில் ஏற்பட்ட இசைக்கு கர்நாட்டிக் இசை என்று பெயர் பெற்றது. இவ்வளவு அரிய சுவடிகளையும் நூல்களையும் இந்நூலகத்தில் இடம்பெறச் செய்த பெருமை மன்னர் சரபோசியையே சாரும்.

<u>விவர அட்டவணைப் பணி:</u>

இந்நூலகமானது நாயக்க மன்னர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து வந்த மன்னர்களால் வளர்க்கப்பட்டிருந்தாலும் இந்நூலகச் சுவடிகளுக்கு அட்டவணை சரபோசி

மன்னர் காலத்தில்தான் செய்யப்பட்டது. இந்நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடிகளுக்கு ஓலை சாகிதச் சுவடிகளுக்கு சாகிதத்திலும் அட்டவணை தயாரிக்கப்பட்டது. ஓலைச்சுவடி அட்டவ தெலுங்கு எழுத்தில் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளது. அதன் முதல் ஓலையில் கீழ்க்கச தகவல் தெலுங்கு மொழியில் உள்ளது.

"சரபோசி மகாராஜா அவர்கள் பட்டத்திற்கு வருவதற்கு முன்பு இந்த சரஸ்வதி மகால் நூல் நிலையத்திற்கு விவரமான பட்டியல் இல்லை. 1720 காளயுக்தி ஆண்டு சரபோஜி மகாராஜாவிற்குப் பட்டயம் கட்டியபின் மான்யம்பட் என்கிற சங்காதரபட், சதாசிவபட் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கியபின் இந்த சரஸ்வதி மகால் காகித புத்தகங்களுக்கும், ஓலைச்சுவடிகளுக்கும் தகுந்தவர்களை நியமித்து புத்தகங்களைப் பரிசீலித்து பட்டியல் தயாரிக்கப்பட்டது சக ஆண்டு 1722, ஆங் ஆண்டு 1801, இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டது ரௌத்திரி வருஷம்"

இந்தச் சுவடிகள் அட்டவணை மூன்று ஓலைச் சுவடிக்கட்டுகளாக உள்ளன. அவற்றில் புராணம் தர்க்கம், வியாகரணம், தர்மசாஸ்திரம், சப்தசாஸ்திரம், ஆகம சாஸ்திரம், மீமாம்சம் வைத்தியம், சில்ப சாஸ்திரம், கீதை, நிகண்டு, இராமாயணம், பாரதம், பாகவதம், நாடகம், சம்ஹிதை, தமிழ், தமிழ் வைத்தியம் போன்ற பல தலைப்புகளில் பிரிக்கப்பட் வரிசை எண், நூல் தலைப்பு, ஏடு எண்ணிக்கை, முடிவின் தன்மை போன்ற தகவல்களைக் கொண்டுள்ளது. காகிதச் சுவடிகளுக்கு 1807ஆம் ஆண்டு அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வட்டவணையில் நவீன நூல்பட்டி முறையான அகரவரிசை—பொருள் பட்டியல் முறை பயன் படுத்தப்பட்டுள்ளது. சுவடிகளின் தலைப்புகளை முதல் எழுத்து வாரியாகப் பிரித்து பின் பொருள் வாரியாக பட்டியல் தரப்பட்டுள்ளது. இப்பட்டியலில் ஒவ்வொரு நூலும் முழுமைய சிறந்த எண்ணிக்கை போன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுவடிகளுக்கு மட்டுமன்றி அவர் தொகுத்த ஆங்கில நூல்களுக்கும் அகர வரிசைப் பொருள் பட்டியல் முறையில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வட்டவணையில் பொருள் தலைப்பு, பதிப்புவிபிரம், அளவு போன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வட்டவ முன் பக்கத்தில் கீழ்கண்ட விபரம் இருப்பதைக் காணலாம்.

His Highness Raja Serfoji Maharaja's General Catalogue of an extensive valuable collection of books, 1830.

சரபோசியின் பணி பின்னர் வந்த அவரது மகன் சிவாஜி ராஜா காலத்திலும், 18 இல் ஆங்கிலேயராலும் தற்பொழுது நூலக நிர்வாகத்தினராலும் செய்யப்பட்டுள்ளது.

சரபோசி மன்னரால் வளர்க்கப்பட்ட இந்நூலகம் உலகிலுள்ள முக்கிய சுவடி நூலகமாகத் திகழ்கிறது. 188●இல் இந்நூலக வடமொழிச் சுவடிகளை அட்டவணை செய் டாக்டர் ஏ.சி.பர்னல் அவர்கள் இந்நூலகத்தை "உலகிலேயே மிகப் பெரிய, மிக முக்கியத்துவம் கொண்ட நூலகம்" என்று குறிப்பிடுகிறார். பிற்காலத்தில் இந்நூலகத்தைப் பார்வையிட்ட டாக்டர் பூலர் என்னும் மேனாட்டு வடமொழி அறிஞர், இந்நூலகச்

சுவடிகளையும் நூல்களையும் பார்த்து, " மிகவும் பயன் தருபவையும் எங்கும் கிடைப்ப அரியதுமானதும் மிகச் சிறந்ததும் விலை மதிக்க முடியாததுமான ஏட்டுச் சுவடிகள் இந் நூலகத்தில் உள்ளன" என குறிப்பிட்டுள்ளார். மேல் நாட்டவர் போற்றும்அளவிற்கு உயர்ந்து நிற்கும் இந்நூலகத்தின் புகழுக்குக் காரணமானவர் சரபோசி ராஜா ஆவார். இயற்கையின் சீற்றங்கள், மன்னர்களுக்கிடையே ஏற்படும் போர் போன்ற காரணங்களால் பல நூலகங்கள் அழிவுற்றன. ஆங்கிலேயருடன் ஏற்பட்ட சண்டையால் மைசூர் திப்பு சுல்தா நூலகம் அழிவுக்குள்ளாயிற்று. பல நூல்களை ஆங்கிலேயர்கள் வேறு நூலகங்களுக்கு எடு சென்று விட்டார்கள். மைசூரில் நூலகம் இருந்ததற்கான தகவலை சரபோசி மன்னர் தொகுத்து வைத்துள்ள

A Descriptive Catalogue of the Oriental Library
of the Late
Tippoo Sultan of Mysore
To which are pre fixed
Memoirs of Hyder Ali Khan and His Son
Tippoo Sultan
By
Charles Stewart, Cambridge, 1809-

என்ற நூலிலிருந்து அவர் வந்திருந்த நூல்களைப் பற்றி அறியலாம். இன்று தஞ்சை நகரில் புகழ் பெற்று விளங்கும் சரஸ்வதி மகால் நூலகம் புகழ் பெற்று விளங்குவதற்குக் காரணம் சரபோசி மன்னர். அந்நூலகத்தைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமை.

--

சரபோஜியும் சத்திரங்களும்

பா. ஜெயக்குமார்
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

நாயக்கர் ஆட்சி வீழ்ச்சியுற்றபின் தஞ்சையை ஆட்சி செய்த மராட்டிய வம்சாவழி மன்னர்களின் காலத்தில் மக்கள் நலன் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஏற்படுத்தப் பெற்றதே 'சத்திரம்' எனும் அமைப்பு. சத்திரம் என்பதற்கு அன்னசாலை, தங்குமிடம் அல்லது வழிபோக்கர்கள் ஓய்வு எடுக்குமிடம் என பொதுவாக பொருள் கொள்வோம். ஆனால், மராட்டியர் காலத்தில் குறிப்பாக இரண்டாம் சரபோஜியின் ஆட்சிக்காலத்தில் சத்திரங்களின் பணி எத்தகைய தன்மையினதாகக் காணப்பட்டன என்பதை சுருக்கமாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

மராட்டியர்களின் ஆட்சி 1676 முதல் தொடங்கப் பெற்றாலும் சுமார் 50 ஆண்டுகள் முடிவுற்ற பின்னரே அதாவது வெங்கோஜி (ஏகோஜி) சாகஜி, முதலாம் சரபோஜி ஆகிய மன்னர்களின் ஆட்சிக்காலம் முடிவுற்று துகோஜி எனும் முதலாம் துளஜாவின் ஆட்சிக்காலத்தில்தான் முதன்முதலாக சத்திரம் எனும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். கிடைக்கின்ற ஆவணங்களின் வாயிலாக நமக்கு மிக முக்கியமான சிறந்தனவாக இருபது சத்திரங்களின் பெயர்கள் கிடைக்கின்றன (இணைப்பு). இவ்விருபது சத்திரங்களின் நிர்வாகக் குறிப்புகளே அதிகமாக, தொடர்ச்சியாக மோடி ஆவணங்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் மிகவும் பழமையானதாகக் கருதப்படுவது முதலாம் துளஜா மன்னரால் அவர்தம் மனைவியின் பெயரால் தஞ்சைக்கு அருகில் சூரக்கோட்டையில் அமைக்கப் பெற்ற இராசகுமாராபாயி சத்திரம் ஆகும். இச்சத்திரத்திற்கும் முன்னரே ஏனைய சத்திரங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் முதலாம் துளஜாவிற்குப் பின்பு மன்னர்களாக இருந்த பிரதாபசிங், இரண்டாம் துளஜா, இரண்டாம் சரபோஜி மற்றும் சிவாஜி ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் உருவாக்கப்பட்டவைகளாகும்.

முதலாம் துளஜாவிற்குப் பின்பு மன்னர்களான இரண்டாம் ஏகோஜி (1735-1737), சுஜானாபாய் (1737-1738), இரண்டாம் சாகஜி(1738), காட்டுராஜா (1738) போன்றவர்களின் ஆட்சிக்காலம் மிகக் குறுகியவையாக இருந்தமையாலும், 1773-முதல் 1776 வரை நவாபுகளின்கீழ் தஞ்சை இருந்ததாலும்,

இரண்டாம் துளஜாவிற்குப் பின்பு வந்த அமரசிங் (1787–1798) பத்து ஆண்டுகளுக்கும் மேலான ஆட்சி அமைதியற்றதாக இருந்தாலும் இக்கால கட்டங்களில் சத்திரம் தொடர்பான சிறப்புச் செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை என்பதும் இங்கு சுட்டத்தக்கதாகும். 1798-இல் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த இரண்டாம் சரபோஜியின் ஆட்சிக்காலத்தில் சத்திரங்களின் செயல்பாடுகள் மிக உன்னத நிலையில் இருந்தது எனின் அது மிகையாகாது.

மராட்டியர் கால மோடி ஆவணங்கள் பல சத்திரங்களின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாக முறைகளை நமக்குக் காட்டினாலும் அவைகள் எல்லாவற்றையும் இக்கட்டுரையில் விளக்குவதைக் காட்டிலும் மராட்டிய அரசர்களில் மிகச்சிறந்தவராகக் கருதப்படுபவரும், 1798-இல் மன்னராகப் பொறுப்பேற்று ஆட்சி எனும் சுமையை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்து தனது காலம் முழுவதும் இலக்கியம், கலை, கல்வி போன்ற பணிகளில் தன்னை முழுமையாக உட்படுத்திக் கொண்ட இரண்டாம் சரபோஜியினால் அமைக்கப்பெற்ற முத்தம்மாள்புரம் சத்திரத்தை மராட்டியர்கால சத்திரங்கள் அமைப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாக இங்கு விளக்குவது சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் முத்தம்மாள் சத்திரம் அமைந்துள்ளது. மராட்டிய சத்திரங்களிலேயே மிகப் பெரியதும், சிறப்புமிக்கதுமாகக் கருதப்படும் இச்சத்திரம் 1801–1802 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் சரபோஜி மன்னரால் அமைக்கப்பட்டது. முத்தம்மாள் எனத் தமிழ்க் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ள இப்பெயர் மராத்தி, மோடி ஆவணங்களில் 'முக்தாம்பாள்' எனக் காணப்படுகிறது. மராட்டியர் கால சத்திரங்கள் அனைத்தும் பொதுவாக மன்னர்களின் மனைவிகள் (அரசிகள்) பெயராலேயே அமைக்கப்பட்டது. ஆனால் இச்சத்திரம் மட்டுமே மன்னர்தம் மனம் கவர்ந்த முத்தம்மாள் எனும் பெண்ணின் பெயரால் அமைக்கப்பட்டது என்பது இங்கு சுட்டத்தக்கதாகும். இப்பெண்ணின்பால் மிக்க அன்புடைய மன்னன் இப்பெண் இறந்தவுடன் அப்பெண்ணின் ஆசையை நிறைவேற்ற அவள் பெயரில் சத்திரம் அமைத்து அதன்வழி மக்களுக்குப் பல தருமங்களைச் செய்தார் என்பதை தஞ்சை பெரியகோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் காணப்படுகிறது. இப்பெண்ணின் ஓவியம் தஞ்சை அரண்மனையிலும் முத்தம்மாள் சத்திரத்திலும் காணப்படுகிறது. மேலும், தஞ்சை மராட்டிய அரச குடும்பத்தினர்

அனைவரும் தங்கள் வழிபடு கடவுளருள் ஒருவராகவே முத்தம்மாள் அவர்களை இன்றும் வழிபட்டு வருகின்றனர்.

சத்திரங்கள் நல்ல நிலையில் செயல்படுவதற்கு தேவையான வருவாய் கிடைக்கும் வகையில் சத்திரங்களுக்கு நிலங்கள், கிராமங்கள் மானியமாக அளிக்கப்பட்டன. முத்தம்மாள் சத்திரம் நன்றாக நடைபெற சரபோஜி மன்னர் 8.10.1805-இல் ஆங்கில அரசு அனுமதியுடன் ஒரத்தநாடு பகுதியில் இருந்த தென்னமநாடு, புதூர், கண்ணந்தாங்குடி, வன்னிப்பட்டு ஆகிய நான்கு கிராமங்களைய புதூர், மேலையூர், நெய்வாசல், தென்பாதி, உமையாள்புரம், குறாங்சேரி, நத்தமுடையான்சேரி, அளகுமலை, நாடியம்மாள்புரம், பட்டுக்கோட்டை, ரங்கோசியப்பா தோட்டம், மகராசா சமுத்திரம் ஆகிய இடங்களில் உள்ள சில நிலங்களையும் கொடையாக அளித்தார். முத்தாம்பாள் சத்திரம் நல்ல வருவாய் உடையது ஆகையால் சத்திரத்திற்குரிய சேமிப்புத் தொகையிலிருந்து பெருந்தொகையை சர்க்கார் கடனாகப் பெற்றது என்றும், அவ்வாறு பெற்ற தொகைக்கு வட்டி ஒரு மாதத்திற்கு சக்கரம் 600 என்றும் ஓர் ஆவணம் காட்டுவதிலிருந்து முத்தம்மாள் சத்திரம் அரசுக்கே கடன்கொடுக்கும் அளவிற்கு வருவாய் ஈட்டக்கூடிய அமைப்பாக விளங்கியதைக் காணமுடிகின்றது.

தமது ஆட்சியில் தஞ்சை மக்கள் அனைவரும் கல்விக்கண் பெறவேண்டும் என்ற சிந்தனையை சரபோஜி மன்னன் கொண்டிருந்ததால் அதற்கேற்ற வகையில் கல்விக்கூடங்களையும் அமைத்தார். ஏழைஎளிய மாணவர்கள் பொருளாதார இடர்பாட்டினால் கல்வி பயில இயலாமையை உணர்ந்த மன்னன் சத்திரம் வாயிலாக நூற்றுக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வியை தரம்பட அளித்ததுடன் அவர்களுக்கு இலவச இருப்பிடம், உணவு மற்றும் பிற இன்றியமையாத வசதிகளையும் அளித்துள்ளமை சிறப்புச் செயலாகும்.

முத்தம்மாள் சத்திர நிர்வாகத்தின்கீழ் ஐந்து பள்ளிக்கூடங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 641 மாணவர்கள் பயின்றனர். மாணவர்கள் நீங்கலாக பிறர் 4020 பேர் இருந்தனர். அனைவருக்கும் இலவச வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. 1825-ஆம் ஆண்டு ஆவணம் உமையாள்புரத்திலிருந்து இச்சத்திர பயன்பாட்டிற்காக 13 ஆயிரத்திற்கும் மேலான கலம் நெல் வந்து

சேர்ந்ததையும், இங்கு பணியாற்றும் பணியாளர்களின் மாத ஊதியச் செலவு மட்டும் ரூ.9000/- என்று குறிப்பிடுவதிலிருந்தும் இச்சத்திரம் எவ்வளவு பெரிய அமைப்பாக செயல்பட்டது என்பதை அறிய முடிகிறது.

சொக்கலிங்கம் எனும் மாணவன் திருநெல்வேலியிலிருந்து வந்து முத்தம்மாள்புரம் சத்திரப்பள்ளியில் தங்கியிருந்து ஆங்கிலக்கல்வி கற்றதையும் விடுமுறையில் சொந்த ஊருக்குச் செல்லும்பொழுது ரூ.10 பயணப்படி வழங்கப்பட்டதையும் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இதன்மூலம், முத்தாம்மாள்புரம் சத்திரப்பள்ளி ஆங்கிலக்கல்விக்கு சிறந்த இடமாக விளங்கியதையும், வெகு தொலைவிலிருந்துங்கூட மாணவர்கள் இங்குவந்து கல்வி கற்றதையும் அறியமுடிகின்றது. ஆங்கிலக்கல்வி சரபோஜியின் காலத்தில் அதிகமாக ஊக்குவிக்கப்பட்டு வளர்ந்ததற்கு சரபோஜி ஆங்கிலேயர்களுடன் நட்பு கொண்டிருந்தது மட்டுமல்லாது அவருக்கு நெருங்கிய நண்பராக கருதப்பட்டு தஞ்சையில் தங்கியிருந்த கிறித்தவ பாதிரியார் ஃபிரடரிக் ஸ்வார்ட்ஸ் என்பவரின் வழிகாட்டலாகவே இருக்க வேண்டும் என்பதை சரபோஜியின் வரலாற்றைப் படிக்கும் ஒவ்வொருவரும் எளிதாக உணரக்கூடியதாகும்.

இச்சத்திரத்தின்கீழ் தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் தனியாக இருந்தன. வேதம் முக்கிய பாடமாகக் கற்பிக்கப்பட்டது. இதற்கான தனி ஆசிரியர்களும் இருந்ததையும் ஆவணங்கள் சுட்டுகின்றன. இச்சத்திரத்தின் கல்விநிலையங்களில் பாடம் சொல்லித்தருவதற்கு அப்பள்ளிகளில் இல்லாத தேவையான புத்தகங்களை தஞ்சை சரசுவதி பண்டாரத்தில் (சரசுவதிமகால் நூலகம்) இருந்து எடுத்துச் சென்று பயன்படுத்தப்படுவது வழக்கமாக இருந்ததை 1814-ஆம் ஆண்டு ஆவணம் சுட்டுகிறது. இதிலிருந்து சரசுவதிமகால் நூலகம் அப்பொழுதே மிகச் சிறப்பாக கல்விக்காகப் பயன்படுத்தப்பட்டதைப் பார்க்க முடிகிறது.

சத்திரத்தில் தங்கியிருப்பவர்களுக்கு அங்கேயே மருத்துவ வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. வழிப்போக்கர்கள் எவராவது நோயுற நேர்ந்தால் அவருக்குச் சத்திரத்தின் மருத்துவரைக் கொண்டு சிகிச்சை அளித்து, பத்தியம் போன்ற கட்டுப்பாடுகளைச் செய்து நோய் குணமாகும் வரையில் சத்திரத்தில் வைத்து அனுப்புவது என்ற செய்திகளும் கிடைக்கின்றன.

முத்தம்மாள்புரம் சத்திரத்தில் குழந்தைகளுக்கும் தனியாக பள்ளி இருந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. குழந்தைகள் சத்திரத்தில் தங்கும் வசதியுடன்

கல்வி கற்றதை நோக்கும்பொழுது இக்குழந்தைகள் அனாதைக் குழந்தைகளாக இருக்க வேண்டும். இதுபோன்ற குழந்தைகளுக்கான மற்றும் ஓர் பள்ளி தஞ்சாவூரில் சரபோஜி மற்றும் சிவாஜி ஆட்சிக்காலங்களில் சிறப்பாக செயல்பட்டு வந்தது. இச்சத்திரம் மராட்டிய மன்னர்களின் கடவுளரின் பெயரால் 'சிரேயஸ்' சத்திரம் என அழைக்கப்பட்டது.

கல்வியை முக்கியப் பணியாகக் கொண்டிருந்த சரபோஜி மன்னர் கால சத்திரங்கள் பிற மக்கள் நலப் பணிகளையும் செயல்படுத்தி வந்தது. இவைகளில் முக்கியமானவை ஏழைகளுக்கு திருமணம் செய்து வைத்தல், ஏழ்மையான குடும்பத்தில் தந்தை இறந்தால் இறுதிசடங்கிற்கு தேவையானவற்றை செய்தல் போன்றவையாகும். இவையன்றி, சத்திரம் இருக்கும் பகுதிகளில் இருந்த கோயில்களை நிர்வகிப்பது, அனைத்து இந்து பண்டிகைகளையும் சிறப்பாகக் கொண்டாடுவது போன்றவற்றையும் சத்திரமே செய்து வந்தது. சத்திரம் ஆற்றிய பணிகளில் மற்றொரு முக்கியப் பணியாகக் கருதப்படுவது சத்திரத்திற்கு வரமுடியாமல் இருப்பவர்களுக்கு தெருக்கள் தோறும் சென்று உணவளிப்பதாகும். போக்குவரத்து வசதியற்ற அக்காலத்தில் மக்களின் நெடுந்தொலைவுப் பயணங்களை சத்திரங்களே மிகவும் எளிதாக்கியது. பயணங்களின்பொழுது ஏற்படும் இடர்பாடுகளை ; களையும்வண்ணம் முக்கியச் சாலைகளிலேயே சத்திரங்கள் அமைக்கப்பட்டிருந்ததை காணமுடிகின்றது.

சத்திரம் தருமத்தினடிப்படையில் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பது குறித்து விதிமுறைகளடங்கிய ஆணை ஒன்று சேனாமுகவர்ய நீலகண்டராவ் ஆனந்தராவ் ஜாதவ் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள குறிப்பும் ஆவணங்களில் கிடைக்கின்றன. இதன்படி கதியற்றவன், உழைக்கச் சக்தியற்றவன், பரதேசி, வழிப்போக்கன், குருடன், முடவன், உடல்ஊனமுற்றவன், கிழவன், அனாதைக் குழந்தைகள் ஆகியோர்களுக்கு சத்திரத்தில் இலவச உணவு, உறைவிடம் வழங்கலாம். இவர்கள் அல்லாமல் அரசாங்க அதிகாரிகள் அல்லது ஆங்கிலேய அலுவலர்கள், பெரிய அதிகாரிகள், அந்தணர், பெரியோர் ஆகியோர்களுக்கும் வழங்கலாம். இதில் முதல் தரம், இரண்டாம் தரம் எனவும் உண்டு. சத்திரத்தின் பணியாளர்கள், வேறு எவர் ஒருவரும் சத்திரத்தில் சாப்பிடுவதோ அல்லது சத்திரத்திலிருந்து பொருள்களை எடுத்துச் செல்லவோ கூடாது. அப்படி ஏதாவது தவறு நடந்ததாகத் தெரிந்தால் அது தண்டிக்க வேண்டியது என்ற குறிப்பும் காணப்படுகிறது. மேலும்,

இவ்வாணையில் மிகக் கண்டிப்பாகக் குறிப்பிடப்படுவது உழைப்பதற்கு சக்தி இருந்தும் சோம்பேறிகளாக இருப்பவர் எவருக்கும் எவ்விதத்திலும் சத்திரத்தில் இடம் கொடுக்கக்கூடாது என்பதாகும். சத்திரத்தின் வருவாயிலிருந்து அவசியமான செலவு செய்ய வேண்டும்; மராமத்து முதலியவற்றுக்காகவும், ஓர் ஆண்டு வருமானம் குறைந்தால் ஈடுகட்டுவதற்காகவும் ஆண்டு வருமானத்தில் கால் பங்கு மீதி வைத்துக் கொள்ள வேண்டும். கால் பங்கு மீதம் வைத்துக்கொள்ள முடியவில்லையென்றால் சிறிதாவது சேமிக்க வேண்டும் என்ற குறிப்பும் காணப்படுகிறது. சத்திரத்தில் தங்கியுள்ள மாணவர்கள் மற்றும் பிறருக்கு பயன்படுத்தப்படும் பொருள்கள் ஒவ்வொன்றிலும் எவ்வளவு ஒருநாளைக்கு செலவிட வேண்டும் என்னும் அளவும் குறிப்பில் உள்ளது.

இச்சத்திரங்களில்தான் உயர் அரசு அலுவலர்களும் ஆங்கிலேய அதிகாரிகளும் குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வரும் அரசு விருந்தினர்களும் தங்கினர். இலங்கையிலிருந்து வருகைபுரிந்த ஆதுரர் தகுதியுடைய ஒருவர் நீடாமங்கலம் சத்திரத்தில் தங்கியிருந்து நாகபட்டினம் செல்ல வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதை அறியமுடிகின்றது. மன்னர்கள் அவரது குடும்பத்தினர் பார்வையிட வரும்பொழுது அவர்கள் தங்குவதற்கும் முத்தம்மாள் சத்திரத்தில் தனியாக தங்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. சமூகத்திற்கும் ஆட்சியாளர்களுக்கும் தொடர்புடைய மையமாக சத்திரங்கள் விளங்கின.

இரண்டாம் துளஜாவின் மனைவி சுலக்ஷணாம்பாள் இறந்ததும் அவர் பெயரிலிருந்த சத்திரம் இரண்டாம் சரபோஜியின் மனைவி அகல்யாபாய்க்கு உரியதாயிற்று என்பதை ஆவணங்கள் காட்டுவதிலிருந்து யார் பெயரால் சத்திரம் அமைக்கப்படுகிறதோ அவர் மேற்பார்வையில் அவரது வாழ்நாள்வரை இருக்கும் என்பதையும் அதற்குப் பிறகு அச்சத்திரம் உயிர்வாழும் மூத்த அரசமாதேவிக்கு செல்லும் எனும் வழக்கமிருந்ததைக் காணமுடிகின்றது. அரசியர் பெயரளவே மேற்பார்வையாளர்களாக இருந்தனர். 'சத்திரம் இலாகா' எனும் தனி துறை நிர்வாகத்தை நடத்தியது. இத்துறையில் கண்காணிப்பாளர், மேலாளர், கணக்காயர், மேற்பார்வையாளர் எனும் முக்கிய அலுவலர்களின் அமைப்பு இருந்தது என்பதையும் இவ்வமைப்பு முத்தம்மாள் சத்திரத்தை நிர்வகித்து வந்ததையும் கல்வெட்டு சுட்டுகிறது. இவையன்றி கமாவிஸ்தர் எனும் அலுவலரும் சுட்டப்படுகிறார்.

சத்திரத்தில் பயன்படுத்தப்படும் அரிசியில் கல், உமி அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டதின் பொருட்டு கவனக்குறைவாக இருந்த சத்திர அலுவலர்கள் அபராதம் கட்டியதையும், சத்திரம் தொடங்கப்பெற்ற 25 வருடங்களுக்குப் பிறகு ஒருமுறை திருடு தடுக்கப்பட்டதையும் குறிப்பிட்டு இனிமேல் எவரும் சத்திர தருமத்திற்கு மாறாக செயல்படக்கூடாது என்றும் சத்திர தர்மம் காக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தப்பட்டதையும் ஆவணங்கள் காட்டுவதிலிருந்து சமுதாயத்தில் சத்திர தருமம் எவ்வளவு உயர்வாக மதிக்கப்பட்டது என்பதை அறிய முடிகின்றது.

மேற்சுட்டியவற்றிலிருந்து சத்திரம் எனும் அமைப்பு 'அன்னதானம்' வழங்குமிடம் எனும் குறுகிய பொருளில் இருந்து விடுபட்டு மராட்டியர் ஆட்சியில் குறிப்பாக இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் சத்திரம் என்பது அரசின் முக்கிய அங்கமாக அக்கால சமுகத்தை இந்த தர்ம மரபின் அடிப்படையில் காப்பதாக இருந்தது என்பதை அறிய முடிகின்றது.

துணைநூற்பட்டியல்

அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்குக் கட்டுரைகள் (உருளச்சு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1983.

இராசு, செ. தஞ்சை மராட்டிய செப்பேடுகள்-50, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1983.

-------- தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.

-------- 'இன்றைய உலகிற்குச் சரபோசி கற்றுத்தரும் பாடம்', சரபோசி மன்னரின் 214-ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கு, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 24.2.1991.

சாமிநாதய்யர், உ.வே. 'தஞ்சை சரபோஜி மன்னர் சரித்திரம்', மன்னர் சரபோஜி பிறந்தநாள் விழா மலர், சரசுவதிமகால் நூலகம், 1989.

சீனிவாசாச்சாரி, வி. போன்சலே வம்ச சரித்திரம், சரசுவதிமகால் நூலகம், (இரண்டாம் பதிப்பு), தஞ்சாவூர், 1980.

சுப்ரமணியன், பா. தஞ்சை மராட்டியர் மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் (3 தொகுதிகள்) த.ப.க. தஞ்சாவூர், 1989.

வேங்கடராமையா, கே.எம். தஞ்சை மராட்டிய மன்னர்கால வரலாறும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

------------------ தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு (மெக்கன்சி சுவடி) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.

வேணுகோபாலன், வ. தஞ்சை மன்னரும் சரசுவதிமகால் நூலகமும், மயில் பதிப்பகம், தஞ்சை, 1979.

Subramanian, K.R. The Maratha Rajas of Tanjore, Madras, 1928.

Tamil Lexicon, University of Madras (reprint), 1982.

இணைப்பு

தஞ்சை மராட்டிய மன்னர்களின் சத்திரங்கள்

வ.எண்	பெயர்	இடம்	அமைக்கப்பட்ட ஆண்டு	தோற்றுவித்த மன்னர்
1.	இராசகுமாராபாயி சத்திரம்	சூரக்கோட்டை	1728	துளஜா-1/ஏக்கோஜி (1728-1736)
2.	சக்வாராம்பாள்புரம் சத்திரம்	அம்மாசத்திரம்	1756	பிரதாபசிங் (1739-1763)
3.	யமுனாம்பாள்புரம் சத்திரம்	நீடாமங்கலம்	1761	" "
4.	திரௌபதாம்பாள்புரம் சத்திரம்	மனமேல்குடி	–	" "
5.	இராஜசாம்பாள்புரம் சத்திரம் பாள்	தாராசுரம்	1772	துளஜா-11 (1763-1773 1776-1787)
6.	இராஜகுமாரம்புரம் சத்திரம்	மீமிசல்	1776	" "
7.	சுலக்சனாம்பாள்புரம் சத்திரம் பாள்	அம்மணிசத்திரம் (வேளங்குளம்)	1784	" "
8.	மோகனாம்புரம் சத்திரம்	இராசாமடம்	1784	" "
9.	இராமேசுவரம் சத்திரம்	இராமேசுவரம்	1784	" "
10.	உமாபாய் சாகேப் சத்திரம்	மகாதேவபட்டணம்	1786	" "
11.	முக்தாம்பாள்/முத்தம்மாள் "	ஒரத்தநாடு	1801	சரபோஜி 1 (1798-1832)
12.	அகல்யாபாயி சத்திரம்	மல்லியம்	–	" "
13.	சிரேயஸ் சத்திரம்	தஞ்சாவூர்	–	" "
14.	சைதாம்பாள்புரம் சத்திரம்	சூரக்கோட்டை	1841	சிவாஜி (1832-1855)
15.	பஞ்சநதமோகனாம்பாள் "	திருவையாறு	–	" "
16.	காசிவிடு	தஞ்சாவூர்	–	–
17.	இலட்சுமிராசபுரம் சத்திரம்	வெண்ணாற்றங்கரை (பள்ளியக்கிரகாரம்)	–	–
18.	நடார்சத்திரம்	தஞ்சாவூர்	–	–
19.	காசாங்குளம் சத்திரம்	பட்டுக்கோட்டை	–	–
20.	சேதுக்கரை சத்திரம்	தனுஷ்கோடி	–	–

மாமன்னர் சரபோசியும் தஞ்சைப் பெரிய கோவிலும்

ம.சீராளன்
சரசுவதிமகால் நூலகம்
தஞ்சாவூர்

முன்னுரை

தஞ்சை என்றவுடன் அனைவரது நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்த சிறப்பது இராசராசேச்சுரம் என்னும் தஞ்சை பெரியகோயிலாகும். இப் பெருவுடையார் ஆலயத்தை முதலாம் இராசராச சோழன் (கி.பி.985-1014) கட்டியுள்ளார். இப் பெருங் கோயிலில் வீற்றிருக்கும் பெருமான் 'பிருகதீசுவரர்' (பெருவுடையார்) என்றும் அம்மையார் 'பிருகந்நாயகி (பெரியநாயகி) என்று வழங்கப்படுபவர்.

இராசராச சோழனுக்குப் பின் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு அதிகமானத் திருப்பணிகளைச் செய்த மன்னர் தஞ்சையை ஆட்சி செய்த மராத்திய மன்னர் இரண்டாம் சரபோசி (கி.பி.1798-1832) என்று கூறினால் மிகையாகாது. காரணம் இம்மன்னர் ஆற்றிய பணிகளைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் இலக்கியங்களும் அக்காலத்தில் தஞ்சை சரசுவதி மகாலில் எழுதி வைக்கப்பட்ட மோடி ஆவணங்களும் பல செய்திகளைக் கூறுகின்றன. தஞ்சையிலே கோயில் கட்டிய இராசராச சோழனுக்குப் பின் கலைமகளுக்குத் தஞ்சை அரண்மனையில் கோயில் கட்டி சரசுவதிமகால் நூலகம் கண்ட மன்னன் கலைவேந்தன் சரபோசி.

சரபோசி மன்னர் கி.பி.1798-ல் 'சத்திரபதி சரபேந்திர பூபாலர்' என்று வழங்கப்பெறும் பட்டமேற்றார். இவர் சமயத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பல சமயப் பணிகளைச் செய்துள்ளார். மாமன்னர் இராசராச சோழனுக்குப் பின் இவரால்தான் பெரிய கோயிலுக்கு கி.பி. 1803-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

விநாயகர் கோயில் கட்டிய திருப்பணி

பெரிய கோயிலின் தென்மேற்கு மூலையில் உள்ள விநாயகர் கோயில் அதிஷ்டானம் முதல் ஸ்தூபி வரையில் புதிதாகக் கருங்கல் வேலை செய்தும், செங்கல் வேலை செய்தும், சுண்ணாம்பால் சுதைவேலை விக்கிரங்கள் செய்தும், வர்ணம் பூசியும், புதிதாக விநாயகர் சிலையைச் செய்தும், கலசம் வைத்துக் கும்பாபிஷேகம் செய்து, அர்த்தமண்டபம், மகாமண்டபம் வெள்ளைக்கல்லால்

கட்டியும் அதற்குமேல் செங்கற்களால் தளவரிசை போட்டும், காரைப்பூசிப் படிகள் அமைத்தும், 150 அடிக்கு வெள்ளைக்கல்லால் தளவரிசை போட்டும், படிகட்டியும் உள்ளார்.

<u>சுப்பிரமணியர் கோயில் திருப்பணி</u>

சுப்பிரமணியசுவாமி கோயிலில் அடிமட்டத்திலிருந்து ஸ்தூபி வரையில் பழுதுபார்த்து செங்கல்லில் சுதைவேலை விக்ரகம் செய்து புதிதாகக் கலசம் வைத்து கும்பாபிஷேகம் செய்து அர்த்தமண்டபம், மகாமண்டபம் வரையில் செங்கல் தளவரிசை போட்டும், சுண்ணாம்பு பூசியும், முன்மண்டபத்தில் 300 கஜத்திற்கு வெள்ளைக்கல் தளவரிசை போட்டும் பணிகள் செய்தார்.

<u>பெரியநாயகி சன்னதி திருப்பணி</u>

பெரியநாயகி சன்னதியில் கர்ப்பக்கிரகத்தின் மேல் மூன்று அந்தஸ்து, அது தவிர அர்த்த மண்டபம், மகாமண்டபம், பைரவ மண்டபம் எதிரில் இருக்கும் நந்தி மண்டபம் ஆக ஏழு மண்டபத்தில் மேல் செங்கல்தள வரிசைப் போட்டு காரை வைத்தும், மகாமண்டபத்தின் சன்னதியில் தெற்கு, வடக்கு இரண்டு பக்கத்திலும் கொறடு பாகத்தில் வெள்ளைக்கல் தளவரிசை 200 கஜத்திற்குப் போட்டார்.

மகாமண்டபத்தின் மேற்கூரையின் உட்புறம் விசும்பசுரனிவதம், நவராத்திரி கதை, மகிஷாசுரமர்தனி வதம் முதலிய சித்திரங்களுக்குக்கீழ் அச்சித்திரங்களை எழுதிய மகாராஷ்டிர ஓவியனைக் கொண்டு பேச்சுவழக்குத் தமிழில் ஒவ்வொரு கதைச் சம்பவங்களைப் பற்றியும் எழுதியுள்ளார்.

<u>நடராஜ மண்டபத் திருப்பணி</u>

நடராஜ சன்னதியில் அர்த்தமண்டபம், மகாமண்டபம் கட்டியும் இரண்டு மண்டபத்தின் மேலும் செங்கல் தளவரிசை போட்டும், சுண்ணாம்பு வேலை செய்தும், சுவர்களுக்குப் பச்சைப்பூசியும் மற்றப் மராமத்து வேலைகள் செய்தும், 200 கஜத்திற்கு கருங்கல் தளவரிசையும் போட்டுள்ளார். இந்த மண்டபத்திற்குப் பின்னால் 16 கம்பங்கள் அடங்கிய ஓர் திருமால் பத்தியைக் கட்டியுள்ளார்.

தட்சிணாமூர்த்தி கோபுர திருப்பணி

தட்சிணாமூர்த்தி கோபுரத்திற்கு அடிமட்டம் முதல் ஸ்தூபி வரையில் மராமத்து வேலை செய்து வர்ணம் பூசிப் படிகள் கட்டியுள்ளார்.

சண்டிகேசுவரர் சன்னதி திருப்பணி

சண்டிகேசுவரர் சுவாமி கர்ப்பகிரகத்திற்கு கீழிருந்து மேல் வரையில் மராமத்து செய்து, விக்ரகம் செய்து, வர்ணம் தீட்டிப் புதிதாகக் கலசம் வைத்து, கும்பாபிஷேகம் செய்து மண்டபத்தின் மீது செங்கல் தளவரிசை செய்து சுண்ணாம்பு பூசினார்.

மன்னர் கொடுத்த நகைகள், மானியங்கள் மற்றும் வாகனங்கள்

இவர் பெரிய கோவிலுக்கு மானியமாகப் பெருமதிப்புள்ள பதக்கம், விலையுயர்ந்த கற்களினால் ஆன நகைகள், வெள்ளிப் பாத்திரம் முதலியவற்றை அளித்துள்ளார். இதுதவிர தங்கமுலாம் பூசிய வெள்ளியால் ஆன முழுக் கவசம் ஒன்றை பிரகந்நாயகிக்கு வழங்கினார். இவை பற்றிய ஜாபிதா மராட்டா கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. பெரிய கோவிலுக்கு மானியமாகத் தரப்பட்ட நிலங்கள் சூரக்கோட்டை, கண்டியூர், சீவங்கிபட்டு, வில்லியநல்லூர், நாகத்தி, ஆலங்குடி, பிரகதீஸ்வரர் தோட்டம் முதலிய இடங்களில் உள்ளன.

சுவாமிக்கு ரிஷப வாகனம், அம்மனுக்கு ரிஷப வாகனம், சுப்பிரமணியர் மயில் வாகனம், விநாயகர் மூஷிக வாகனம், சண்டிகேசுவரர் படிசட்டம் பிரபாவளி, இது தவிர யானை வாகனம், மான் வாகனம், பிரதோஷரிஷப வாகனம் ஆகிய இவை அனைத்து வாகனங்களையும் வெள்ளியால் செய்து அளித்தார். இவர் பல தஞ்சாவூர் கல்வேலை செய்த மர வாகனங்களையும் ஐந்து பெரிய தேர்களையும், மரச்சப்பரங்களையும் கோயில் உபயோகத்திற்கு வழங்கினார். அதுமட்டுமல்லாது முத்தாம்பாள் என்னும் தன் பிரியநாயகிக்கு உரிமையான நகை வகைகளைப் பிருகந்நாயகிக்கு அளித்தார். நந்திக்கு மிளகு மற்றும் பல பொருட்களைக் கொண்டு அபிடேகம் செய்தார். இலட்ச தீபம் ஏற்றி வழிபாடு செய்தார்.

கட்டுமானப் பணிகள்

சரபோசி மன்னர் பதவிக்கு வந்த பிறகு பெரிய கோவிலைச் சுற்றி இருந்த கோட்டை மதிலில் கேரளாந்தகன் வாயிலுக்கு முன்புறம் இருந்த கோட்டை மதிலை உடைத்து ஒரு நுழைவாயிலைக் கட்டினார். இதன் இருபுறமும் சுப்பிரமணியர், விநாயகர் கோயில்களை சிறியதாகக் கட்டினார். இதன்மேல் வளைவு ஏற்படுத்திச் சுதைவேலையில் ரிஷப வாகனத்துடன் கூடிய பார்வதி பரமேசுவரரின் உருவங்களை ஏற்படுத்தினார். இந்த நுழைவாயில் இவர் பெயரால் 'சரபோசி திருவாயில்' என்று அழைக்கப்படுகிறது. இந்த வாயிலுக்கு முன் இருந்த அகழிப்பள்ளத்தை மூடி நிரப்பிக் கோயிலுக்குள் நுழைய பாதையை செப்பனிட்டு அமைத்தார். இந்தக் கோயிலுக்கு முதலில் சரபோசி திருவாயில், அடுத்துக் கேரளாந்தகன் திருவாயில், அதற்கடுத்து ராசராசன் திருவாயில் என வரிசையாய் அமைந்துள்ளன.

போன்ஸ்லே வமிச சரித்திரக் கல்வெட்டு

உலகிலேயே மிகப் பெரிய கல்வெட்டாகத் திகழ்வது தஞ்சை பெரிய கோயிலில் காணப்பெறுவதும் மராட்டிய அரசர்களது வரலாற்றைக் கூறுவதும் ஆகிய மராட்டியமொழிக் கல்வெட்டே என்பது பலர் அறிந்த செய்தியாகும். சரபோசி மன்னர் தம் மரபு வரலாற்றைப் 'போன்ஸ்லே வமிச சரித்திரம்' என்ற பெயரில் மராத்தி மொழியில் கி.பி.1803-இல் எழுதச் செய்து மன்னர் காலத்திலேயே தஞ்சை பெரியகோயிலில் தெற்குச் சுவரில் கல்வெட்டாகப் பொறித்து வைத்தார். இச்சுவடியைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்து கி.பி.1951-ஆம் ஆண்டு சரசுவதி மகால் நூலகம் பதிப்பு செய்துள்ளது. இந்நூலில் ஆங்கிலச் சுருக்கமும் கொடுக்கப் பட்டுள்ளது. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள மெக்கன்சி சுவடித் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு 'தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு' என்ற பெயரில் கே.எம்.வேங்கடராமையா அவர்கள் ஒப்பீட்டாய்வு செய்து வரலாற்றாராய்ச்சிக் குறிப்புக்களுடன் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக வாயிலாகவும் 1987-இல் வெளிவந்துள்ளது.

கோயிலில் நடந்த விழாக்களும் நாடகங்களும்

இத்திருக்கோயிலில் ஆரம்பக் காலத்தில் வைகாசி மாதத்தில் 9 நாட்கள் திருவிழா நடைபெற்று வந்தது. மராத்தியர் ஆட்சிக்காலத்தில் இத்திருவிழா சித்திரை மாதம் திருவாரூரில் நடைபெறும் திருவிழாவைப் போல் தஞ்சைப் பெரிய கோயிலில் 'சைத்திர பிரமோத்சவம்' 18 நாட்களாக விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டாடப்பட்டது.

தஞ்சைப் பெரிய கோயிலில் 'இராசராச நாடகம்' என ஒரு நாடகம் ஆடப்பட்டு வந்ததாக வரலாறு கூறுகின்றது. தஞ்சைத் தரணியாண்ட சரபோசி மன்னரைப் பாட்டுத் தலைவனாகக் கொண்ட 'சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்' கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்னும் புலவரால் இயற்றப் பட்டது. இக்கோயில் அஷ்டக்கொடி விழாவில் சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகமும் ஆடப்பட்டது. ஆதலால் இந்தக் குறவஞ்சி, அஷ்டக்கொடிக் குறவஞ்சி என்றும் அழைக்கப்பட்டது.

பெரியகோவில் தேர்த் திருவிழாவிற்கு கி.பி.1811-இல் 3150 சக்கரம் செலவு செய்யப்பட்டது. இக்கோயிலில் உள்ள நந்தி மிகப் பெரியது என்பது யாவரும் அறிந்ததே. அந் நந்திக்கு அபிஷேகம் மற்றும் பூசை நிவேதனத்துக்கு நாள் ஒன்றுக்கு 3½ சக்கரம் செலவு செய்யப்பட்டது. 1811-இல் நந்திக்கு மழை பெய்வதற்காக அபிஷேகம், பூசை, நிவேதனம் ஜபத்திற்கு ½ மண்டலத்துக்கு நாளொன்றுக்கு 3½ சக்கரம் செலவு செய்யப்பட்டது. பெருவுடையாருக்கு 16 மகாதானங்களில் ஹிரண்யவிருஷப தானம் 1826-இல் செய்யப்பட்டது. அதே ஆண்டு சீர்க்காரிலிருந்து (அரண்மனை) கிராம்பினால் செய்த விசிறி ஒன்று அனுப்பப்பட்டது. இப்படி பல செய்திகளைத் தஞ்சை சரசுவதி மகால் மோடி தமிழாக்கத் தொகுப்புகளில் காணமுடிகிறது.

முடிவுரை

சரபோசி மன்னர் ஒரு சிறந்த சிவபக்தர். சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். சமய வேறுபாடின்றிப் பல திருப்பணிகளைச் செய்தவர். பல்வேறு கலைகளில் நாட்டம் கொண்டு புதுமையைச் செய்து பெரும்புகழ் பெற்ற இம்மன்னர் கல்வெட்டுக்களைப் பொறிப்பதிலும் பல புதுமைகளைச் செய்துள்ளார்.

அதன் மூலம் எல்லா மன்னர்களைக் காட்டிலும் சிறப்புற்று வரலாற்றில் திகழுகின்றார்.

பொதுவாகத் தஞ்சை பெரிய கோயிலில் உள்ள கல்லெல்லாம் கதை சொல்லும்; வடிவெல்லாம் மாமன்னன் சரபோசியின் வரலாறு கூறும் என்பது உண்மையே!

வாழ்க சரபோசியின் புகழ்! வளர்க நாளும் பிறை போல!!

துணை நூல்கள்

1. தஞ்சாவூர் அ/மி. பிரகதீஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர், தஞ்சாவூர், 1980. (கட்டுரை:மாமன்னர் சரபோசியின் சாதனைகளும் சமயப்பணிகளும்-ஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப், சத்திரபதி)
2. தஞ்சபுரி மகாத்மியம்:டி.ஆர்.பீமராவ், தஞ்சாவூர், 1979.
3. தஞ்சை சரசுவதிமகால் நூலகப் பருவ இதழ் தொகுதி 30 பகுதி 1-3, தஞ்சாவூர், 1901.
4. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், கே.எம்.வேங்கடராமையா, தஞ்சாவூர், 1984.
5. பெரிய கோவிலும் தஞ்சாவூரும்:கே.வி.பக்கிரிசாமிப் பிள்ளை, தஞ்சாவூர், 1962.
66. தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு மலர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1983.
7. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்:செ.இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1987.
8. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50 : செ.இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1983.
9. மாமன்னர் சரபோசி (ஆய்வுக்கோவை) தொகுதி 11, தஞ்சாவூர், 1990.
10. மாமன்னர் சரபோசி (ஆய்வுக்கோவை) தொகுதி 111, தஞ்சாவூர், 1990.
11. சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்:டாக்டர் அரங்க சீனிவாசன், சென்னை, 1988.

சரபோஜி மன்னர் காலக் கலை வளர்ச்சி

குடவாயில் பாலசுப்ரமணியன்
சரசுவதிமகால் நூலகம்
தஞ்சாவூர்

அமரசிம்மரின் ஆட்சிக்குப் பிறகு கி.பி.1798 இல் தஞ்சை அரசுகட்டிலில் அமர்ந்தவர் இரண்டாம் சரபோஜி மன்னராவார். இவர் 1832 வரை தஞ்சை அரசராகத் திகழ்ந்தார். இவரது ஆட்சிக்காலமான பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தஞ்சைத் தரணியில் கலைப் பயிர் செழித்துத் தழைத்தது. மன்னின் ஆக்கமும் அவரது மதிநுட்பமும் நுண்கலைகள் பல மலரக் காரணமாய் அமைந்தன. சிற்பம், ஓவியம், நாட்டியம், நாடகம், கட்டடக் கலை, ஆபரணக்கலை போன்றவை அவரது அரவணைப்பால் ஏற்றம் பெற்றன.

சிற்பக்கலை

சிற்பக் களஞ்சியமாகத் திகழும் தஞ்சை இராஜராஜேச்சரத்தைக் காத்த பெருமை சரபோஜி மன்னருக்கு உண்டு. நாயக்க மன்னர்கள் காலத்தில் எடுக்கப் பெற்ற சிறிய கோட்டையின் மதில் மற்றும் கொத்தளங்களால் கேரளாந்தகன் திருக்கோபுரத்திற்கு நேர் கிழக்காக திருவாயிலின்றி இக்கோயில் திகழ்ந்தது. சிவகங்கை வழியாகத்தான் உள்ளே நுழைய முடியும். இத் திருக்கோயிலுக்குக் கிழக்கு வாயில் தேவையான ஒன்று என்பதனை உணர்ந்த மன்னர் திருமதிலில் ஒருபகுதியை அகற்றி எழிலுறு சரபோஜி திருவாயிலை உருவாக்கினார். அதில் ஈசலின் சுதைப் படிமைகளை இடம்பெறச் செய்து அழகுக்கு அழகூட்டச் செய்தார்.

கணபதியார் பரிவாராலயம் எடுத்து அதில் எற்றமுறு கணபதியார் சிற்பம் படைத்தது, முன்னொரு காலத்தில் நந்திபுரத்து ஆயிரத்தளியில் பல்லவப் பேரரசன் அமைத்த ஆயிரம் இலிங்கங்கள் பேணுவாரின்றிக் கிடந்தபோது அவற்றில் 100 இலிங்கங்களைத் தஞ்சைப் பெரியகோயில் திருச்சுற்று மாளிகையில் பிரதிட்டை செய்தது; தஞ்சை நகரில் பல்வேறு புதிய கோயில்கள் எடுத்து எண்ணிலா சிற்பப் படைப்புகளை அங்கு இடம்பெறச் செய்தது ஆகியவை சிற்பக் கலை வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டின் முத்திரைகளாகத் திகழ்கின்றன.

மன்னரின் மைத்துனரும், சர்கேல் பதவி வகித்தவருமான ராமோஜி சர்ஜெராவ் காட்கே என்பார் திருப்பணி செய்த வெண்ணாற்றங்கரை தளிகேஸ்வரர் கோயிலில் திகழும் தெய்வத் திருவுருவங்கள், மன்னர் குடும்பத்தாரின் உருவச்

சிற்பங்கள், நிலைக்காலில் காணப்பெறும் பித்தளைத் தகட்டு வேலைப்பாடுகள் ஆகியவை சரபோஜி மன்னர் காலத்து ஏற்றம்பெற்ற கலைப் படைப்புகள் ஆகும்.

தஞ்சை அரண்மனையில் திகழும் சரபோஜி மன்னரின் சலவைக்கல் சிற்பம், ஸ்வார்ட்ஸ் பாதிரியாரின் உருவம் திகழும் சிவகங்கைத் தேவாலயச் சலவைக்கற் சிற்பம் ஆகியவை மன்னரின் ஆக்கத்தால் ஜான் ப்ளாக்சுமேன் என்பவரால் செதுக்கப் பெற்றவையாகும்.

ஓவியக்கலை

சரபோஜி மன்னர் வளர்த்த கலைகளுள் தலையாய இடம்பெற்றுத் திகழ்ந்த கலை ஓவியக்கலையேயாகும். தஞ்சைப் பெருங்கோயிலும், சரசுவதி நூலகமும் அக்கலை வளர்த்த கேந்திரங்களாகத் திகழ்ந்தன. பெருவுடையார் கோயிலின் அம்மன் மண்டபத்து விதானம் முழுவதும் வண்ணப்பொலிவு பெற்றது. இம்மன்னரின் ஓவியர்களின் தூரிகைகளால் புராணங்கள் காட்சி இடம்பெற்றன. தேவிமகாத்மியம், தெய்வத் திருமணக் காட்சிகள், ஊர்த்துவத் தாண்டவம், ஆட வல்லான் மீது கோபம் கொண்ட சிவகாமியின் ஊடலைச் சுந்தரர் தீர்க்கும் காட்சி போன்றவை தமிழில் எழுதப்பெற்ற விளக்கக் குறிப்புகளோடு இடம் பெற்றுள்ளன.

சரஸ்வதி நூலகத்தில் சேகரிக்கப் பெற்றிருந்த பல ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளைக் காகிதச் சுவடிகளில் படி எடுத்துக் காப்பாற்றும் பெரும் பணியை மேற்கொண்ட மன்னர் அவர்கள் தனது அரண்மனை ஓவியர்களைக் கொண்டு புராண—இதிகாசக் காட்சிகளையும், புலவர்கள் மற்றும் மன்னர்களின் உருவங்களை அத்தகைய காகிதச் சுவடிகளில் வண்ண ஓவியங்களாகத் தீட்டச் செய்துள்ளார். கஜசாத்திரம், அசுவசாத்திரம் போன்றவைகளையும் வண்ண ஓவியங்களோடு இணைத்து ஏற்றமுறு நூல்களாக மிளிரச் செய்தார்.

முப்பரிமாண அமைப்பில் பலகை ஓவியங்கள் மிகப் பெரிய அளவில் மனித உருவங்கள் தீட்டப்பெற்ற கான்வாசு ஓவியங்கள், தந்தம், மைக்கா, கண்ணாடி போன்றவற்றில் தீட்டப்பெறும் ஓவியங்கள், சுவரோவியங்கள், சுவடி ஓவியங்கள் எனப் பல்வேறு வகையான வண்ணப் படைப்புக்களை பாங்ுற வளரச் செய்தார்.

மன்னரின் ஆஸ்தான ஓவியர்களாக வேங்கடப்பெருமாள், வேங்கட நாரணப்பய்யா, சின்னசாமி நாயக்கன், சாரங்கபாணி, முத்துக்கிருஷ்ணன், கோவிந்தசாமி, கிருஷ்ணா என்பவர்களும், செங்கம்மாள் என்ற பெண்மணியும் பணிபுரிந்தனர் என்பது மன்னர்கால அரண்மனை ஆவணங்கள் மூலம் அறிய இயலுகின்றது.

சரபோஜி மன்னரின் கலை ஆக்கத்தால் தஞ்சை மண்ணுக்கே உரிய பழமையான ஓவிய மரபோடு தக்காண ஓவியம், முகலாய ஓவியம், விஜயநகரப் பாணி ஓவியம் எனப் பல்வேறு கூறுகள் கலந்த புதிய 'தஞ்சைப்பாணி' ஓவியங்கள் என்ற ஓர் ஓவிய மரபு உதித்தது. இவ்வகை ஓவியங்களில் மேலைநாட்டு மரபுக் கூறுகளும், வண்ணங்களும் இணைந்தன.

நாட்டியம்-நாடகம்

தஞ்சையில் உறிந்துஸ்தானி நாட்டியமும், பரதநாட்டியமும் வளர சரபோஜி மன்னர் முனைந்து செயல்பட்டார். பரதநாட்டியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அவர் மராத்திய மொழியில் கணேசலீலார்ணவம், கணேச விஜயம், ஸ்ரீசிவராத்திரி உபாத்தியானம், ஸ்ரீ மீனாட்சி கல்யாணம், மோகினி மகேசுவர பரிணயம், தேவேந்திர குறவஞ்சி, ராதாகிருஷ்ண விலாசம் ஆகிய நாட்டிய நாடகங்களை எழுதியுள்ளார். நாட்டியத்தில் சிறந்த ஈடுபாடு கொண்டு பல நிருபணங்களை யாத்துள்ளார். 'கோர்வியாசே சாஉறித்யாசே ஜினஸ' என் அவருடைய மராத்திய நூலில் இந்நிருபணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்நூலில் இப் பாடல்களும் இவற்றின் இசையமைப்புகளும் நாட்டியத்துக்கேற்பச் சொற்-கட்டுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. பாடல்கள் மராத்திய மொழியில் உள்ளன. ஆனால் தமிழ்க் கருநாடக மரபில் இசையமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிருபணமும் பதினேழு அல்லது பதினெட்டு உருப்படிகளைக் கொண்டது. இந்த நிருபணத்திலுள்ள பதினெட்டு உருப்படிகளும் ஒரே இராகத்தில் ஒரே தாளத்தில் அமைக்கப்பட்டுள்ளமை தனிச்சிறப்பாகும். தமிழ் மரபை மராத்திய மொழியில் உருவாக்கிய பெருமை இம்மன்னருக்கு உண்டு. மராட்டியர் மரபுக்கும், சோழர் மரபுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திச் சிறப்புச் செய்த மன்னர் இவர்.

சரபோசியின் நிருபணங்கள் தோடையமங்களத்தில் தொடங்குகின்றன. 'ஜெயஜெய' அல்லது 'ஸ்துதி' என்ற பெயருடன் ஆரம்பங்களும் தொடங்குகிறது.

அடுத்து 'சரணு சரணு' என்ற கதி பாடப்படுகிறது. அலாரிப்பு என்பது 'அலாரு' என்ற மூன்றாவது உருப்படியாகக் கொள்ளப்படுகிறது. நான்காவதாக சொல்லுக்கட்டு (ஜதிஸ்வரம்) 'சொல்லு' எனப்படுகிறது. 'சப்தம்' ஐந்தாவதாகவும், 'வர்ணம்' ஆறாவதாகவும், 'பதம்' ஏழாவதாகவும், 'ஸ்வரஜதி' என்பது எட்டாவதாகவும் இதில் இடம்பெறுகின்றன. 'அபிநயம்' ஒன்பதாவதாகவும், 'தில்லானா' பத்தாவதாகவும், 'அபிநய பதம்' பதினொன்றாவதாகவும், 'ஜக்கினி' பன்னிரண்டாவதாகவும், 'கீதம்' பதிமூன்றாவதாகவும், 'பிரபந்தம்' பதினான்காவதாகவும், 'த்ரிபுடம்' பதினைந்தாவதாகவும், 'ஸ்லோகவர்ணம்' பதினாறாவதாகவும், 'கௌத்தம்' பதினேழாவதாகவும், 'மங்களம்' பதினெட்டாவதாகவும் இவ்வாறு பதினெட்டு உருப்படிகள் கொண்ட புதிய பாணியைப் படைத்தார்.

பாகவத மேளம் எனும் இசை நாட்டிய நாடக மரபு புதிய உத்வேகத்தோடு வளரத் துணைநின்றார். 'மோகினி மகேச பரிணயம்' எனும் இசை நாட்டிய நாடக நூலை யாத்த சரபோஜி மன்னர் அதனைத் தஞ்சைப் பெரிய கோயிலில் அரங்கேறுமாறும் செய்தார். சரபேந்திர பூபாலக்குறவஞ்சி போன்ற நாடகங்களும் இவரது நல்கையால் உதித்தவையே ஆகும்.

கட்டடக்கலை

தமிழக கட்டடக்கலை மரபை வெளிக்காட்டும் வண்ணம் தஞ்சைக் கோயிலில் விநாயகர் ஆலயம் போன்ற கோயில்கள் பலவற்றை கட்டுவித்த சரபோஜி மன்னர், விஜயநகர, நாயக்க, மொகலாயர் தம் கலைப்பாணியை வெளிக்காட்டும் வண்ணம் அரண்மனையில் சில பகுதிகளை கட்டுவித்தார். மேலை நாட்டுக் கட்டடக்கலையும், இந்திய கட்டடக்கலையும் சங்கமிக்கும் வகையில் சர்ஜாமாடி எனும் ஐந்தடுக்கு மாளிகை ஒன்றினை அரண்மனை வளாகத்திலே படைத்தார். சரபேந்திரராஜன் பட்டினத்தில் உள்ள மனோரா எனும் கட்டட அமைப்பு சரபோஜி மன்னரின் ஆற்றலை என்றென்றும் காட்டி நிற்கும் சின்னமாகும்.

ஆபரணக்கலை

அழகிய முத்தாரங்களையும் கலைநயம் மிகுந்த அணிகலன்களையும்

அலங்காரமாகப் புனைவம் மன்னர் சரபோஜியின் காலத்தில் ஆபரணக்கலை மிகவும் ஏற்றம் பெற்று வளர்ந்தது. தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டில் இம் மன்னர் அளித்த அணிகலன்களின் பட்டியல் காணப்பெறுகின்றது. அப்பட்டியலையும் அவர் காலத்து ஓவியங்கள், சிற்பங்கள், செப்புத் திருமேனிகள் ஆகியவற்றில் காணப்பெறும் அணிகலன்களையும் தொகுத்து நோக்கும்போது அக்கலை பெற்ற ஏற்றத்தினை நாம் உணர்தல் கூடும்.

இவ்வாறு பல்வேறு கலைத்துறைகளையும் தன்னோடு இணைத்துக் கொண்டு அருந்தொண்டாற்றி சாதனை படைத்த சரபோஜி மன்னரின் பெயர் தமிழகக்கலை வரலாற்றில் என்றென்றும் நிலைபெற்று நிற்கும் என்பதில் ஐயமில்லை.

வைரப் பதக்கத்தைவிடச் சுவடி உயர்ந்தது!

ஒருமுறை அயல் நாட்டிலிருந்து சில விசேடச் சுவடிகள் விலைக்கு வந்தன. அவை மிகவும் அரியவை. சரபோசி கையில் பணமில்லை; தன்னுடைய விலை உயர்ந்த பதக்கத்தைக் கொடுத்து அச்சுவடிகளை வாங்கினார். சுவடிகள் பதக்கத்தைவிட விலை உயர்ந்தவை என்று சரபோசி கருதினார்.

தகவல்: அமரர் எஸ். கோபாலன்

சரபோசி காலக் கட்டடக்கலை

டாக்டர் இராசா பவுன்துரை
இணைப் பேராசிரியர்
கட்டிடக்கலைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 005

தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஆட்சியின்போது தஞ்சைப் பகுதியில் இசை, நடனம், நாடகம், சிற்பம், கட்டடக்கலை முதலான கலைகள் வளர்ச்சியுற்றன. இரண்டாம் சரபோசி மன்னர் காலத்தில் ஐரோப்பியர்களின் வருகையாலும் ஆங்கிலக் கம்பெனியரின் தொடர்பாலும் நகரமைப்பு, கிராம அமைப்பு, கட்டட அமைப்பு முறைகளில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இரண்டாம் ஏகோசி, இரண்டாம் சரபோசி மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் புதிய புதிய கட்டடங்கள் தோன்றின. இவர்களது ஆட்சிக்காலம் கட்டடக்கலையின் மறுமலர்ச்சிக் காலம் ஆகும்.

மராட்டியர்களின் கலைத்திறன், செல்வச் சிறப்பைத் தஞ்சை அரண்மனை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றது. பன்னிரெண்டு மகால்களும் பதினெட்டுக் கானாக்களும் மராட்டியர் அரண்மனையில் இருந்ததாக மோடி ஆவணங்கள் கூறுகின்றன.

ஆயுதசாலை (ஜிராத் கானா), யானை கட்டுமிடம் (உறத்தி கானா), வெடிமருந்து வைக்குமிடம் (தாரு கானா), சாராயம் (சராப்கானா), குளிர்பானம் (சர்பத்கானா) வழங்குமிடங்கள் அரண்மனையில் அகத்தே இருந்துள்ளன இதுபோன்றே உடற்பயிற்சி, மல்யுத்தம், பீரங்கிப் பிரிவு, மருத்துவமனை, நெற்கிடங்கு, ஆவணக்காப்பகமெனப் பல்வேறு கட்டடப் பகுதிகள் இந்த அரண்மனையில் இருந்துள்ளன. ஆனால் அவற்றில் பல அழிவுற்றும் சிதைந்தும் போய்விட்டன.

கஜானா, குதிரைலாயம், மாட்டுப்பண்ணை, பல்லக்குக் கூடம், மராமத்துப் பிரிவு, தங்கச்சாலை, நெற்களஞ்சியம் போன்ற கட்டடப் பிரிவுகள் 'மகால்' என்னும் பெயரில் அழைக்கப்பட்டுள்ளன.

சரபோசி மன்னர் காசி யாத்திரைக்குப் பிறகு தஞ்சை அரண்மனைப் பகுதியில் ஐந்து அடுக்கு மாடிக்கட்டடத்தைக் கட்டினார். இக்கட்டடத்திலுள்ள சாளரங்கள் (Bay windows)) அணி அலங்காரம் செய்யப்பட்டவை. இவற்றின்

வழியே அரசியரும் மன்னரும் ஊர்வலங்களைக் காண்பர். இக்கட்டடம் இந்து, மொகலாயர், ஆங்கிலேயர் கட்டடக்கலையின் கூட்டு வடிவமாகத் தோன்றுகின்றது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் இக்கட்டடம் இன்றும் திகழ்கின்றது.

மராட்டி தர்பார் உறால் என்னும் கட்டடம் பெரிய தூண்களால் கட்டப்பட்டுள்ளது. தூண்கள் அலங்காரம் செய்யப்பட்டும் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டும் உள்ளன.

அரண்மனையின் அந்தப்புரத்தின் அருகே நீச்சல் குளம் அமைத்துள்ளனர். இருட்டு மகால் என்ற பகுதி பூமியின் கீழ்ப்பகுதியில் கட்டப்பட்ட பகுதி 'கிருஷ்ண விலாசம்' என்றும் அழைக்கப்படுகின்றது. இக்கட்டடத்தில் நேராகச் செல்லும் பாதையின் இருபுறங்களிலும் இரண்டு சிறிய நடைபாதைகள் செல்லும். புதியவர்கள் இதன் உள்ளே வந்தால் பாதை மாறிச் செல்ல நேரிடும். எதிரிகளை எளிதில் தாக்கி அழித்துவிட முடியும். அத்தகு பாதுகாப்பு நுணுக்கத்துடன் கிருஷ்ண-விலாசம் கட்டப்பட்டுள்ளது.

தஞ்சை மராட்டியர்களின் ஆட்சிக் காலத்தின்போது தஞ்சாவூருக்கு வெளியே பிற இடங்களிலும் அரண்மனைகள் கட்டப்பட்டன. சரபோசி மன்னர் காலத்தில் கட்டப்பெற்ற திருவையாறு திவான் வாடா, தேவனாம்பட்டணம் அரண்மனை, அறந்தாங்கிக் கோட்டை, மனோரா கட்டடங்கள் இவர்களது கட்டடக்கலையின் ஆர்வத்தைக் காட்டுகின்றன. காவேரிக் கரை ஓரத்தில் யாளி வடிவ முகப்புத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ள திவான்வாடா தஞ்சைப் பகுதியின் தனித்துவமிக்க கலைப் படைப்பாகும். இதில் கட்டடக்கலையுடன் சிற்பக்கலை இணைந்து புதியதொரு கலைவடிவம் பெறுவதைக் காண முடிகின்றது.

இரண்டாம் சரபோசியின் குடும்பத்தவர் தங்குவதற்காகக் கட்டப்பட்ட மாளிகை 'கல்யாண மகால்' என்றழைக்கப்பட்டது. இது கி.பி.1824-இல் கட்டப்பட்டு இதில் 23 பேர் அரசு மரியாதையுடன் வாழ்ந்து வந்துள்ளனர். இக் கட்டடத்தின் ஒரு பகுதியில் அச்சுக்கூடமும் நாணய வாரியமும் இருந்துள்ளன. திருவையாறு காவேரிக் கரையில் படித்துறையுடன் உயர்ந்த பல அடுக்குகளையும் மூன்று முகப்புப் பிசக்கத் தோற்றத்துடனும் நிமிர்ந்து நிற்கும் இக்கட்டடம் காண்போரை மகிழ்வூட்டும்.

தஞ்சாவூர் அரண்மனையைச் சுற்றியுள்ள நான்கு இராஜ வீதிகளிலும் ஆங்கிலேயர்களின் திட்ட உதவியுடன் புதிய கட்டடங்கள் பல எழுப்பப்பட்டன. பாரீஸ் நகரிலுள்ளவாறு தஞ்சை நகரமைப்பும் கட்டடங்களும் அமைந்திட வேண்டும் என்று இரண்டாம் சரபோசி மன்னர் விரும்பினார். குடிநீர் குழாய்கள் கோட்டையில் அமைக்கப்பட்டன. கழிவுநீர் பாதைகள் தனிமுறை அமைத்துக் கண்காணிக்கப்பட்டது. 'ஜலசூத்திரகாரி' என்பவர் வெளிநாட்டிலிருந்து தஞ்சை அரண்மனையில் தங்கியிருந்து தண்ணீர் குழாய் வாய்க்கால், இயந்திரக் கிணறு போன்றவற்றை அமைத்துக் கொடுத்துள்ளார்.

பட்டுக்கோட்டைக்கு அருகே சாருவநாயக்கன் பட்டணம் என்னும் இடத்திலுள்ள 'மனோரா' மராட்டியர் கட்டடக்கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இக்கட்டடம் ஐரோப்பாவில் நெப்போலியன் தோல்வியுற்றதை மகிழ்ந்து நினைவுகூரும் முகமாகக் கட்டப்பட்ட நினைவுச் சின்னமாகும். இங்கு தமிழ், ஆங்கிலம், உருது, மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளில் கல்வெட்டுக்களுள்ளன. அறுகோணத் தளவடிவமைப்புடைய கோட்டையின் நடுவில் 23.3 மீ. உயரமுள்ள ஒன்பது அடுக்குகள் கொண்ட மையப் பகுதி கட்டடத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு அகழி, சுற்-கோட்டைச்சுவர், இரகசிய அறைகள், வணிகப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்குரிய அறைகள், இராணுவப் பயிற்சிக்குரிய இடம், கப்பல் கட்டும் தளம், கப்பல் மற்றும் இராணுவப் பயிற்சிக்குரிய நூலகம் ஆகியவை அங்கிருந்துள்ளன. உயர்ந்த மாடமும் இன்றும் கண்டு மகிழ முடிகின்றது.

தங்கும் மாளிகைகள்

சரபோசி மன்னரின் ஆட்சியின்போது தஞ்சைக் கோட்டை மட்டுமல்லாது ஆட்சிக்குட்பட்ட தஞ்சை மாவட்டத்தின் பிற இடங்களிலும் அரண்மனைக்குரிய கட்டடங்களைக் கட்டியுள்ளார். இக்கட்டடங்கள் அமைந்துள்ள இடங்களின் தன்மையைக் காணும்பொழுது அவை 1) தோட்ட மாளிகைகள், 2) வேட்டை மாளிகைகள், 3) நிர்வாக மாளிகைகள், 4) சத்திரங்கள் எனப் பிரிந்துக் காணுமாறு அமைகின்றன.

தோட்ட மாளிகைகள் என்பன அரண்மனையின் உரிமைக்குரிய காடுகளில் வேளாண் தோட்டங்களில் கோட்டைக்குள் இல்லாத பிற இடங்களில் கட்டப்படும் கட்டடங்களாகும். இங்கு உப்பரிகைகளையும், தங்கும் இல்லங்களையும் குதிரை, யானைகளைக் கட்டக்கூடிய லாடயங்களையும் கட்டியுள்ளனர். வேட்டை மாளிகைகள் என்பன அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வேட்டைக்குச் சென்று வருவதற்கும் இரவு நேரங்களில் தங்குவதற்கும் பயன்படக்கூடிய வகையில் அமைவ-தாகும். ஏனெனில், மன்னர் சரபோசியின் ஆட்சிக்காலத்தில் வேட்டைக்குச் செல்லும் ஒரு பிரிவினர் அரண்மனையில் இருந்துள்ளனர். இவர்கள் மன்னருடன் சென்று வருவது வழக்கம். இவர்களுக்குத் தனியே கூலியும் வழங்கப்பட்டது என்பதை மோடி ஆவணங்கள் குறிக்கின்றன. இவ்வாறு அமைகின்ற இடங்களில் கட்டப்படும் கட்டடம் 'வேட்டை மகால்' என்றழைக்கப்பட்டது. இதற்குச் சிறந்த சான்றுகளாக நீலகிரி வேட்டை மால், கோடியக்கரை வேட்டைமால் ஆகியவற்றை கூறலாம்.

குடியேற்றங்கள்

மன்னர் இரண்டாம் சரபோசியின் காலத்தில் புதிய குடியிருப்புக்களாக பண்டாரவாடைகள், தட்டி மால்கள், உப்பரிகைகள், படித்துறைகள், பாலங்கள், அரண்மனை நிர்வாகத்திற்குட்பட்ட பங்களாக்கள், சத்திரங்கள், மண்டபங்கள், அக்ரகாரங்கள், சேரிகள், தோட்டக் கட்டடங்கள் கட்டப்பட்டன. நகர, கிராம வளர்ச்சியில் மன்னர் சரபோசியின் ஈடுபாடு இன்னும் அவர் புகழைப் பரப்பி வருகின்றன என்றால் மிகையன்று.

பொதுப்பணித்துறை வாரியம்

மன்னர் இரண்டாம் சரபோசியின் ஆட்சியின்போது பல்வேறு நிர்வாகப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. அவை ஒவ்வொன்றும் தனித்தனிப் பிரிவுகளாகச் செயல்பட்டன என்பதை மராட்டியர் கால மோடி ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. தஞ்சை அரண்மனையில் கட்டடங்கள், சாலை, குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கத் தனித்தனியே பொதுப்பணித்துறை அலுவலகங்கள் அமைந்திருந்தன. அரசாங்கக் கட்டடங்கள், அரசு கட்டிக்கொடுக்கும் கிராமக் குடியிருப்புக்கள் மற்றும் அரசு நிர்வாகத்தில் பணிபுரியும் நிர்வாக அலுவலர்களின்

வீடுகளுக்கும், இத்துறையின் வாயிலாகவே கட்டுமானப் பொருட்கள் அளிக்கப் பட்டுள்ளன. செங்கல், செம்பராங்கல், மூங்கில், கீற்று, மரங்கள், மரத் தூண்கள், வண்ணம், இவற்றைச் செய்யும் கொத்தர்களும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். திருப்பூந்துருத்தியில் அரசு அலுவலகத்தில் பணிபுரிந்த அலுவலர் ஒருவருக்கு வீடுகட்ட மரத்தூண்களும், மரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அக்ரஹாரங்கள், படுகைகள், சேரிகள் முறையாகத் திட்டமிடப்பட்டுள்ளன என்பதை அக்காலத்திய வரைவுகள் எடுத்துரைக்கின்றன. தஞ்சை நகரைப் பொருத்தமட்டில் இத்துறையினர் கோட்டையின் குடிநீர் வசதி (ஜலசூத்திரம்), தெருச்சாக்கடை, தெரு, விளக்கு, சுகாதாரம் போன்றவற்றை மேற்-கொண்டிருந்தனர் என்பதை மோடி ஆவணங்கள் எடுத்தியம்புகின்றன.

சரபோசியின் ஆட்சிக்கு உதவியாக இருந்த ஆங்கிலக் கம்பெனியரின் வருகைக்குப் பின்னர் தஞ்சை நகரமைப்பு, நிர்வாகத்தில் கம்பெனியின் செல்வாக்கு அதிகரித்துள்ளது என்பதையும் இதனை மன்னர் சரபோசி விரும்பாமல் மிகவும் கவலையடைந்த செய்திகளை மோடி ஆவணங்கள் கூறுகின்றன. எது எப்படியிருப்பினும் மன்னரின் ஒப்புதலுடனே கட்டுமான வேலைகள் நடைபெற்றுள்ளன. அதன் பின்னர் ஆங்கிலேய பொறியாளர்கள், கட்டடக் கலைஞர்களின் துணையுடன் புதிய கட்டடங்கள் தஞ்சை நகரில் தோன்றின. அவை மேலைநாட்டுக் கட்டடக் கலையைச் சார்ந்தே கட்டப்பட்டன. தஞ்சை நகரின் நான்கு வீதிகளும் இத்தகைய கட்டடங்கள் தோன்றின. நாயக்கர் காலத்தில் கட்டடங்கள் அழிக்கப்பட்டு புதிய குடியிருப்புக்களும் பிற பயன்பாட்டிற்குரிய இடங்களாகவும் மாற்றம் அடைந்தன. தொன்மையான கட்டடங்களாக இருப்பினும் அவை சுதைப்பூச்சு, அலங்கார வேலைப்பாடு என்ற நிலையில் மேலைநாட்டவரின் மனச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றம் அடைந்தன என்பதை இக்கட்டுரையில் ஆசிரியரின் களப்பணியின்போது பல இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நகரமைப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களைப் போன்றே சாலைப் போக்குவரத்துக்களிலும் குளங்களின் அமைப்புக்களிலும் ஏற்பட்டன. இம்மாற்றமே தஞ்சை மாவட்டத்தின் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது. இப்பணியின் காரணத்தினால்தான் தஞ்சை நகரம் 'தென்னகத்தின் பாரீஸ் நகரம்' என்று அழைக்கக் காரணமாகவும் அமைந்தது. எனவே, மன்னர்

சரபோசியின் காலத்தில் தோன்றிய பொதுப்பணித்துறையின் பணி மரபு நிலையில் தொடங்கிப் பின்னர் காலனி ஆதிக்கத்தின் கீழ் காலனிக் கலாச்சார அமைப்பைப் பெறத் தொடங்கியது. ஆங்கிலேயர்-இந்தியர் கட்டடக்கலையில் கூட்டு வடிவமாகி மரபுநிலை மாற்றம் பெற்றுக் 'காலனிக் கட்டடக்கலை' வடிவம் பெற்றுத் திகழ்கின்றன எனக் கூறலாம். இம்மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் மன்னர் இரண்டாம் சரபோசி அவர்கள் என்றால் மிகையன்று.

குடியிருப்புக்கள்

இரண்டாம் சரபோசியின் காலத்தில் வேளாண்மை, வணிகம் சிறப்படைந்தன. பல்வேறு கோயில்களைக் கட்டியவர் இக்கோயில்கள் சிறம்படச் செயல்பட பிராமணர்களைக் குடியமர்த்தியும், அவர்களுக்கு நிலம், வீடுகளையும் அமைத்துக் கொடுத்தார். இப்பணியே புதிய அக்ரஹாரங்கள் தோன்றின. சரபோசியின் காலத்தில் தோன்றிய அக்ரஹாரங்களில் கணபதி அக்ரஹாரம், பள்ளி அக்ரஹாரம், திருவாடி அக்ரஹாரம், கும்பகோணம் அக்ரஹாரம், மெலட்டூர் அக்ரஹாரம், வெண்ணாற்றங்கரை அக்ரஹாரம் போன்றவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும். இந்த அக்ரஹாரங்கள் பொதுவாக நீண்ட தெருக்களையும் குறைந்தளவு உயரமுள்ள வட்டத் தூண்களுடன் கூடிய திண்ணையையும் பெற்றுள்ளன. இவ்வடிவமைப்புடைய கட்டடங்கள் அதிக உயரமில்லாமலும் செங்கல் சுண்ணாம்பு முதலியவற்றால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சில இரண்டு அங்கணமாகவும் அவற்றின் பின்பகுதி பூக்கொல்லைகளுடனும் உள்ளன. மேற்கூரையாகிய விதானம் அரை வளைவு கூரையாகவும் திண்ணையைத் தொடர்ந்து வரும் வீட்டுப்பகுதியில் நான்கு புறத்திலும் தூண்களுடன் கூடிய அறைகளுடனும், சில இடங்களில் இல்லாமலும் இருக்கின்றன. ஆனால் முற்றம் அதிகம் இடம் பெறுகின்றன. இக்கட்டட வடிவமைப்புக்குத் திருவையாறு அக்ரஹாரங்களைக் கூறலாம். சிறிய அளவில் அமைந்த மரத்தூண்களுடன் கூடிய திண்ணையும் ஓடு வேயப்பெற்ற கூரையுடைய அக்ரஹாரத் தெருக்களும் உள்ளன. இத்தகைய வீடுகளுக்கு கணபதி அக்ரஹாரம், திருவையாறு அக்ரஹாரம், மெலட்டூர் அக்ரஹாரம் போன்றவற்றைக் கூறலாம். இவ்வீடுகளின் அமைப்புமுறை நமது மரபுவழி வந்தவையாகும். ஆனால் திருவையாறு பதினைந்து மண்டபத்தெரு போன்ற கட்டடங்கள் மராட்டியர் கலைப் பாணியைப் பின்பற்றியதாகும். எனவே,

சரபோசியின் காலத்தில் தமிழக அரசு நிலையிலும் மராட்டியக் கலைப் பாணியிலும் அக்ரஉறாரங்கள் கட்டப்பட்டுள்ளன. இதைவிடச் சிறப்பு தெருக்கள் திட்டமிடப்பெற்று வரைபடங்கள் ஒப்புதல் பெற்றே கட்டப்பட்டுள்ளன என்பது சிறப்பாகும்.

அரசர் பெயரில் ஊர்கள்

மன்னர் சரபோசியின் காலத்தில் புதிய குடியிருப்புகள் அரசு நிர்வாகப் பணியின் காரணமாகக் கட்டப்பட்டும் உள்ளன. மன்னர்கள், அரசிகள், பிற அரசுத் தலைவர்களின் பெயர்கள் இக்குடியிருப்புகளுக்குச் சூட்டப்பட்டுள்ளன. அரசர்களுக்குரிய கட்டடங்களைக் கொண்ட குடியிருப்புக்கள் பொதுவாக, நிலவரி, தானியச் சேமிப்பு அல்லது வசூலித்தல், அரசு நிர்வாகிகள் தங்குதல் பிற அதிகாரிகளின் குடும்பங்கள் போன்றவரின் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன எனலாம். இவ்வாறு அமையும் குடியிருப்புக்கள், பண்டாரவாடை, புரம், மங்கலம், சத்திரம் போன்ற பெயர் தாங்கியும் உள்ளன. இவ்வாறு அமைக்கப் பெற்ற குடியிருப்புக்களுடைய ஊர்களாக, திருவிசைநல்லூர் பண்டாரவாடை, பண்டாரவாடைப் பெரும்பாண்டி, பண்டாரவாடை சரபேந்திரராஜபட்டினம், சரபோசிபுரம், யமுனாம்பாள்புரம், சேதுபாவா சத்திரம், ஆவுசாயபு புரம், இனாத்துக்கான்பட்டி போன்றவை குறிப்பிடத்தக்கன. இக் குடியிருப்புக்களில் கட்டடங்களுக்கு அரசு பணமும் அரசுப் பொதுப்பணித் துறையும் பணி மேற்கொண்டன என்பதை மோடி ஆவணங்கள் காட்டுகின்றன. எனவே, மராட்டியல் ஆட்சிக் காலத்தில் கிராமங்களில் அரசுக் கட்டடங்கள் பல கட்டப்பட்டன என்பது வரலாற்றில் குறிக்கப்படும் சிறப்புச் செய்தியாகும்.

அரசர்களுக்கென்று ஒரு அரண்மனை தலைநகரில் இருப்பினும் சரபோசியின் காலத்தில் தஞ்சாவூர், திருவையாறு, சரபேந்திர ராசபட்டினம், அறந்தாங்கி, மகாதேவபட்டினம் போன்ற இடங்களிலும், நீடாமங்கலத்தில் தங்கும் வசதியுடன் அரண்மனை கட்டடங்களையும் கட்டியுள்ளனர்.

சரபோசியின் கல்வெட்டுக்கள்

புலவர் செ. இராசு, பிஎச். டி.
தலைவர், கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சரபோசி கல்வெட்டுக்கள்

தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்களாக 132 ஆவணங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் 33 கல்வெட்டுக்கள் சரபோசியின் (1798-1832) கல்வெட்டுக்களாகும். தஞ்சை, திருவையாறு, புன்னைநல்லூர், ஒரத்தநாடு, கும்பகோணம், சாருவ நாயக்கன்பட்டினம், வெண்ணாற்றங்கரை, வன்னிப்பட்டு ஆகிய இடங்களில் அவை கிடைக்கின்றன. மராட்டியர் தம் மொத்தக் கல்வெட்டுக்களில் 25% சரபோசியின் கல்வெட்டுக்களாகும்.

இவற்றில் 24 கல்வெட்டுக்கள் மராத்தி மொழியில் உள்ளன. 4 கல்வெட்டுக்கள் தமிழில் உள்ளன. பிற கல்வெட்டுக்கள் தமிழ்-மராத்தி; தமிழ்-தெலுங்கு-மராத்தி; தமிழ்-தெலுங்கு-மராத்தி-ஆங்கிலம்-உருது என்ற அமைப்பில் பன்மொழிக் கல்வெட்டுக்களாக உள்ளன.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் மட்டும் 9 கல்வெட்டுக்கள் உள்ளன. ஒரத்தநாட்டுப் பகுதியில் ஆறு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

சமரச நோக்கு

மிகச் சிறந்த சிவபக்தராக விளங்கிய சரபோசி கீழவாயில் கொண்டிராஜபாளையம் கீழ நரசிங்கப்பெருமாள் கோயில், கீழவீதி வரதராசப் பெருமாள், மேலவீதி டபீர் விசயராமர் கோயில், மேலவீதி கிருஷ்ணன் கோயில், வெண்ணாற்றங்கரை மேல சிங்கப் பெருமாள் கோயில் ஆகிய வைணவக் கோயிலில் பல திருப்பணிகள் செய்து கொடையளித்திருப்பதும், கல்வெட்டுக்கள் பொறித்திருப்பதும் போற்றத்தக்க செயலாகும்.

சைவ-வைணவ ஒற்றுமையைக் கூறும் சங்கரநாராயணர் கோயில் திருப்பணியையும் சரபோசி மேற்கொண்டுள்ளார்.

பெரியகோயில் திருப்பணி

1798 ஆம் ஆண்டு தாம் பதவி ஏற்றவுடன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்குப் பல்வேறு நகைகளையும், பாத்திரங்களையும் கொடையாக

அளித்தார். பதக்கம் (வைரக்கற்கள் பதித்தவை, பச்சைக்கல் பதித்தவை), வேலைப்பாடு மிக்க கிண்ணங்கள், பெரிய நிலைப் பாத்திரங்கள், வெள்ளி வேலைப்பாட்டுடன் பொன் சேர்ந்த சங்கு (இச்சங்கு முத்து, பவளம், பொன் மணிகளுடன் கூடியது). 26 குமிழ்கள் உள்ள கோபுர ஆரத்தி, அகலமான பாத்திரம், தேவிக்குக் கிரீடம், மகர குண்டலம், கைக்குக் கங்கணம், மோதிரம், பாடகம், குசராத்திக் கொலுசு, தோடா, பூநகை, மெட்டி, ஒட்டியாணம், சூரியன் சந்திரன் போன்ற தலை நகை, தொங்கட்டான், நெற்றிச்சுட்டி, வகிடு நகை, சந்திரமாலை, மணிக்கட்டு நகை, நெற்றிப்பொட்டு, மூக்குத்தி, சங்கிலி, சடை அணிகள், 108 சிறிய சிவலிங்கம் கோர்த்த தாலி, கற்பூரத் தட்டு, தூப ஆரத்தி, ஐந்து ஆரத்தி, மணி, காளாஞ்சி என்று பட்டியல் மிகவும் நீளுகிறது.

1801 ஆம் ஆண்டு பிரகாரங்களுக்குக் கருங்கல் பாவப்பட்டது. வடக்குப் பிரகாரத்தில் 20 பழைய அங்கணம், 26 புதிய பிரகார சாலைகள் அமைக்கப்பட்டன. விநாயகர் கோயிலில் கருவறையைப் பழுதுபார்த்து அர்த்த-மண்டபம், மகாமண்டபம் கட்டினார். சுப்பிரமணியர் கோயில் எதிரில் மண்டபச் சுவர் கட்டி இரண்டு மண்டபத்தையும் சேர்த்துப் புதியதாகக் கட்டிடம் கட்டப்-பட்டது.

சுப்பிரமணியர் கோயில், அம்மன் சன்னதி, சபாபதி கோயில், தட்சிணாமூர்த்தி கோயில், சண்டிகேசுவரர் கோயில், மடப்பள்ளி, திருமாளிகைப் பத்தி ஆகியவற்றில் பல திருப்பணிகள் செய்தார். சுப்பிரமணியர் கோயிலில் திருப்பணிகள் பல செய்ததுடன் குடமுழுக்கு விழாவையும் நடத்தினார்.

1802 ஆம் ஆண்டு வடக்குப் பிரகாரம் கிழக்குப் பக்கத்தில் உள்ள மண்டுக தீர்த்தத்தைத் திருத்திக் கிணறு வடிவில் அமைத்தார். பெருவுடையார் கோயிலில் வெட்டியான்கள் இருவருக்குள் ஏற்பட்ட சண்டையைத் தீர்த்து வைத்தார். தஞ்சை மராட்டியர்தம் வரலாற்றைக் கூறும் மிகப் பெரிய கல்வெட்டைத் தெற்குச் சுவரில் வெட்ட ஏற்பாடு செய்தார். அக்கல்வெட்டு பாபுராஜ் என்பவரால் 1803 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் தேதி எழுதி முடிக்கப்பட்டது. அதன் மராத்தி வடிவம், தமிழாக்கம், ஆங்கில

மொழிபெயர்ப்புடன் சரசுவதி மகால் நூலகம் இந்நூலை 1951 இல் வெளியிட்டுள்ளது. 1990 இல் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இதை முதலில் மராத்தி மொழியில் வெளியிட்டவர் திரு சாம்பமூர்த்தி ராவ் ஆவார். அதன் தமிழாக்கம் வேதநாயக சாஸ்திரியார் மூலம் மெக்கன்சிக்கும் கிடைத்துள்ளது. பாண்டிச்சேரியில் திருமுடி சேதுராமன் அவர்களிடமும் ஒரு பிரதி இருந்தது. அவைகளை '[illegible]' ஒப்புநோக்கி அரிய கையெழுத்துச் சுவடித் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் கே.எம். வேங்கடராமையா அவர்கள் 'மராட்டிய மன்னர் வரலாறு' என்னும் பெயரில் சிறந்த ஆய்வுப் பதிப்பாகப் பதிப்பித்துள்ளார்கள். இக்கல்வெட்டு கல்வெட்டுலகில் கிடைத்தற்கரிய ஒரு கலைப்படைப்பாகும்.

அண்மையில் மைய அரசுத் தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் அதனைப் படியெடுத்துச் சரியான பாடத்துடன் பதிப்பிக்க உள்ளார்கள். அறிஞர் கே.வி. ரமேஷ் அவர்கள் இப்பணியைச் செய்து வருகிறார்கள்.

கல்வெட்டுச் செய்திகள்

தஞ்சையில் உள்ள பல கோயில்கட்குத் திருப்பணி செய்த சரபோசி விட்டோபா கோயில் (பாண்டுரங்காலய பசனை சாலை), காசி விசுவநாதர் கோயில், மணிகர்ணிகேசுவரர் கோயில், எல்லம்மாதேவி கோயில் (எல்லையம்மன்) கீழ நரசிங்கப்பெருமாள் கோயில் ஆகியவற்றை புதியதாகவே அமைத்தார்.

பல கோயில் நர்த்தனமண்டபம் கட்டுவித்தார். திருப்பணிகள் மிகவும் விரிவாகச் செய்யப்பட்டன. ஒரு கல்வெட்டில் 'போசல குலமணி சரபேந்திர மகாராசா' என்று அழைக்கப்பட்டுள்ளார். கும்பகோணம் கல்வெட்டு காஞ்சி சங்கரமடத்திற்கும் சரபோசிக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது.

பிற பொறிப்புக்கள்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் வெள்ளி விபூதி மடலிலும், தட்டிலும், காளை வாகன வெள்ளித் தகட்டிலும் சரபோசியின் திருப்பணி எழுதப் பட்டுள்ளது. மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நாகாபரணத்திலும், திருவரங்கக் கோயில் பதக்கத்திலும் சரபோசியின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுக்கள்

1 தஞ்சாவூர் விட்டோபா கோயில் கல்வெட்டு

1 ஸ்ரீ மங்கள முர்த்தீர் செயத்தி ஸ்ரீமத் போ

2 சல குலமணி சரபேந்திர மகாராசா சாயேப்

3 அவர்கள் ஸ்ரீ பாண்டுறங்காலைய பச்ன சா

4 ஸா தர்மம் சொஸ்த்தஸ்ரீ சாலியவாகன ச

5 காப்த்தம் 1740 கலியுக சகாப்த்தம் 4

6 919 யிதின் செல்லாநின்ற வெகுதானிய

7 வருஷம்மாசி மீ அமரபட்சம் சதுற்தெசி சோமாவார

8 ம் மகாசிவராத்திரி சுபதினத்தில் யிந்த தற்மம்.

தஞ்சாவூர் கீழ நரசிங்கப்பெருமாள் கோயில் கல்வெட்டு

1 ஸ்ரீலெட்சுமி நறசிம்ம சுவாமி புறா

2. தனம் கோவில் பழுதாயிருந்தது அ

3 தெ சத்தறபதி சறபோசி மகாராசா அ

4 வற்கள் கோவில் புதுசாயிக் க

5 ட்டி ஸ்த்தலம் சீறனோத்தாறம் ப

6 ண்ணினாற்கள் சாலியவாகன

7 சகம் 1742 விக்கிறம வருஷம்

8 தைஸ்ரீ மீ 27 புதவாறம் பிறதி

9 ஷ்டை ஆச்சுது உ

தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் விநாயகர் கோயில் வாயிற்படிக் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1723 கலியுகம் 4902க்குப் பிறகு நடக்கும் துர்மதி ஆண்டு வைகாசி மாதம் 3ஆம் தேதி சுக்கில பக்கம் துவிதியை வியாழக்கிழமை ரோகிணி நட்சத்திரம் கூடிய நன்னாளில் ராசா ஸ்ரீ சரபோஜி மகாராசா அவர்கள் கர்ப்பக் கிரகத்தை நிற்கவைத்து அர்த்த மண்டபத்திலிருந்து தூண்களும் கொறடும் புதியதாகக் கட்டி அர்த்தமண்டபம், மகாமண்டபம் இவைகளைப் புதியதாகக் கட்டினார்.

வன்னிப்பட்டு தெற்கு எல்லைக் கல்வெட்டு

1 சாலிய வா

2 கன செகம் 1

3 747 பா

4 ற்திவ னாம ஸ

5 வ்வச்சுரம் ச

6 வுபாக்கியவ

7 ஸ்ரீமுத்தம்பாள்

8 புரம் அன்ன ச

9 த்திரம் தற்மத்து

10 சேந்த சருவ ம

11 ானியம் வன்னி

12 பட்டு தென்பா

13 ற்க்குயெல்லை

மதுரை மீனாட்சி சுந்ரேசுவரர் கோயில் நாகாபரணப் பொறிப்பு

மொழிபெயர்ப்பு

1 தஞ்சாவூர்ச் சத்ரபதி சரபோசி

2 மகாராசா அவர்களுடைய உபயம் சாலிவாகன

3 சகம் 1739ல் ஈசுவர ஆண்டு

சரபோஜி மன்னர் காத்த தமிழ்ச்சுவடிகள்

ய. மணிகண்டன்
தமிழ்ப் பண்டிதர்
சரசுவதிமகால் நூலகம்
தஞ்சாவூர்

முகவுரை

சரபோஜி என்னும் திருப்பெயரை அணிசெய்யும் மாமன்னர் என்னும் அடைமொழியின் பொருத்தப்பாட்டை எண்ணிப் பார்க்கையில், சுவடிகளையும் நூல்களையும் கலைச்செல்வங்களையும் எட்டுத் திக்கிலிருந்தும் தேடித் திரட்டிச் 'சரசுவதி மகாலில்' சேர்த்துக் காப்பதில் காட்டிய ஆர்வத்தில் அவர் மன்னராக, மாமன்னராகத் திகழ்ந்த காட்சி நம் சிந்தையில் விரிகின்றது. வந்தனை செய்து அவரின் தொண்டை வணங்கத் தூண்டுகின்றது. அப்பெருமகனார் தமிழ்ச்சுவடிகளைக் காத்து வளர்த்த செய்திகளை இங்கே சுருக்கமாகக் காண்போம்.

சரபோஜியும் தமிழ்ச்சுவடிகளும்

மன்னர் சரபோஜி வல்லுநர்களைக் கொண்டு தமிழ் ஓலைச்சுவடிகளைப் பிரதியெடுக்கச் செய்தும், புதிய இலக்கிய-மருத்துவ நூல்களைச் சுவடிகளில் இயற்றச் செய்தும், தமது அரிய செல்வமான சுவடிகளுக்கு அட்டவணை தயாரிக்கச் செய்தும், தமது முன்னோர் காலச் சுவடிகள் அழியாமல் பேணியும் தமிழ்ச் சுவடிகளைப் போற்றிக் காத்து வளர்த்துள்ளார். தாம் சேகரித்த அரிய தமிழ்ச் சுவடிகளையெல்லாம் சரசுவதி மகாலில் நல்முறையில் பராமரிக்கச் செய்து வருங்காலத் தலைமுறைகளுக்கு ஒப்பற்ற பரிசாக வழங்கியுள்ளார்.

தமிழ் ஓலைச்சுவடிப் படியெடுப்பும் சரபோஜியும்

முன்னோர் காலத்தில் எழுதப்பட்ட சுவடிகள் நூலகத்தில் இருந்தபோதிலும், சரபோஜி மன்னர் தமிழ்ச்சுவடிகளை விலைகொடுத்து வாங்கிச் சேகரித்துள்ளார். படியெடுப்பவர்களைக் கொண்டு சிதையும் நிலையிலிருந்த பழைய சுவடிகளிலிருந்து புதிய பிரதிகள் எழுதச்செய்து சுவடிகளைக் காத்துள்ளார்.

"தமிழ் ஓலைச்சுவடி கம்பராமாயணம் பெயர்த்தெழுதப்பட்டது. பக்கம் 1978; வரிகள் 14,200; பணத்திற்கு 150 வரிசை வீதம் கொடுக்கப் பட்டது". "வைத்திய நூல்கள் எழுதுவதற்கு ஆயிரம் கிரந்தத்திற்கு 4 பணம் வீதம் அளிக்கப்பெற்றது" போன்ற குறிப்புகள் சரசுவதிமகால் மோடித் தமிழாக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

மன்னர் சரபோஜியின் ஆணைப்படி கி.பி.1800-இல் ரூபாசி சிங்கம நாயக்கர் குமாரர் ரெங்கப்ப நாயக்கரால் அகத்தியர் செந்தூரம் 800, அகத்தியர் கரிசல் 300, அகத்தியர் பற்பமுறை 205, வைத்திய அட்டவணை ஆகிய சுவடிகளும், கி.பி.1800-இல் வேங்கடேசன் பிள்ளையின் குமாரர் சுப்பராயனால் தன்வந்திரி வாகடம்-1110 எனும் சுவடியும் கி.பி. 1801-இல் அவராலேயே போகநாயனார் அருளிய கற்பவிதி-300 எனும் சுவடியும், கி.பி.1828-இல் சிதம்பரம் பிள்ளையின் குமாரர் பஞ்சநதத்தால் மச்சமுனி-800 எனும் சுவடியும் படியெடுக்கப் பெற்றன என்பதைச் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள அச்சுவடிகளின் ஈற்றுக் குறிப்புகள் எடுத்துரைக்கின்றன.

கி.பி.1824-இல் அய்யாக்கண்ணுப்பிள்ளை என்பவர் "அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம் 300" எனும் சுவடியைப் படியெடுத்து வாங்கி மன்னருக்குத் தன்னுடைய பேர் நிமித்த மாத்திரம் வழங்கினார் என்பதைச் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள அச்சுவடி குறிப்பிடுகின்றது.

கி.பி.1826 இல் சிதம்பரநாதன் என்பவர், 'சித்திரபுத்திய நயினார் அம்மானை' எனும் சுவடியை எழுதி முடித்தார் எனும் குறிப்பினைக் கொண்ட சுவடியில், 'பார்த்திப வருடம் மாசி மாதம் 3-ஆம் தேதி மகாராஜ ராஜஸ்ரீ சரபேந்திர மகாராஜா அவர்கள் சரசுவதி மாலில் சித்திரபுத்திர நயினார் அம்மானை எழுதி முடிந்தது" என்றுள்ள குறிப்பில் 'சரசுவதி மால்' தனித்துச் சுட்டப்பட்டுள்ளது நோக்கத்தக்கது.

தமிழ் மருத்துவச் சுவடிகளும் சரபோஜியும்

சிறந்த மருத்துவர்களையும் புலவர்களையும் ஆதரித்த மன்னர் சரபோஜி, அவர்களைக் கொண்டு பற்பல நோய்களுக்கு உரிய மருத்துவ முறைகளை, மருந்து விவரங்களைப் பாடல்களாகவும் வசனமாகவும் சுவடிகளில் எழுதச் செய்தார். மருத்துவ முறைகளைக் கூறும் இச்சுவடிகள் சரபேந்திர வைத்திய முறைகள் எனும் பொதுப்பெயரில் அமைந்துள்ளன.

பெரும்புலவரான கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், சரபேந்திர வைத்திய முறைகளில் வாதரோக சிகிச்சை, உளமாந்தை, க்ஷயம் (மூலம், இளைப்பு, குட்டம்) முதலான ரோக சிகிச்சைகள், சன்னிரோக சிகிச்சை,

குன்மரோக சிகிச்சை ஆகியவற்றை இயற்றினார். வேலாயுத வாத்தியார் என்னும் புலவர் சரபேந்திர வைத்திய முறைகளில் விஷரோக சிகிச்சை, குன்ம ரோக சிகிச்சை, நயனரோக சிகிச்சை, சொறிசிரங்கு பிரமேகரோக சிகிச்சை, சிரோரோக சிகிச்சை, விரோசன முறையும் அதிசார சிகிச்சையும், காசரோக சிகிச்சை, நீரிழிவு சிகிச்சை, விரணம் கரப்பான் ரோக சிகிச்சை ஆகியவற்றை இயற்றினார். வேங்கடாசலம் பிள்ளை என்பவர் சரபேந்திர வைத்திய முறைகளில் பாண்டு காமாலை சிகிச்சையையும், சுப்பராயக் கவிராயர் என்பவர் ஜ்வரரோக சிகிச்சையையும், திருவேங்கடத்தா பிள்ளை என்பவர் கர்ப்பிணி, பாலரோக சிகிச்சை, வாதரோக சிகிச்சை ஆகியவற்றையும் மன்னர் சரபோசியின் ஆணைப்படியும் ஆசைப்படியும் செய்யுள் நூல்களாக இயற்றினர்.

இந்நூல்களின் சுவடிகள் இன்னும் சரசுவதிமகால் நூலகத்தை அணி– செய்கின்றன. இவை அச்சாகியும் வெளிவந்துள்ளன. சரபோசியின் ஆணைப்படியும ஆலோசனைப்படியும் மலர்ந்த இச்சுவடிகளில் பல பாடல்கள் ஆங்காங்கு மன்னர் சரபோசியின் பெருமையை மொழிகின்றன. மன்னர் சரபோஜி ஆரோக்கியசாலை ஒன்றை ஏற்படுத்தியதையும், மருத்துவ நூல்களை இயற்றச்செய்ததையும் குறிப்பிடுகின்ற ஒரு பாடலைக் காண்போம்.

"மதமுகவ நம்பியறு முகவன் கர்த்தன்
மலர்ப்பாதந் தனைப்போற்றி வைய கத்தோர்க்
கிதமுறவென் றாரோக்ய சாலை யொன்றை
ஏற்படுத்தி முன்முனிவர் சித்தர் யோகர்
பதமுறவே சொல்லியநூல் தம்மை யெல்லாம்
பார்த்துணர்ந்த நாடோறும் சரப பூபன்
முதல்வன்றிச் சயித்தபடி சிரோரோ கந்தான்
மொழியவயன் தேவிகலை வாணி காப்பாம்"

(சரபேந்திர வைத்தியம்–சிரோரோகம்)

சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

மன்னர் சரபோசியின் அளப்பரும் தொண்டைப் போற்றும்வகையில் மலர்ந்த நூலே 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' யாகும். இந்நூலை இயற்றியவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் ஆவார்.

தமிழ் ஓலைச்சுவடிகளுக்கு அட்டவணை

சரபோசி மன்னர் காலத்தில் நூலகத்தின் சுவடிகளுக்கு விவர அட்டவணை இல்லாததால், 1901-இல் சரபோசி, கங்காதர பட்லு, சதாசிவ பட்லு ஆகியோரை நூலகச் சுவடிகளுக்கு கேட்டலாக்கு தயார் செய்ய உத்தரவிட்டார். அவ்வேளையில் தமிழ் மருத்துவ ஓலைச்சுவடிகளுக்கு ஓலைச்சுவடியிலேயே விவர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

மாமன்னர் சரபோசி அரிய தமிழ் மருத்துவச் சுவடிகளையும் இலக்கியச் சுவடிகளையும் விலைகொடுத்து வாங்கியும், தொகை கொடுத்துப் படியெடுக்கச் செய்தும் போற்றிக் காத்தார்.

புதிய மருத்துவ நூற்சுவடிகளைப் புலவர் பெருமக்கள் மருத்துவர்களின் துணையோடு தமிழில் இயற்றுமாறு செய்தார்.

அழகிய இலக்கியச் சுவடிகளும் மருத்துவச் சுவடிகளும் மலரக் காரணமாகத் திகழ்ந்தார். தம்மால் சேகரிக்கப்பட்ட ஓலைச்சுவடிகளுக்கு அட்டவணையும் தயாரிக்கச் செய்தார்.

உண்மையான மன்னர்

"நான் முடிசூடிய மன்னர் பலரை உலகெங்கும் அறிந்துள்ளேன். ஆயினும் உண்மையான மன்னரை இப்போதுதான் கண்டேன்; அவரே சரபோசி"

— பிஷப் ஹீபர் (1826)

சரபோஜி மன்னர் கால வடமொழி இலக்கியங்கள்

புலவர் ந.சீனிவாசன்
வடமொழிப் பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தஞ்சையில் ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர்கள் இசை, நாட்டியம், நாடகம் போன்ற நுண்கலைகளுக்கு ஆதரவளித்துக் காத்ததைப் போன்றே வடமொ இலக்கண இலக்கியங்களுக்கு ஆதரவளித்தனர். பல்வேறு துறைகளில் பண்டிதர்களாக விளங்கிய புலவர்களைத் தமது அவையில் இருக்கச் செய்து அவர்கள் வாயிலாக ப நூற்களை இயற்றச் செய்தனர்.

சுவடிகளைத் தொகுத்தல்

மராட்டிய மன்னர்களில் இரண்டாம் சரபோசி (1798-1832) மன்னரின் காலத்தில் இந்த நூலகம் மறுமலர்ச்சியடைந்தது எனலாம். இவர் காசி யாத்திரை செய்த காலத்திலும், பிற சமயங்களிலும் பொருள்கொடுத்து சுவடிகளை வாங்கி இந்த நூலகத்தில் சேர்த்துள்ளார். வட இந்தியாவிலுள்ள சுவடிகளை விலைக்கு வாங்க திருப்பனந்தாள் காசிமடத்துத் தம்பிரான் வாயிலாக ரூ.1000/- கொடுத்ததாக மோடிச் செய்திகள் தெரிவிக்கின்றன. காசியிலிருந்து வரவழைத்த சுவடிகளின் அட்டைகளில் இதுபற்றிய குறிப்பும் எழுதப்பட்டுள்ளது. விலைக்குக் கொடுக்க மறுத்த புலவர்களின் வீடுகளிலிருந்து சுவடிகளை படியெடுத்தும் சரசுவதிமகாலில் தொகுத்தார் சரபோசி. இத்தகைய அரிய பணியை நிறைவேற்றும் பொறுப்பு அரண்மனைப் புரோகிதரும், வடமொழி அறிஞருமான மானம்பட்டர் என்பவருக்கு அளிக்கப்பட்டது.

சுவடிகளைக் காத்தல்

மேலும், சரபோசி மன்னரின் முதாதையர் காலத்தில் தொகுக்கப்பட்ட சுவடிகள் நாளடைவில் பழுதடைந்துவிட்டதால் அவற்றைக் காக்க சிறந்தவழி படியெடுத்தலே என்பதை உணர்ந்த சரபோசி பல பண்டிதர்களை வரவழைத்து அவர்களின் வாயிலாக நூற்றுக்கணக்கான சுவடிகளைப் படியெடுக்கச் செய்தார். இங்ஙனம் படியெடுத்தலில் இரண்டு விதமான உத்திகள் கடைபிடிக்கப்பட்டன. 1. ஓலைச்சுவடியிலிருந்து தேவநாகரி எழுத்தில் காகிதத்தில் சுவடி முழுதும் படியெடுத்தல். 2. சிதைந்து அல்லது உடைந்த மோசமான நிலையிலுள்ள ஏடுக

மட்டும் படியெடுத்து உரிய இடத்தில் புகுத்துவது ஆகிய உத்திகள் கடைபிடிக்கப் பெற்றன.

ஏடுகளைப் படியெடுக்கும்போது மிகவும் கூரிய முனையுள்ள எழுத்தாணி-களையே பயன்படுத்துவது மரபு. இதன் காரணமாக புதிய புதிய எழுத்தாணிகளை மொத்தமாக வாங்கி நூலகத்தில் சேமிக்கப்பட்டன. இதனை மோடி ஆவணங்கள் ராஜஸாம்பாபுரம் அன்னச் சத்திரத்திலிருந்து 501 எழுத்தாணிகள் 43.8 சக்கரத்துக்கு வாங்கப்பட்டுள்ள செய்தி வலியுறுத்துகிறது. படியெடுத்து எழுதும் பண்டிதர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக யஜுர்வேத பாஷ்யம் படியெடுக்க ரூ.3.00; வேதம் படியெடுக்க ரூ.1.5(பாகவதம்-தசமஸ்கந்தம்-பூர்வார்தம் படியெடுக்க ரூ.10.00 என்ற செய்திகள் மோடி ஆவணங்களின் வாயிலாக அறியமுடிகிறது.

படியெடுப்போர் சரசுவதிமகால் நூலகத்திலிருந்துதான் படியெடுக்க வேண்டும் என்ற விதியில்லை. அவர்கள் தங்களது வசதிகளுக்கேற்ப பெருவுடையார் கோயில், ராஜகோபாலசாமி கோயில் போன்ற இடங்களில் படியெடுத்துள்ளனர் என்றும் அறியமுடிகிறது.

பாதுகாத்த சுவடிகளைப் பயன்படுத்துதல்

தொகுக்கப்பட்ட சுவடிகளை எளிதாகக் கையாள அனைத்துச் சுவடிகளுக்கு உரிய பட்டியல் செய்யவும் மன்னர் சரபோசி உத்தரவிட்டார். இவரது காலத்தில்தான் முதன்முதலாக பட்டியல் தயாரிக்கும் பணி செய்துமுடிக்கப்பட்டது. பட்டியல் தயாரிக்கும் பணியை நிறைவேற்றியவர்கள் மானம்பட், கங்காதரபட், சதாசிவபட் ஆகியோர். இவர்களது தலைமையின்கீழ் பல பண்டிதர்கள் இரண்டு ஆண்டுகள் அரிதின் முயன்று பட்டியல் செய்யும் பணியை நிறைவேற்றினர். ஓலைச் சுவடிகளிலும் 1801-ஆம் ஆண்டிலும், காகிதச் சுவடிகளுக்கு 1805-ஆம் ஆண்டிலும் பட்டியல் செய்து முடிக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே டாக்டர் பர்னல் அவர்கள் பட்டியல் தயாரித்துள்ளார்.

வடமொழியில் அச்சு நூல்கள்

சுவடிகளைப் பாதுகாத்தால் மட்டுமே போதாது எனக் கருதிய மன்னர் சரபோசி, அவற்றை அச்சிட்டு நூல்களாக வெளியிட வேண்டும் எனக் கருதி ஒரு

அச்சகத்தையும் உருவாக்கினார். இதில் கல்லால் செய்யப்பட்ட தேவநாகரி எழுத்துக்களை உருவாக்கி, மரத்தில் செய்யப்பட்ட பிளாக் தயாரித்து (1803-ஆம் ஆண்டு) வடமொழியில் நூல்கள் அச்சிடப்பட்டது. 'நவ வித்யாகலா யந்த்ர சாலா' என்ற பெயரில் பல நூல்கள் அச்சில் வெளிவந்தன. குமார சம்பவ சம்பு, தர்க்கசங்கிரகம், முக்தாவளி, அமரகோசம் போன்ற நூல்களை குறிப்பிடலாம்.

ஓவியச் சுவடிகள்

சரபோசி மன்னரின் முதாதையர்களான இரண்டாம் சகஜி (1684-171 முதலாம் துகோஜி (17[illegible]-1736) ஆகியோர் காலங்களில் தொகுக்கப்பட்ட அசுவசாஸ்திரம், கஜ சாஸ்திரம் ஆகிய வண்ண ஓவியச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு மன்னர் சரபோசியும் தனது ஓவியக்கலைஞர்களின் மூலம் மீண்டும் புதிய வண்ண ஓவியங்களை வரையச் செய்தார். இதில் வடமொழியிலுள்ள மூல சுலோகங்களுக்கு மராத்திய மொழியில் தெளிவுரையும் உரிய ஓவியங்களுடன் வரையச் செய்துள்ளார். முதல் பக்கத்தில் சரபோசி மன்னர் பட்டத்து யானை மீது பவனிவரும் காட்சி அற்புத ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

சரபோசி கால வடமொழி நூல்கள்

சரசுவதிமகால் நூலகத்தில் கிடைக்கும் வடமொழி இலக்கியத் தொகுப்புக்களை ஆராயும்போது ஒருசில நூல்களே புதிய நூல்களாகும். 'குணரத்னாகரம்' என்ற அணி இலக்கண நூல் புதிய படைப்பாகும். இதில் சரபோசி மன்னரையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது. உதாரணமாக தமிழில் அணி இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழும் தஞ்சைவாணன் கோவை போன்று இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்த நூலை இயற்றியவர் திருசிம்மகவி. இவர் இம்மன்னரின் அரசவைப் புலவராவார். இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

மராட்டிய மன்னன் இரண்டாம் சகஜியின் காலத்தில் கல்விக்கொடையாக அளிக்கப்பட்ட திருவிசநல்லூர் என்னும் சகஜிராஜபுரத்தில் வாழ்ந்த வாஞ்சேஸ்வர என்னும் புலவர் இயற்றிய இரண்யகேசி ஸ்ரௌத சூத்ர வியாக்யா என்ற விரிவுரை குறிப்பிடத்தக்கது. இதே புலவர் சரபோசியின் அமைச்சராகத் திகழ்ந்த

காகோஜி என்பவர் மிகக் கொடுமையாக நடந்ததால் அவரைப் பரிகசிக்கும் வகையில் மஉறிஉ சதகம் என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

இவ்விதமாக முன்னோர்களின் இலக்கிய இலக்கண நூல்களைக் காத்தும், அவற்றை எளிதாகப் பயன்படுத்தவும் வடமொழிவாணர்களுக்கு ஆதரவளித்தும், வடமொழிக்கும், அதன் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர் மன்னர் சரபோசியாகும். சென்ற நூற்றாண்டில் வடமொழிக்கு செயற்கரிய செயலைச் செய்த இலக்கிய உலகிலும் வரலாற்றுலகிலும் இறவாப்புகழ் பெற்றவர் சரபோசி மன்னர் எனில் மிகையில்லை.

இரயிசை சரபோசி அவர்கள் மரணத்தின்பேரில் வேதநாயக சாஸ்திரியார் பாடிய கழிநெடில்

அன்னையும் பிதாவோ மன்னவா நீயோ
அதிகமார் என்பதை அறியேன்
அத்தனை தயவாய் தற்காி சனமாய்
அருமைசெய் தேனைக் காத்தாய்

தன்னுயிர் போல மன்னுயிர்க் கிரங்கும்
தருமசிந் தனைகளை யுடைய
சந்திர பதியே உத்தம துரையே
தஞ்சைமா நகரதை விட்டே

என்னையு மறந்தென் பாடலும் கேளாத
எங்ஙனம் சென்றனை ஐயா
என்றுநான் உந்தன் திருமுகம் காண்பேன்
எவர்உனைப் போல்எனை உவப்பார்

பின்னையான் எவ்வாற உன்னைவிட் டிருப்பேன்
பெருங்கலிப் பிணிதவிர்த் துய்வேன்
பேசருந் துளசா திபசர பேந்திர
பெருமைசேர் போசலா திபனே.

இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்து இசைப் புலவர்கள்

ந.விசுவநாதன்
தெலுங்குப் பண்டிதர்
தஞ்சை

இசைக் கலையை மிக நன்றாகப் பரவச் செய்தவர்கள் தஞ்சை நாயக்க மன்னர்கள் மற்றும் மராட்டிய மன்னர்களென்றால் அது மிகையாகாது. தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் இசை, நாட்டியம் போன்ற நூல்கள் பெருமளவில் இடம்பெற்றதற்குக் காரணம் இம் மன்னர்களின் முயற்சியே ஆகும். இந்நூல்களின் வாயிலாகத் தென்னக இசைக்கலையின் படிப்படியான வளர்ச்சியைத் தெரிந்துகொள்ள முடிகிறது. மராட்டிய மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இரண்டாம் சகசி மன்னர், பிரதாபசிம்மன், அமரசிம்மன் மற்றும் இரண்டாம் சரபோசி மன்னர் ஆகியோர். இரண்டாம் சிவாஜி மன்னரின் காலத்திலும் பன்மொழிப் புலவர்கள் தஞ்சையிலேயே வாழ்ந்து இசைக் கலைக்காகவே பாடுபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் சரபோசி மன்னர் காலத்தில் பல சங்கீத வித்வான்கள் இசைக்கலையில் பேரன்புகொண்டு தஞ்சையில் இக்கலை வளரப் பாடுபட்டனர். சரபோசி மன்னரும் இக்கலை வளரப் பல தொண்டுகள் புரிந்தமையும் காண முடிகிறது. சரபோசி மன்னர் காலத்து இசைப் புலவர்களின் வாழ்க்கை வரலாறு சங்கீத சம்பிரதாய பிரதர்சினி மற்றும் நல்லுரைக் கோவை முதலிய பதிப்பு நூல்களில் கிடைக்கின்றன.

கனம் கிருஷ்ணையர்: தமிழிலும், இசையிலும் ஆற்றல் உடையவர். பல்லவி பாடுதலில் கைதேர்ந்தவர். இவரது சிங்காரப் பதங்கள் கரடுமுரடானவை. வர்ணக்கிரமங்களும், கமகங்களும் நிறைந்து காணப்படும். இவரது இருப்பிடம் உடையார்பாளையம். இவர் தியாகப்பிரம்மத்தின் சமகாலத்தில் வாழ்ந்தவர் (சங்கீத சம்பிரதாய பிரதர்சினி பக்கம் 36).

பெரிய திருக்குன்றம் கனம் கிருஷ்ணையர்: உடையார்பாளையம் சமஸ்தான வித்வான். கச்சி ரங்கப்ப உடையார் என்பவர் உடையார்பாளையம் ஜமீந்தாராக இருந்தபோது கனம் கிருஷ்ணையர் உடையார்பாளையம் சமஸ்தான வித்வானாக இருந்தார். கிருஷ்ணையரின் பாடல்களும், கீர்த்தனங்களும் உண்டென்று திரு.உ.வே.சா. அவர்கள் கூறுகிறார் (நல்லுரைக்கோவை, ப.39 இந்த இசைப் புலவரின் முத்திரை மன்னாரு ரங்க முத்திரையாகும் (சங்.ச.பிர. ப.11).

வீணை பெருமாளையர்: இவர் தஞ்சாவூர் சமஸ்தான பண்டிதர். வீணை வாசிப்பதில் அசாதாரணமான பயிற்சி பெற்றவர். வீணை காளத்தி ஐயாவின் வமிசத்தினர். ஆந்திரர் பரம்பரையாக வந்த இசைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். கன ராகங்களில் உள்ள தாளங்கள் வாசிப்பதில் வல்லவர். இரக்தி ராகங்கள் ஒவ்வொன்றையும் பல நாட்கள் விடாமுயற்சி செய்து சிரமமாக வாசித்துப் பூர்த்தி செய்தவர். அண்டை மாநிலங்களிலுள்ள சமஸ்தானங்களில் வீணை வாசித்துப் பல்லக்கு, ஆபரணங்கள் முதலிய சன்மானங்கள் பெற்றனர். பெரியவர்களின் கீர்த்தனங்களில் காணும் சாகித்ய வகைகளை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ராகமாக மட்டும் வாசித்துக் காட்டுவார். சௌராஷ்டிரம், சாவேரி ராகங்களில் அடதாள தான வர்ணங்களைக் கையாண்டுள்ளார்.

பச்சைமிரியன் ஆதிப்பையர்: உடையார்பாளையம் யுவரங்க உடையார் காலத்தவர். பூலோக கர்தர்வ நாராயணசாமி ஐயருடைய ஆசிரியர். விரிபோணி வர்ணத்தை இயற்றியவர். தெலுங்கர். தஞ்சாவூர் சமஸ்தான வித்வான். உடையார்பாளைய சமஸ்தான வித்வானாகவும் பணியாற்றி பல சங்கீத வித்வான்களுக்கு ஆசிரியராக விளங்கியவர். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மகாராஷ்டிரம் போன்ற மொழிகளில் கீர்த்தனங்கள் இயற்றியவர். யுவரங்கப்ப உடையார் மீதும் கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிறார் (ந.உ. கோ. பக்கம் 34-35). வீணை கிருஷ்ணையர் என்பவர் ஆதிப்பையரின் மூத்தமகன் ஆவார். ஆதிப்பையரின் கிருதிகளில் ஸ்ரீ வேங்கடரமண முத்திரை இருக்கும் பக்தி ராகங்கள், தேசிராகங்களில் அக்கிருதிகள் அடங்கியிருக்கும்.

பல்லவி கோபாலையர்: தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். தஞ்சை இருப்பிடமாகும். தெலுங்கு மொழியை நன்கறிந்தவர். பாடகர். எவரும் இப்புலவர் முன்பாகப் பல்லவி பாடுவதற்கு அஞ்சுவர். ஆகையால் பல்லவி கோபாலையர் எனும் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டவரெனலாம். அடதாள வர்ணம், வனஜாக்ஷி எனும் கல்யாணி ராக தானவர்ணம் இப்புலவரால் இயற்றப்பட்டதாகும். காம்போதி, தோடி ராகங்களில் உள்ளதுமான அடதான வர்ணங்களை இவர் இயற்றியிருக்கிறார். வேங்கட முத்திரை இப்புலவரது கிருதிகளின் முத்திரையாகும். சரபோசி மன்னரது காலகட்டத்தில் வாழ்ந்தவர் (சங்.ச.பிர.26).

<u>பூலோக கந்தர்வ நாராயணசாமி ஐயர்</u>: தஞ்சையில் உயர்ந்த மதிப்பைப் பெற்றவர். தஞ்சையிலும் உடையார்பாளையத்திலும் போற்றப்பட்டவர். யுவரங்கப்ப உடையார் சமஸ்தான வித்துவானாகவும் இருந்தார் (ந.உ.கோ. பக்.3-34).

<u>திருவிடைமருதூர் இராமதாசர்</u>: மராட்டிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். சமஸ்கிருதம், மராட்டி, உத்தராதி மொழிகள் அறிந்தவர். கர்நாடக இசையிலும் ஹிந்துஸ்தானி இசையிலும் தேர்ச்சி பெற்றவர். சமர்த்த ராமதாசர் மடத்துச் சம்பிரதாயினர். இந்த இராமதாசர் லக்ஷ்மணசுவாமி என்ற பெயருள்ளவராக இருக்க வேண்டுமென எண்ணத்தக்கது.

<u>தோடி சீதாராமய்யா</u>: தோடி ராகத்தைத் தனது ஏகபோக சொத்தென்று உரிமையாக்கிக் கொண்டவர். இந்தத் தோடி ராகத்தை அடமானம் வைத்துக் கடன் பெற்றவர். பின்பு சில பிரபுக்கள் இப்புலவரின் அடமானக் கடனை மீட்டனர். இந்தத் தோடி சீதாராமய்யா சரபோசி மன்னர் காலத்தவர்.

<u>சங்கராபரணம் நரசய்யா</u>: சங்கராபரண ராகத்தைத் தமது சொத்தென்று உரிமையாக்கிக் கொண்டார். இவரது திராவிடப் பதங்கள் கிடைக்கின்றன எனத் திரு.சுப்பராம தீட்சிதர் அவர்கள் கூறுகிறார்.

<u>குப்புசுவாமி ஐயா</u>: தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். அமரசிம்மன் மற்றும் சரபோசி மன்னரது ஆரம்பக் காலத்தில் வாழ்ந்தவர். இவரது கீர்த்தனங்கள் பக்திரசம் ததும்பியதாக இருக்கும். சிருங்காரச் சுவை கொண்ட பதங்களையும் இயற்றியிருக்கிறார். தெலுங்குமொழி கற்றவர். வரத முத்திரை இவரது கிருதிகளில் இருக்கும்.

<u>துரைசாமி ஐயா</u>: தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். சங்கீதத்திலும், தெலுங்கு மொழியிலும் வித்துவானாக விளங்கினார். இந்த இசைப் புலவர் சரபோசி மன்னர் காலத்திலும், சிவாஜி மன்னர் காலத்திலும் வாழ்ந்த புலவர்.

<u>சௌக்கம் சீனுவையர்</u>: தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். சௌக்க காலத்தில் இப்புலவர் போல் ராகாலாபனை செய்பவர் எவரும் இல்லாத காரணத்தால் இப்பட்டப்பெயர் (சௌக்கம்) இப்புலவருக்குப்

பிரபுக்களால் கிடைத்துள்ளது. இப்புலவர் சரபோசி மன்னர் காலத்திலும் சிவாஜி மன்னர் காலத்திலும் வாழ்ந்தவர்.

சொண்டி வேங்கடரமணய்யா: சொண்டி வேங்கடசுப்பையரின் புதல்வர். சரபோசி மன்னர் காலத்தவர். தெலுங்கு மொழியிலும், கர்நாடக சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றவர். இக்குடும்பத்தார் வேங்கடமகியின் சம்பிரதாயிகள். வேங்கடமகியால் கூறப்பட்ட ராகாங்காதி ராக சம்பிரதாயங்களை இக் குடும்பத்தார் விசேடமாக அறிந்தவர்கள்.

வேங்கடராமய்யா: தெலுங்கர். இசையிலும் தெலுங்கு மொழியிலும் வல்லவர். இப்புலவரின் கீர்த்தனங்களைப் பாடுவதற்குச் சில பாடகர்கள் சிரமப்படுவார்கள். அதனால் 'இரும்புக்கடலை வேங்கடராமையா' எனப் பாடகர்கள் இப்புலவருக்கு பெயர் சூட்டினார்களாம். ஆதிப்பையரின் இறுதிக் காலகட்டத்தில் வாழ்ந்தவர். கோபாலகிருஷ்ண முத்திரையிட்ட வெங்கடராமையாவின் கீர்த்தனங்கள் உள்ளன என்கிறார் சுப்பராம தீட்சிதர் அவர்கள்.

கவி மாத்ரு பூதன்னா: தெலுங்கர். இசைப் புலவர். நாடக ஆசிரியராகவும் திகழ்ந்தார். திரிசிரபுரம் சுகந்தி குந்தலாம்பாள் பக்தர். அம்பாள் அநுக்கிரகத்தால் பக்தி மற்றும் நீதிப்பதங்களை இயற்றியவர். பிரதாபசிம்மன் துளஜா, அமரசிம்மன் போன்ற மன்னர்களது காலத்தில் வாழ்ந்தவர். பிரதாப சிம்ம மன்னரால் கௌரவிக்கப்பட்டுச் சன்மானங்கள் பெற்றவர். அமரசிம்மன் அவையில் பாரிஜாத நாடகத்தை அரங்கேற்றியவர். இப்புலவர் சரபோசி மன்னரது காலத்து முற்பகுதியில் முக்தி அடைந்தவர்.

மெலட்டூர் வெங்கடராம சாஸ்திரிகள்: தெலுங்கர். இசைப்புலவராகவும், நாடக ஆசிரியராகவும் விளங்கினார். சரபோசி மன்னர் மற்றும் சிவாஜி மன்னர்களது காலகட்டத்தில் வாழ்ந்தவர். இப்புலவர் இயற்றிய பிரகலாத சரித்திரம், அரிச்சந்திரன் நாடகம், உஷா பரிணயம், மார்க்கண்டேய நாடகம் ஆகியவை மெலட்டூர், சாலியமங்கலம் போன்ற ஊர்களில் இன்றும் நடைபெற்று வருகின்றன. சிவாஜி மன்னர் காலத்திய நாடக ஆசிரியர் சாலியமங்கலம் பஞ்சநதப் பாகவதர். சிவாஜி மன்னரால் கௌரவிக்கப்பட்டவர். சரபோசி மன்னரின் இறுதிக்காலத்தில் வாழ்ந்தவர் பஞ்சநத பாகவதர். வேங்கடராம

சாஸ்திரிகள் மற்றும் பஞ்சநத பாகவதர்களாலேதான் பாகவதமேளா முறை நன்கு பிரபலமாயிற்று.

திருவிடைமருதூர் பிரதாபசிம்மன்: தஞ்சை அமரசிம்மனின் புதல்வர். சமஸ்கிருதம் மராட்டிய மொழிகளில் புலமை படைத்தவர். சங்கீதத்தில் அன்பு செலுத்தியவர். மிருதங்கம் வாசிப்பதில் கைதேர்ந்தவர். மராட்டிய மொழியில் நவரத்தின-மாலிகை இயற்றியவர் (இராக தான மாலிகையாக) இக்கிருதியில் சுவரங்கள் முதலியன வெகு அழகாக இருக்கும். சரபோசி மன்னர் காலத்தில் சிறுவனாக இருந்த இவர் சிவாஜி மன்னர் காலத்தில் கைவல்ய பதவியை அடைந்தார். இவருடைய காலத்தில் தன்னுடைய மூதாதையரின் வரலாற்றை எழுதி வைத்தவர்.

உடசே கோவிந்தாசாரியார்: சங்கீத ரத்னாகரத்தில் உள்ள நிருத்யாத்தி-யாயத்தை மராட்டி மொழியாக்கம் செய்தவர். நிரூபணங்கள் இயற்றியவர். சங்கீதவித்வான். கன்னடம் தாய்மொழியாகக் கொண்டவர்.

இரங்கநாதகவி: இசை நாட்டிய நாடகங்களில் பங்கேற்றவர். சரபோசி மன்னர் மற்றும் சிவாஜி மன்னர் காலத்தில் வாழ்ந்தவர். இவரது மராட்டிய நாட்டியப் பதங்கள் கைசிகிவிருத்தியில் இருக்கும்.

சரபோசி மன்னர் காலத்தில் மும்மூர்த்திகள் வாழ்ந்து இசைத்தொண்டு புரிந்தமை யாவரும் அறிவார்கள். தியாகையர், சியாமா சாஸ்திரிகள், முத்து சுவாமி தீட்சிதர் போன்ற மும்மணிகளால்தான் கர்நாடக சங்கீத உருப்படிகள் நமக்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. இது போலவே சரபோசி மன்னர் காலத்திலும் பதம், தரு, சலாம்தரு, ஜக்கிணிதரு சப்தக் கோர்வை, தில்லானா முதலிய பதங்களும் மிகையாகக் கிடைக்கின்றன. சரபோசி மன்னர் காலத்தில் வாழ்ந்த தஞ்சை நால்வர் நாட்டியக் கலை வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள். இந்நால்வர்களால் கர்நாடக இசை நாட்டிய உருப்படிகள் பல வளர்ந்துள்ளன. சின்னையா, பொன்னையா, வடிவேலு, சிவானந்தம் போன்ற நால்வரும் தஞ்சை அரண்மனையோடு நெருங்கியத் தொடர்பு கொண்டவர்கள்.

இரண்டாம் சரபோசி மன்னர் காலத்தில் ரூபகக்கலை நன்றாக வளர்ந்துள்ளது. அதில் அபூர்வ ராகக் கிருதிகளைக் காணலாம். பரஜு, பாடி, கும்ம காம்போதி, ஜுஜாபத்தி, மாண்ட், திங்கலா, கௌளிபந்து போன்ற ராகங்கள் மிகச் சிறப்பாகத் தஞ்சை அரண்மனை நாடகச்சாலை நாட்டிய நாடகங்களில் கையாளப்பட்டுள்ளது. தஞ்சை இசைப் புலவர்களையும், தஞ்சை அரண்மனை நாடகச்சாலைக் கலைஞர்களையும் போற்றிப் புகழ்வோமாக. சரபோசி மன்னரின் பிறந்தநாள் விழாக் காணும் இந்நன்னாளில் சரபோசி காலத்தில் வாழ்ந்த அத்தனை இசைப்புலவர்களைப் போற்றிப் புகழுவோமாக.

சரபோசியின் காசி யாத்திரை

கே. இராமதிலகம்
நூலகர்
சரசுவதிமகால் நூலகம்
தஞ்சாவூர்

மாமன்னர் சரபோசி தலயாத்திரையாக சோழ நாட்டிலுள்ள தலங்கள் பலவற்றிற்கும் சென்று இறைவனை வழிபட்டவர் என்பதை 'சரபேந்திர தீர்த்தாவளி' எனும் நூல் குறிப்பிடுகின்றது. 1801-ஆம் ஆண்டு மன்னர் சோழநாட்டுத் தலப் பயணத்தை மேற்கொண்டதை இந்நூல் குறிக்கும்.

கி.பி. 1820-22 ஆம் ஆண்டுகளில் இவர் காசிக்கும் இராமேசுவரத்திற் பயணம் செய்தார். இச்செய்தி மோடிச் சுவடி மூட்டை எண் 188 சியிலும் 158 சி யிலும் காணக் கிடைக்கின்றது. சரபோசி காசிப் பயணத்தைச் சுமார் 18 மாத காலமும் இராமேசுவரத்தை 1 மாத காலமும் மேற்கொண்டமை விளங்கும். மற்றும் (188 சி.11.203) குறிப்புகளிலிருந்து அவருடைய பயணத்திற்குரிய திட்டம் ஒன்று; மற்றொன்று தாம் பயணத்தை முடித்துத் திரும்பும் வரை தஞ்சையில் அரசு எப்படி இயங்க வேண்டும் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழக மோடி ஆவண மூட்டை எண் 1281 இலும் 'சரபோசி காசி யாத்திரை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பயணத்திட்டம்: காசிக்குச் சென்றுவருவதற்குப் பெரிய அளவில் சரபோசி திட்டம் தீட்டியிருக்கக்கூடும். முதலில் தாம் காசி யாத்திரையை முடித்துத் தஞ்சைக்குத் திரும்பும் வரையில் நடக்க வேண்டிய விபரங்களைப் பற்றி 32 செய்திகள் உள்ளன. இவர் காசிக்குப் புறப்படுவதற்கு முன்னர்த் தம் ஒரே மகனாகிய சிவாஜியைப் பட்டாபிஷேகம் செய்து ரெசிடெண்டு முதலியவர்களிடம் இதனை அறிவித்து அதற்கான ஒப்புதலும் பெற்றார். தாம் இல்லாத காலங்களிலும் எல்லாக் காரியங்களும் தடையின்றி நிறைவேறும் வண்ணம் உத்தரவு பிறப்பித்துள்ளார். அவை யாவன:

1. பண்டிகை திருவிழா காலங்களில் அரண்மனைவாசிகள் நடந்து கொள்ள வேண்டிய முறை.
2. அரண்மனைவாசிகளுக்கு வழக்கம்போல் கொடுக்க வேண்டிய மொயின், தானதர்மச் செலவு, உலுப்பை பற்றிய விரம்.

3. ஆங்கில அரசு அலுவலர்களுடன் அரண்மனைவாசிகள் நடந்துகொள்ள வேண்டிய முறை.
4. அரண்மனை பணியாளர்கள் அவர்தம் சம்பளம் பற்றிய விவரம்.
5. அரண்மனை வரவு செலவு கணக்கும் ரெசிடெண்டின் பங்கும்.
6. நீதி விசாரணை
7. காசிப் பயணத்திற்கு உடன்வருபவர்களுக்கான சம்பளத்தை அவரவர் வீட்டில் கொடுத்து அவர்களின் சுபாசுபங்களை கவனித்துக் கொள்வது.

காசியை அடைந்தமை

மன்னர் 10.7.1821 முற்பகல் 8 மணிக்குள் காசியை அடைந்தார். காசியில் காசித்தம்பிரானுடைய மடத்தில் இறங்கினார். மழை காலமாக இருந்ததால் அத்தலத்தில் விஜயதசமி வரையில் தங்கியிருக்கத் தீர்மானித்தார். பின்னர் செப்டம்பர் 13-இல் புறப்பட இருந்தவர் மழை காரணமாகப் பயணத்தை நிறுத்தினார். 23.10.1821 இல் காசியைவிட்டு பிரயாகைக்குப் புறப்பட்டார்.

பூரி ஜகந்நாத்

20.1.1821 தேதி கொண்ட ஆவணம் பூரிஜகன்நாத் எனும் திருத்தலத்தி மன்னர் புஷ்பாஞ்சலி செய்தமை கூறுகிறது. பூரியில் ஒரு கட்டளை நியமிக்க எண்ணிய அரசர் ஆண்டுதோறும் ரூ.700 அனுப்பிவைப்பதாகவும், அத்தொகையைக் கொண்டு நாடோறும் 12 பானைகள் சாதமும் பருப்பும் கறிகளும் சமைத்து நிவேதித்து, அந் நிவேதனத்தை குருடர்கள், முடவர்கள் முதலியோருக்கு வழங்க வேண்டும் என்னும் திட்டம் ஏற்படுத்தினார்.

கல்கத்தாவில்

அந்நாளில் கவர்னர் ஜெனரல் தங்கியிருந்த தலைநகர் கல்கத்தாவாகும். அங்கு ஸல்காகாட் என்ற இடத்தில் மன்னர் தங்கினார். அங்கு சென்ற நாளே கவர்னர்ஜெனரலைப் பார்த்தார். நலன் விசாரித்துக் கொண்டனர்.

கல்கத்தாவுக்குச் சென்றபொழுது ஸல்காகாட்டில் அவ்ஷர் ஜட்ஜ் ப்யாரவேல் அழைத்துச் சென்றார். இது 23.2.1821 இல் நிகழ்ந்தது.

26.2.1821 இல் கல்கத்தாவுக்கு சென்றுவர இரண்டு கப்பல்கள் ஒதுக்கப் பெற்றன. கல்கத்தாவை சுற்றிப்பார்க்க 4 சாரட் வண்டிகள் ஏற்பாடு செய்யப் பெற்றன.

உடன் சென்றவர் எண்ணிக்கை

18.4.1821 ஆம் தேதி எழுதிய கடிதத்தில் "யாத்திரையுடன் 3000 பேர் வந்திருக்கிறார்கள்" என்றதிலிருந்து உடன் சென்றவர் எண்ணிக்கை அறியலாம். மருத்துவ வசதிக்காக மன்னர் காசி யாத்திரைக்குச் சென்றபோது மருந்துகள் அடங்கிய 8 பெட்டிகள் எடுத்துச் சென்றார் என்றும் மருந்துகளின் பெயரும் தெரியவருகிறது. மற்றும் மன்னருடன் டாக்டர் ஸடன் என்ற ஆங்கில மருத்துவரும் சென்றார்.

மன்னர் தஞ்சையை அடைந்தமை

23.4.1822 இல் எழுதிய மடலின்று 24.4.1822 இல் சரபோசி மன்னர் தஞ்சையை அடைந்தார் என அறியப்பெறுகிறது.

காசி யாத்திரையின் பயன்

26.1.1821 இல் இஸ்கன் சுட்டிலிருந்து அனுப்பிய ஆணையில் "ஆங்கிலக் கதைகளை மராட்டிய மொழியில் தேவநாகரி எழுத்தில் அச்சிட்ட புத்தகம் நவவித்யா கலாநிதி பள்ளியில் இருக்கிறது. அதில் ஒரு புத்தகத்தை ஸவாரி முகாமுக்கு அனுப்பவும்" என்றிருப்பதால் தஞ்சை சரசுவதி மகாலில் உள்ள நூல்களையும் பிறர் அறியச் செய்தார் என்பது உறுதிபெறும். 18.4.182 முகாம் உறஸங்கஞ்ச் என்ற ஊரிலிருந்து எழுதிய குறிப்பின்று சில அபூர்வ காட்சிகளைத் தீட்டுவதற்கு ஓவியம் வல்லான் ஒருவனை திங்கள் ஒன்றுக்குச் சம்பளம் 10 புலி வராகன் கொடுத்து நியமித்தமை அறியலாம். 23.3.1821 முகாம் புரஸ்தாபாடிக்கு அருகிலுள்ள உறஸீம்பூர் - "அக்க்யாத் என்றும் மஞ்சள் நிறமுள்ள பழங்கள், 'பொதச்சீ' வட்டமான கருப்பாயிருக்கும் பழங்கள்; வங்காளத்தில் கிடைப்பவை; நம் தேசத்தில் இல்லாதவை - இவற்றின் விதைகளை சேகரித்துப் பரங்கி தபாலில் அனுப்பியிருக்கிறது. கிடைத்தவுடன் எல்லாத் தோட்டங்களிலும் போட்டு அம்மரங்களை விருத்தி செய்கிறது.

4.11.1821 முகாம் கயை. நம் தேசத்தில் இல்லாதது.

இந்தேசத்தில் நிறையவிருக்கும் 'தேன்டல்' என்றும் வெள்ளரி தினுசு புடலங்காய் போன்று இருக்கிறது. அதன் விதையும் வெள் கொண்டைக்கடலையும் புரங்கி தபாலில் அனுப்பியிருக்கிறது. இவற்றை ரெசிடெண்டுக்குக் கொஞ்சம் கொடுத்து எஞ்சியதை சர்காருடைய தோட்டங்களில் போட்டு அபிவிருத்தி செய்கிறது. சின்ன சுட்டு பாகற்காய் விதை 10 அனுப்பியிருக்கிறது".

18.4.1821 முகாம் முஸ்கேரா சமீபம் உறவன்கஞ். இப்பொழுது குலேகைரா என்னும் பார்வைக்கு அழகாய் இருக்கும் மலரின் படம் ஒன்று அனுப்பியிருக்கிறது. அதை உறுஜூரின் ஸலாமுடன் ரெசிடெண்டு சாயேபிடம் சேர்ப்பிக்கிறது. இப்பூவின் விதையும் தனித்தனி 2 பொட்டலங்களும், கத்தரிக்-காயின் பொட்டலம் ஒன்றும் அனுப்பியிருக்கிறது. ரெசிடெண்டு சாயேபு தோட்டத்தில் போடுவதற்கு அவருக்கு வேண்டிய அளவு கொடுத்து எஞ்சியவற்றை சர்காரின் தோட்டங்களிலெல்லாம் போட்டு அபிவிருத்தி செய்கிறது.

12.3.1821 முகாம் மிரஜாபூர்: வீரல என்னும் பக்ஷி ஒரு ஜோடி தாஸ்தான் மஉறால் தோட்டத்திலும் எஞ்சிய 4 சிவகங்கைத் தோட்டத்தில் விட்டு அவற்றுக்கு நாடோறும் உயிருள்ள மீன்களையும், அரிசி, நெற்சாதம் அளித்து விருப்பப்படி தனியாக விட்டிருக்கச் செய்ய வேண்டும்.... சாமா என்னும் பக்ஷி 5உம் சர்காரில் வைத்துக் கொள்கிறது.

மேலே கண்ட எழுத்துச் சான்றுகளால் பலவகையான மரங்கள், செடிகள் ஆகியவற்றின் விதைகளை அனுப்பித் தஞ்சையில் பயிரிடச் செய்தார் என்றும், பலவிதமான பறவைகளையும் கொணரச்செய்து வளரச் செய்தார் என்றும் அறியலாம்.

<u>பட்டு வளர்ப்பு:</u>

23.3.1821 முகாம் புரந்தாபாதக்குச் சமீபமுள்ள உறஸிம்பூர் – பட்டு வளர்ப்பு பற்றிய விளக்கங்கள் அறியப் பெறுகின்றன.

"இங்கே வங்காள தேசத்தில் உற்பத்தியாகிற பட்டு ... வாங்கி உள்ளுள்ள பூச்சியுடன் அனுப்பியிருக்கிறது. அதில் மஞ்சள் நிறமுள்ளதும், கொஞ்சம் மஞ்சளாக நிறமுள்ளதும் வெள்ளை இம்மாதிரி மூன்று வகைகள் உள்ளன.

சரபோசி மேற்கொண்ட யாத்திரையின் பயனாகத் 'திரிஸ்தல-யாத்ரேச லாவண்ய' எனும் லாவணி நூல் உருவாயிற்று.

காசியில் 'கேதார்காட்' கோயில் திருப்பணி செய்தார். விச்வேச்வரர்க்கு வெள்ளி கலசம் செய்தளித்தார். 'மணிகர்ணிகாகாட்' கட்டினார். பெரியதொரு சத்திரத்தைக் கட்டினார். தஞ்சையில் கீழவீதியில் மணிகர்ணிகேச்வரர் கோயில் எடுப்பித்தார். 1827 இல் கோயில் கட்டி முடிக்கப்பெற்று குடமுழுக்கும் செய்யப்பெற்றது. இக்கோயிலின்கண் உள்ள மூல இலிங்கமும், விநாயகர் சந்நிதியில் உள்ள இரண்டு இலிங்கங்களும் வேறு எங்கும் இல்லாதவகையில் பிரும்மா, விஷ்ணு மகேஷ்வரர் ஆகிய மும்மூர்த்திகள் எழுந்தருளியுள்ள இலிங்க வடிவங்களும் காசியிலிருந்து கொணர்ந்தவை என்பர்.

சோழமண்டலத் தலைவர்கள்

தஞ்சையில் ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர்கள் அனைவரும் தாம் சோழ நாட்டை ஆட்சிபுரிவதாகவே தம் கல்வெட்டுக்களில் பொறித்தனர்.

'அன்பத்தாறு தேசத்துக்கும் மேலான தெய்வபூமியான தஞ்சை மாநகரத்திலிருந்து சோழமண்டல ராச்ய பரிபாலன் பண்ணுகுற நாளையில்'

'ராசகெம்பீர வளநாட்டு உறையூர்ச் சிங்காதனத்துச் சாவடியான சோழமண்டலத்தில் அளகாபுரியென்னும் தம்முடையதான தஞ்சாவூரான தஞ்சை நகரத்தில்'

'வீரசிம்ம வரந்தினால் சோழ தேசத்தில் சிம்மாசனத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிற க்ஷத்திரி பூபாலர்'

'தஞ்சபுரி நகரத்தில் சோழஸ்ரீயாய் அரசாட்சி பண்ணும் நாளில்'

என்பன தஞ்சை மராட்டிய மன்னர்களின் கல்வெட்டுத் தொடர்களாகும்.

— செ.இராசு

சரபோசியின் மருத்துவத் தொண்டு

டாக்டர் வே.இரா.மாதவன்
இணைப் பேராசிரியர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 005

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் மக்கள் நலவாழ்வில் தங்களை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவர்களாவர். கலை வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட இவர்கள் மக்களுக்காகப் பெருந்தொண்டாற்றியுள்ளனர். குறிப்பாக, இரண்டாம் சரபோசி மன்னர் தம் முழுநேரத்தையும் கலைகளின் வளர்ச்சிக்காகவே செலவிட்டார் என அறிகிறோம். இவருடைய ஆங்கில அறிவும், பொதுஅறிவும், பிறமொழி அறிவும் இவரைப் பல துறைகளில் ஆர்வம் கொள்ளச் செய்தது எனலாம். காட்டாக, மருத்துவக்கலை வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டு மகத்தானதாகும்.

மருத்துவ நிலையம்

பிற கலைகளுடன் ஆயுர்வேத, சித்த, யுனானி மற்றும் அலோபதி மருத்துவ முறைகள் சரபோசி காலத்தில் வழக்கில் இருந்தன. தன்வந்திரி மகால் தவிர, சர்க்கார் ஆரோக்கிய சாலையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டிருந்தது என்பதை ஆவணங்களால் அறிகிறோம். ஆரோக்கிய சாலையில் மருத்துவ முறைகளைக் கற்பித்தலும், நோயாளிகளைக் குணப்படுத்தலும் ஆகிய இரு தொழில்களும் நடைபெற்றதாக அறிகிறோம். மருத்துவப் புத்தகங்கள் முதலியனவும் அவ்விடத்தில் தயாரிக்கப்பட்டன (138சி-4-2, 160சி-54). அங்குத் தங்கிப் படித்த மாணவர்களுக்கு உணவும் வழங்கப்பட்டது (138சி-4).

மக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டிருந்த இம் மருத்துவ நிலையத்தில் பலதரப்பட்ட மருத்துவர்கள் இருந்தனர் (138சி-4-2). முக்கிய மருத்துவர், குழந்தை மருத்துவர், கண் மருத்துவர், விஷ மருத்துவர் (138சி-67 பெண் மருத்துவர் (170சி-29-4) என இவர்கள் தத்தம் துறையில் சிறப்புப் பெற்றிருந்தனர்.

நோயாளிகளுக்குப் பத்தியம், கசாயம், கல்கம் செய்து கொடுப்பதற்கென நியமிக்கப்பட்ட பெண்களின் பெயர் மற்றும் அவர்களுக்கான ஊதியம் போன்றவற்றையும் அவ் ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக, காய்ச்சல், கைகால் முறிவு, சிரங்கு, காயம், உடற்சூடு, உடல்வலி, மஞ்சள் காமாலை, கண்நோய், விஷக்கடி ஆகியவை நீங்கவும், மகப்பேறு உண்டாகவும், கர்ப்ப காலத்திலும், மகப்பேறு ஆன பின்பும் மருத்துவம் செய்யப்பட்டது.

இவ்வகையில் அறுபதுக்கும் மேற்பட்ட மருத்துவர்களின் பெயர்கள் தெரியவருகின்றன (காண்க: பின்னிணைப்பு-1). இவற்றால் மன்னர் சரபோசி சாதி, மத, இன, மொழி வேறுபாடற்ற முறையில் மருத்துவ மேதைகளைப் பணிக்கமர்த்தி மருத்துவத் தொண்டிற்கு ஆவன செய்தமையை உணரலாம்.

<u>மருத்துவ நூல்கள்</u>

மருத்துவச் சாலைக்காக மன்னர் மருத்துவ நூல்களை எழுதச் செய்யவும் விலைக்கு வாங்கவும் நிறைய பணத்தைச் செலவிட்டனர் எனத் தெரிகிறது (108சி-99-2, 160சி-58-60). காட்டாக,

> "ஹீஜீரின் வைத்தியர் அப்பாசாமியின் மூலமாக ராமதேவர் என்னும் வைத்திய சாஸ்திரத்தைக் கர்தி செய்ததற்காக 15 பணம் மஹால் கஜானாவிலிருந்து கொடுக்கிறது"
>
> "ஸரஸ்வதி மஹாலில்-தமிழ் எழுத்து தமிழ் பாஷையினால் வைத்திய விஷயம் ஸாஹித்தியம் செய்து கொடுத்ததற்காக திருவேங்கடம் எடுகள் சுமார் 145க்கு சக். 4-3½".
>
> "வைத்திய சாலையில் புத்தகமெழுதிய எழுத்தாளருக்கு சக். 4-6½"

என இவ்வாறு பல குறிப்புகள் ஆவணங்களில் கிடைக்கின்றன.

தன்வந்தரி மகாலில் இருந்த மருத்துவர்கள் கொடுத்த மருத்துவக் குறிப்புகளை வைத்துக் கொண்டு தமிழில் எளிய பாடல்களாக ஆக்கித் தருமாறு சரபோசி மன்னர் கேட்டுக் கொண்டதற்கிணங்க வேலாயுத உபாத்தியாயர், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் போன்ற பலர் மருத்துவ நூல்களை எழுதி அளித்துள்ளனர் (காண்க: பின்னிணைப்பு-2). இவை சரபேந்திரர் வைத்திய முறைகள் என்ற பெயரில் வெளிவந்துள்ளன.

அனுபவம் மிக்க மருத்துவர்கள் மருத்துவச் சாலையில் கையாண்டு, ஆய்வு செய்து வழங்கப்பட்ட மருந்து செய்முறைகளையே இவர்கள் இந்நூல்களில் கூறியுள்ளனர்.

மன்னர் தொகுத்த ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மருந்து செய்முறைகளில் சுமார் 900 செய்முறைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை மராத்தி மொழியில் பெயர்த்தெழுதச் செய்துள்ளார். அவை சரபேந்திரர் வைத்திய ரத்னாவளி என்ற பெயரில் உள்ளன.

இவையேயன்றி முற்காலத்து, அகத்தியர், போகர், மச்சமுனி, தன்வந்திரி போன்ற சித்தர்களின் சிறப்பான மருத்துவ நூல்களையும் ஓலைச் சுவடிகளில் பெயர்த்தெழுதும்படி இம்மன்னர் செய்துள்ளார். இப்பணி 1800 முதல் 1828 வரையில் நடைபெற்றது என்பதற்கு அச்சுவடிகளின் பின்குறிப்புகளே சான்றுகளாகும்.

வைத்திய திரட்டு (சு.எண் 43.) போன்ற நூல்கள், பல நூல்களின் கலம்பகமாகவும் எழுதி அளிக்கப்பட்டுள்ளன.

மருத்துவச் சுவடிகள் மட்டுமின்றி ஐநூற்றிற்கும் மேற்பட்ட ஆங்கில, பிரெஞ்சு, லத்தீன் மருத்துவ நூல்களை மிகுந்த பொருட் செலவு செய்து சரபோசி மன்னர் வெளிநாட்டிலிருந்து சேகரித்து வைத்துள்ளார். இவற்றுள் பல மருந்து அகராதிகளும், மருந்தியல் மற்றும் அறுவை மருத்துவ நூல்களும், தாவரவியல், உடற்கூறு தொடர்பான நூல்களும் உள்ளன. இந்நூல்களை முழுவதுமாகப் படித்தாராய்ந்த சரபோசி மன்னர் அங்கங்கே தன் குறிப்புகளையும் எழுதி வைத்துள்ளார். இவற்றால், இவர் எல்லா மருத்துவக் குறிப்புகளையும் ஒப்பிட்டாய்ந்து இத்துறையில் மிகக் கவனமாகச் செயலாற்றினார் என்பது நன்கு விளங்கும்.

இவ்வாறே, மருந்து மூலிகைகள், மனித உடற்கூறு, கண் நோய்கள், யானை, குதிரை போன்ற விலங்குகள் பற்றிய படங்களை மருத்துவ நோக்கில் வரையச் செய்த சரபோசி மன்னர் அவற்றை மகாலில் பாதுகாத்து வைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மருந்துகள்

மன்னர் சரபோசி காலத்தில் செய்யப்பட்ட சொர்ணபூபதி, திரைலோக்கிய சிந்தாமணி, ரசபூபதி, பஞ்சாமிர்த பற்படி ஆகிய நான்கு கட்டு மாத்திரைகள் மகாலின் காட்சிப் பேழையில் இடம்பெற்றுள்ளன. இவை பல ஆண்டுகள் பயன்தரும் வீரிய குணம்பெற்ற மருந்துகளாம். இவற்றின் ஒருபுறம் மாத்திரையின் பெயரும், மறுபுறம் குளிகை செய்த தேதியும் (கி.பி.1808, 181[illegible]) குறிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மிகச் சிறந்த மருந்துகளை மிகுந்த செலவு செய்து தயாரித்த மன்னர் சரபோசியவர்கள் மக்களுக்காக அவற்றை இலவசமாகத் தகுந்த வைத்தியர்களுக்கு அளித்ததாகவும் கூறப்படுகிறது.

சுவர்ணமால்ய வசந்தம், வசந்த குசுமாகரம், ராஜமிருகாங்கம், சுவர்ண காலகண்டம், பஞ்சாமிருதம், ரசபூபதி, ராஜபூபதி, ஹேமபூபதி, கனகசுந்தரரசம், திரைலோக சிந்தாமணி, ஜவஹிரமோஹரார், ரத்னாதி மாத்திரை, சந்திர கலாரசம் போன்ற மருந்துகள் இத்தகையனவாம்.

தன்வந்தரி மகாலில் செய்யப்பட்ட மருந்துகள் தூய்மையாகவும் எளிமையாகவும் செய்தளிப்பதற்கு ஏற்ற வகையில் மன்னரே மூலிகைத் தோட்டத்தை மருந்துச் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தியதையும் அறிகிறோம். மேலும், இவர் ஒவ்வொரு நோயாளியிடத்தும் தனிக்கவனம் செலுத்தி, மருந்தளித்து, ஆராய்ந்து தெளிந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு, அக்காலத்தில் எழுதி வழங்கப்பட்ட மருத்துவக் குறிப்புகள் பல சான்றுகளாக அமைகின்றன.

மேலும், வெளியிடத்திலிருந்து மருந்துகளை வாங்கியதற்கும் அரவை மருத்துவம் செய்தமைக்கும் பின்வரும் சில குறிப்புகள் சான்றளிக்கின்றன.

"Resident Captain Johnphype அவர்கள் மூலம் சென்னையில் அங்கு கோ-விடம் மருந்துகளையும் இரண வைத்தியத்தின் ஆயுதங்களையும் வாங்கின வகையில் சக்.532-53/16".

"மருந்து ஒதரிவேகம்பட்டடையைக் கொண்டுவர நார்த்தா மலைக்குப் போகப் படிச் செலவு ரூ.3"

கால்நடை மருத்துவம்

பொதுவாக யானைகளின் பராமரிப்பில் மராட்டிய மன்னர்கள் தனிக் கவனம் செலுத்தியுள்ளனர். இந்தியாவிலேயே யானைப் படைகளையும் குதிரைப் படைகளையும் வைத்துப் போற்றக்கூடிய வசதி அக்காலத்தில் தஞ்சையில்தான் இருந்தது என்பர்.

மாந்தரோடு விலங்குகளுக்கும் மருத்துவத் தொண்டு செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். கால்நடை மருத்துவம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி மருத்துவர் இருந்ததாகத் தெரிகிறது. ஆடு, மாடு, கோழி, நாய், யானை, குதிரை, ஒட்டகம், சிறுத்தை, கரடி ஆகியவற்றிற்கும் மருத்துவம் செய்யப்பட்ட செய்திகள் பல கிடைக்கின்றன.

தண்டனை பெற்றவருக்கும் மருத்துவம்

மன்னர் குடும்பத்தினர், அரண்மனை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைவருக்கும் மருத்துவ வசதிகளைப் பொதுமையாக்கிய அக்காலத்தில் தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்கும் மருத்துவம் செய்ததாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. காட்டாக,

> "பொய்யான முத்திரை வகையறாக்களைச் செய்த அண்ணாபிள்ளைக்கு நெற்றியிலும் கன்னத்திலும் தமிழில் 35 எழுத்துக்களைக் குத்தின குரத்திக்கு இரணம் ஆறுகிற வரையில் இருந்த மருந்து போடுகிற தென்று தீர்ந்தபடிக்கு படிச்சிலவு கோட்டையிலுள்ள கொத்த-வாவிடம் ரூ.1 கொடுக்கப்பட்டது"

என வரும் மோடி ஆவணக்குறிப்புகள் (160சி-55) குறிப்பிடத்தக்கன.

துணைநூல்கள்

1. சரபேந்திர வைத்திய முறைகள், தஞ்சை சரசுவதிமகால் வெளியீடுகள்.
2. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், கே.எம்.வேங்கடராமையா, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1981.
3. தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் 3 தொகுதிகள், (பதி.) டாக்டர் பா.சுப்பிரமணியன், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1989.

கட்டுரைகள்

1. மன்னர் சரபேந்திரரின் மருத்துவப்பதிகள், டாக்டர் வே.இரா.மாதவன், மாமன்னர் சரபோசி (ஆய்வுக்கோவை தொகுதி 2) சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1990.
2. Siddha Medicine during the period of Marathas, Dr.K.R.Krishnan, Heritage of the Tamils, Siddha Medicine (Ed) Dr.S.V.Subramani and V.R.Madhavan, IITS, Madras-112, 1983.

இணைப்பு-1

தன்வந்திரி மகாலில் பணியாற்றிய மருத்துவநூல் வல்லுநர் சிலர்

1. கொட்டையூர் சிவக்கொழுந்துதேசிகர்
2. சுப்பராயகவி
3. வேலாயுத வைத்தியர்
4. முத்துசாமி தீட்சிதர்
5. அய்யாக்கண்ணுபிள்ளை
6. சேஷ பண்டிதர்
7. வேங்கடபதி ஐயர்
8. பரங்கிப்பேட்டை அப்பு வைத்தியர்
9. கோபாலபிள்ளை
10. சிதம்பரம் பிள்ளை
11. இராமராவ்
12. துமாள்ராவ்
13. புருஷோத்தமர்
14. ஐயாவையங்கார்
15. சீத்தாராமய்யர்
16. அண்ணாச்சாமி நாயக்கர்
17. அம்பலவாணப்பிள்ளை
18. அப்புராவ்
19. பாப்பு வைத்தியர்
20. பொன்னம்பலம்
21. நாயகம்
22. சேக்குசாயபு
23. அக்கீம் நத்தர் சாயபு
24. ரங்கைய நாயக்கர்
25. வெங்கடாசலம்பிள்ளை
26. அன்னுசாமி வைத்தியர்
27. அப்பண்ணா வைத்தியர்
28. திருவேங்கடம்பிள்ளை
29. தாமோதரம் பிள்ளை
30. பிள்ளைப்பெருமாள் வைத்தியர்
31. இரணவைத்தியர் வையாபுரி
32. வைத்தியம் குட்டியப்பா
33. வைத்தியம் சாமி சாஸ்திரி
34. வைத்தியர் மஸ்தான்
35. விஷ வைத்தியர் இராமசாமி ஐய
36. சிதம்பரசாஸ்திரி நாராயணசாஸ்தி
37. பரங்கிப்பேட்டை சிங்கு வைத்தியர் மகன் நமச்சிவாய வைத்தியர்
38. மருத்துவச்சி லட்சுமி
39. குதிரை வைத்தியர் திரியம்பகராவ் லக்ஷ்மணராவ் ஜகதாப்
40. யானை வைத்தியர் வீரராகு
41. குதிரை வைத்தியம் காசீம்கான் மீராகான்
42. குதிரை வைத்தியம் சையத்மொகித்
43. தபாஷ் கிருஷ்ணப்ப நாயக்
44. பஞ்சநதம்பிள்ளை
45. முத்துசாமி அப்பா
46. க்ஷேத்திர கோவிந்தராவ்
47. சுப்பையா வஸ்தாத்
48. வாசுதேவபிள்ளை
49. அபிராம மேஸ்திரி
50. தௌலத்து மால்ராவ்
51. வட்டாத்து ஞானி
52. நாய்வைத்தியம் காதர்கான்
53. ரஹீம்கான்
54. அமீர்கான்
55. ஹாஜி அகமத்
56. மாமுசாகேப்
57. சர்ஜன் பெல்
58. சர்ஜன் சியூரி
59. மிஸ்தர் கனடின் (1797)
60. சட்டன் (1820)
61. தலன்நல் மக்லோட் (1821)
62. ஸர் தாமஸ் சிவேஸ்தர்
63. டாக்டர் மெக்யாவின் (1827)
64. டாக்டர் பெல் வில்லியம் ரௌஸ் (1854)
65. டாக்டர் சாமுவேல் புருசிங்

பின்னிணைப்பு - 2

சரபோஜி மன்னர் காலத்தில் எழுதப்பெற்ற நூல்கள் சில

	நூற்பெயர்	எழுதியவர்	ஆண்டு
1.	வைத்திய அட்டவணை	ரெங்கைய நாயக்கர்	கி.பி.1800 சனவரி
2.	பஸ்ம வகைகள்	ரெங்கைய நாயக்கர்	கி.பி.1800 பிப்ரவரி
3.	நானாவித ரோக சிகிச்சை	ரெங்கைய நாயக்கர்	கி.பி.1800 எப்ரல்
4.	வைத்திய அட்டவணை	வெங்கடாசலம் பிள்ளை	1800 டிசம்பர்
5.	க்ஷயரோக சிகிச்சை	சிவக்கொழுந்து தேசிகர்	1827 சனவரி
6.	வாதரோக சிகிச்சை	சிவக்கொழுந்து தேசிகர்	1827 சனவரி
7.	குன்மரோக சிகிச்சை	சிவக்கொழுந்து தேசிகர்	1827 டிசம்பர்
8.	நயனரோக சிகிச்சை	வேலாயுத வைத்தியர்	1800
9.	ஜீரரோக சிகிச்சை	வேலாயுத வைத்தியர்	1800
10.	விரணம் கரப்பான் சிகிச்சை	வேலாயுத வைத்தியர்	1800
11.	சிரோரோக சிகிச்சை	வேலாயுத வைத்தியர்	1800
12.	விரேசன முறையும் அதிசார சிகிச்சையும்	வேலாயுத வைத்தியர்	1800
13.	மேகரோக சிகிச்சை	வேலாயுத வைத்தியர்	1800
14.	காசரோக சிகிச்சை	வேலாயுத வைத்தியர்	1800
15.	கர்ப்பிணி பாலரோக சிகிச்சை	திருவேங்கடம்பிள்ளை	1800
16.	ஜீரோக சிகிச்சை	சுப்புராயக் கவிராயர்	1800
17.	மூத்திரரோகம்	சுப்புராயக் கவிராயர்	1816 ஜுன்
18.	அஜபோக வைத்திய அட்டவணை	சுப்புராயக் கவிராயர்	1816 ஜுன்
19.	மச்சமுனி பெருநூல்	பஞ்சநதம்	1824 சனவரி
20.	வைத்திய அட்டவணை	அய்யாக்கண்ணு பிள்ளை	1824 நவம்பர்

மாமன்னன் சரபோசியும் கவிராயர் வேதநாயக சாத்திரியாரும்

ஆ. ஜான்துரை
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

மாமன்னன் சரபோசிக்கும் கவிராயர் வேதநாயகத்துக்கும் பாது-காவலராக, ஆசானாக, ஆலோசகராக விளங்கியவர் கிறிஸ்டியன் பிரடெரிக் சுவார்சு. சுவார்சின் வழிகாட்டுதலாலும், நெறிகாட்டுதலாலும் வாழ்வை வளப்படுத்திக் கொண்டு உயர்நிலையடைந்த சரபோசி ராசா, சாத்திரியார் ஆகியோரின் வரலாறு இங்கு சுருக்கமாக ஆராயப்படுகிறது.

இளமைக்காலம்

நெல்லை தேவசகாயத்திடம் "உம் மகன் வேதநாயகத்தை என்னிடம் அனுப்பு. நான் அவனுக்குக் கல்வி கற்பித்து ஆளாக்குவேன். அவன் ஆடுவான் பாடுவான்" என்று 12 வயது வேதநாயகத்தைத் தஞ்சாவூருக்கு அழைத்து வந்தார்.

நெல்லையில் சைவ வேளாள மரபில் வேதநாயகத்தின் முதாதையர் வாழ்ந்திருந்தனர். அன்னாரின் தந்தை அருணாச்சலம் பிள்ளை கத்தோலிக்க மதத்தைத் தழுவினார். கி.பி.1774 இல் பிறந்த வேதநாயகம் தம் 12ஆம் வயதில் சுவார்சு ஐயரால் தஞ்சாவூருக்கு அழைத்து வந்து அறிவமுது ஊட்டினார்.

சரபோசியைவிட வேதநாயகம் மூன்று வயது மூத்தவர். இருவரும் இளமையிலேயே ஒரே பள்ளி மாணாக்கர் போல் பழகினர். சாத்திரியாரை கவிஞராக்கியதில் அவருடைய சைவப் பாரம்பரியத்துக்கு இருந்த பங்கினைப் போல் அவரை வளர்த்த சுவார்சுக்கும் உண்டு.

சாத்திரியார் சிறுவனாக தஞ்சைக்கு வந்த புதிதில் ஒருநாள் தான் படிக்க ஒரு புத்தகம் வேண்டுமெனச் சுவார்சிடம் கேட்டபொழுது, அவர் கிறிஸ்தவத் திருமறையின் பழைய ஏற்பாட்டிலுள்ள 'தாவீதின் சங்கீதங்கள்' என்ற புத்தகத்தைக் கொடுத்தார். அவரது செயல் வேதநாயகம் சிறந்ததொரு சங்கீதக் காரனாகவும், புலவருமாகத் திகழக் காரணமாயிற்று.

மகுடமும் பட்டங்களும்

நீதி நிலைகுலைந்ததால் நீதியை நிலை நாட்டவும், வரிவசூலிக்கவும்

ஆங்கில அரசின் அதிகாரம் பெற்ற சுவார்சு, கி.பி.1798-இல் அமர்சிங்கை மன்னர் பதவியிலிருந்து இறக்கிவிட்டு சரபோஜியை அரசுக்கட்டில் ஏறச் செய்ய அரும் பாடுபட்டார். அவ்வாறே சரபோசி மன்னராக 1798 இல் மகுடம் சூட்டப்பட்டார்.

வேதநாயகம் பாவன்மையும், நாவன்மையும், இசைவன்மையும் ஒருங்கே அமையப்பெற்ற நிலையில் கிறிஸ்துவின் நற்செய்தியைத் தமிழகமெங்கும் தமிழ் மழையாய்ப் பொழியச் செய்தார். மேலும் கேரளத்திலும் இலங்கையிலும் அருட் செய்தியைப் பாடியும், பேசியும், கிறித்தவத் திருச்சபைகளை வளம்பெறச் செய்தார். அக்காலத்தில் பட்டங்கள் வழங்கும் பல்கலைக்கழகங்கள் இல்லை. எனினும் தஞ்சை, திருச்சி, சென்னை போன்ற இடங்களில் திரளாகக் கூடிய மக்கள் பேரவைகள் வேதநாயகத்துக்கு வேதசிரோமணி, மகாஞானச் சக்கரவர்த்தி, சுவிசேடக் கவிராயர், ஞானதீபக் கவிராயர், சுவிசேடப்புராணப் பிரசங்கி, அண்ணாவியார், சாத்திரியார் போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் சாத்திரியார் எனும் பட்டமே பெயருடன் இணைந்து தழைத்திருக்கிறது. வெளிநாடு சென்ற முதல் தமிழ்க் கிறித்தவக் கவிஞர் சாத்திரியாரே என்பது மேலும் பெருமை சேர்க்கிறது.

மன்னர் சரபோசியும் கவிராயர் வேதநாயக சாத்திரியாரும்

சாத்திரியார் பலமுறை மராட்டிய தர்பார் ஹாலில் சரபோசியுடன் சமமாக அமரும் வாய்ப்பைப் பெற்றார். சாத்திரியாருக்கு 10 வராகன் சம்பளம் மாதந்தோறும் வழங்கப்பட்டது. விலையுயர்ந்த தொப்பியும் அங்கியும் வழங்கப்பட்டது.

மன்னர் சரபோசி கி.பி.1803 இல் மராட்டிய அரசர் வமிச வரலாற்றை மிக விரிவாகத் தமிழிலும், மராத்தியிலும் எழுதிவித்தார். மராத்திப்படி தஞ்சைப் பெரிய கோயிலில் மிகப் பெரிய கல்வெட்டாகவும் வெட்டப்பட்டுள்ளது. இதன் நகல்களை வரலாற்று ஆவணத் தொகுப்பாளர் மெக்கன்சிக்கு அளித்தவர் சாத்திரியாரே. இதனை வரலாற்றுக் காவியமாக்கும் முயற்சியினை சாத்திரியார் மேற்கொண்டு 1811-இல் அவ்வரலாற்றின் சில பாடல்களை இயற்றிச் சரபோசியிடம் பாடிக் காண்பித்து சால்வை ஒன்றைப் பரிசாக சாத்திரியார் பெற்றார்.

'நோவாவின் கப்பல்' என்ற நூலைச் சரபோசியிடம் படித்துக் காட்டி 100 வராகன் பரிசிலைப் பெற்றார். அப்பரிசு குறைவு என்று சாத்திரியார் குறிப்பிடுகின்றார். வருடப்பிறப்பின் போதும், பண்டிகை நாட்களிலும், அரண்மனைச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும், விழாக்களிலும் சாத்திரியாரின் மகன்களும், மாணவர்களும் பாட்டுப் பாடுவர். மன்னர் மகிழ்ந்து பரிசளிப்பார். சரபோசியின் மகனும் மராட்டிய மரபின் கடைசி மன்னருமான சிவாசி (1832-1855) சிறுவனாக இருந்தபோது, தமிழ்ப் படிக்க மிகுந்த முயற்சி செய்து தமிழ்ப் பாடப்புத்தகம் ஒன்றைத் தயாரித்துச் சரபோசியின் விருப்பப்படி சாத்திரியார் அனுப்பினார். அதற்காக எந்தத் தொகையும் வழங்கப்படவில்லை. அந்நூலைத் தயாரிக்க சரபோசி வழங்கிய சால்வையை 9 ரூபாய்க்கு விற்று செலவு செய்தார் என சாத்திரியார் கூறியுள்ளார்.

நாளடைவில் சரபோசிக்கும் சாத்திரியாருக்கும் இருந்த நல்லுறவு சீர்குலைந்தது.

1. இந்து மதத்தையும், இசுலாம் மதத்தையும் கண்டித்து சாத்திரியார் நூல்களை எழுதியது.
2. பெத்தலகேம் குறவஞ்சியைப் போன்று தஞ்சை பெருவுடையார் பேரில் குறவஞ்சி பாட சாத்திரியார் மறுத்த செயல்.
3. சரபோசி மகன் சிவாசி ஆட்சிக்கட்டிலில் நுழைவதைக் கிறித்தவர்கள் விரும்பவில்லை. மாறாக சரபோசி அரச பதவியைவிட்டு நீக்கப்பெற்று அமரசிம்மன் மகன் பிரதாபசிம்மன் அரசராக கிறித்தவர்கள் மன்றாடினர் என்ற செய்தி சரபோசிக்குத் தெரிந்திருக்கலாம்.

மேற்கண்ட காரணங்கள் சரபோசியையும் சாத்திரியையும் பிரித்திருக்கலாம். இந்த மனவேறுபாடு இருந்தபோதும் 1832 இல் சரபோசி மரித்த செய்தி அறிந்து மனவடிவு கொண்டு உள்ளத்தை உருக்கும் இரங்கற்பா பாடி தம் அன்பையும் நட்பையும் வெளிப்படுத்தினார் சாத்திரியார்.

சாத்திரியாரின் ஆசிரியப்பணியும் இலக்கியப் பணியும்

சாத்திரியார் சிறந்த கல்வியறிவும் திறமையும் பெற்றதையறிந்த

சுவார்சு, சாத்திரியாரைத் திருச்சபை ஊழியத்தில் ஈடுபடச் செய்தார். பின்னர் தாம் உருவாக்கிய பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிய வாய்ப்பளித்தார். சாத்திரியார் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட மாணாக்கர்கட்குக் கிறித்தவத் திருமறையினையும், உலக அறிவூட்டும் நூல்களையும் கற்றுத் தந்தார். பல நூல்களையும் யாத்தார். சாத்திரியாரின் பாடல்களில் இடம்பெற்றுள்ள சொல்லோட்டங்களையும், கருத்தோட்டங்களையும் காணும்போது தேவார, திருவாசக, திருப்புகழ் நூல்களில் அவருக்கிருந்த புலமை வெளிப்படுகின்றது. அதன்வழியே 134 நூல்கள் சாத்திரியாரால் எழுதப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் தமிழ் இலக்கிய உலகில் நன்கறிந்த நூல்கள் ஒருசில. அவற்றில் தலையாயது பெத்தலகேம் குறவஞ்சி. இன்னபிற ஜெபமாலை, தோத்திரப்பாடல்கள், பேரின்பக்காதல், ஆரணாதிந்தம், ஞான உலா, ஞான அந்தாதி, பராபரன்மாலை, சாஸ்திரக்கும்மி ஆகியன. சாத்திரியாரது பல கீர்த்தனைப் பாடல்கள் 'கிறிஸ்தவக் கீர்த்தனைகள்' தொகுப்பில் இடம்பெற்று இன்றும் பாடப்பட்டு வருகின்றன.

<u>தரணியில் பரவிய தமிழர் புகழ்</u>

சங்கைகுரு ஜே.சி.கோலப் ஐயரின் அனுமதிப்படி 'பெத்தலகேம் குறவஞ்சி' தமிழில் இசைக்கப்பட்டு மகா ராசேந்திர சரபோசி மகாராச சபையில் அரங்கேற்றப்பட்டது. சாத்திரியார் புகழ் இங்கிலாந்து, செர்மனி, சுவீடன் ஆகிய நாடுகளிலும் பரவியது. டாக்டர் கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆசிரியர் முதன்முதலாக இந்தியாவுக்கு வந்தபோது தஞ்சையில் சாஸ்திரியாருடன் அளவளாவினார். அன்னார் பிற நாட்டவருக்கு தமிழ் ஆசானாக விளங்கினார். தம் சமகாலத்துப் புலவர்களாகிய பவர், முத்தையா பிள்ளை, டாக்டர் போப் ஐயர், திரேசி ஐயர், சார்செண்டு ஐயர், இன்பக்கவிராயர் ஆகியோருடன் இலக்கிய கலந்துரையாடல் நடத்தினார். ஹென்றி பவர் ஐயர் சாத்திரியாரை நேரில் அறிந்து அவரது வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

<u>நிறைவுரை</u>

மராட்டிய மன்னர் வழித்தோன்றலும், நெல்லை சைவ மரபுவழித் தோன்றலும் சுவார்ட்சு ஐயர் என்ற செடியில் கொடிகளாய் தஞ்சையில் வளர்ந்தன. மகுடம் சூட்டப்பட்ட சரபோசி பட்டங்கள் பல பெற்றிட்ட சாத்திரியார் நாட்டுக்கும், மக்களுக்கும், இலக்கியத்துக்கும், எல்லாச் சமயங்களுக்கும் ஆற்றிய அரிய தொண்டுகள் அளத்தற்கரியது.

ஈகை மனமும் இனிய குணமும் கொண்ட மாமன்னன் சரபோசி மதம், இனம், மொழிகடந்து நல்லாட்சி வழங்கியது குறிப்பிடத்தகுந்தது. தமிழுக்கும், கிறித்தவ உலகுக்கும் சாத்திரியாரின் பங்களிப்பு போற்றுதற்குரியது.

மாமன்னன் சரபோசியும் கவிராயர் வேதநாயகமும் மரித்தும் பேசப் படுகிறார்கள். இறவாப் புகழ் பெற்றுத் திகழ்கிறார்கள்.

<u>சரபோசியின் வெற்றி</u>

'மாமன்னன் சரபோசி பெற்ற வெற்றி போரினால் ஏற்பட்ட வெற்றியல்ல; அவருடைய வெற்றிகள் கலைத் துறையிலும், கல்வித் துறையிலும் ஏற்பட்ட மாபெரும் வெற்றியாகும்'

— எல். கோபாலன்
முன்னாள் சரசுவதிமகால்
கவுரவச் செயலர்
(1951)

சரபோசியும் மேநாட்டவரும்

அருள்திரு ஜெ.துரைராசு
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

சரபோசி அரசருக்கு முன்பும், சரபோசியின் காலத்திலும் பல மேநாட்டவர்கள் தஞ்சை மராத்திய அரசோடு தொடர்புடையவர்களாக இருந்தார்கள். அவர்களை மிசனரிகள், கவர்னர் ஜெனரல்கள், கவர்னர்கள், ரெசிடெண்டுகள், வெளிநாட்டு கவர்னர்கள், மருத்துவர்கள் என்று பகுத்தாய்வது சிறப்பாகும்.

மிசனரிகள்

மேநாட்டிலிருந்து கிறிஸ்தவ நற்செய்தியை இந்தியாவில் அறிவிக்க வந்த திருத்தொண்டராவர். துளசி அரசருடைய காலத்திலும், சரபோசியின் காலத்திலும் அதிக நட்புக் கொண்டு அரசுத்துறை, கல்வித்துறை, சமயத்துறை ஆகியவற்றை அரசர்கள் உதவிபெற்றுச் சிறப்புடன் நடத்தியவர் ஃபிரடெரிக் சுவார்ட்சு என்னும் மிசனரி ஆவார். இவர் புருஷ்யாவிலுள்ள சோகன்ஸ்பர்க் நகரில் கி.பி.1726 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் நாள் பிறந்தார். கி.பி. 1746 ஆம் ஆண்டு உறாலே பல்கலைக்கழகத்தில் இறையியல் கல்வி கற்று, பக்தி இயக்கத்தின் தலைவரான அருள்திரு ஏ.எச்.ஃபிரேங்கே என்பவரிடம் கிறித்தவ உண்மைகளையும், இறையியலையும் கற்றுத் தேர்ந்தார். பல்கலைக் கழகத்தில் பயிலும்போதே தமிழும் கற்றார். கி.பி.1749 ஆம் ஆண்டு குருவாக அருள்பொழிவு பெற்றார்.

தமிழகத்தில் சுவார்ட்சின் பணி

கி.பி.1750 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19-ஆம் நாள் தமிழகத்திலுள்ள கடலூர் வந்து சேர்ந்தார். அதே ஆண்டு ஜூலை 30-ஆம் நாள் தரங்கம்பாடியை அடைந்தார். பதினாறு ஆண்டுகள் தரங்கம்பாடியில் தங்கி ஆசிரியராகவும், குருவாகவும், நற்செய்தியாளராகவும் பணியாற்றினார். கி.பி.1758-ஆம் ஆண்டு நாகப்பட்டினத்திற்கும், 1760-ஆம் ஆண்டு இலங்கைக்கும், 1762-ஆம் ஆண்டு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளிக்கும் நற்செய்திப் பணிக்காகச்

சென்றார். தமிழ், போர்த்துக்கீசு, பாரசீகம், இந்துஸ்தானி, மராத்தி ஆகிய மொழிகளைக் கற்று வல்லவரானார். தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்டு இறுதிவரை பணியாற்றினார்.

சரபோசியும் சுவார்ட்சும்

தஞ்சாவூருக்கு வந்த சுவார்ட்சு, அப்போது தஞ்சை மராட்டிய மன்னராக இருந்த துளசி அரசரிடம் (கி.பி.1765-1787) நல் நட்புக் கொண்டார். அரசரின் உதவியுடன் கி.பி. 1784-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முதலாக ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும் பள்ளியைத் துவங்கினார். தாம் மரிக்கும் முன் தம் வளர்ப்பு மகனை சரபோசியின் பாதுகாவலராக சுவார்ட்சை நியமிக்க வேண்டுமென விரும்பினார். ஆனால் துளசி அரசரின் தம்பி அமர்சிங் சரபோசியின் பாதுகாவலர் என்ற முறையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இதனை உறுதிபடுத்திக் கொள்ள கவர்னர் ஜெனரலுக்கு முறையிட்டார். சென்னை கவர்னர் கி.பி.1787-இல் தஞ்சைக்கு வந்து 12 அறிஞர்களின் கருத்தைக் கேட்டார். அவர்கள் சரபோசியின் சுவீகாரம் செல்லாது என்று எழுதிக் கொடுத்தனர். ஆனால் சுவார்ட்சின் தலையீட்டால் சரபோசியின் உரிமைபற்றி மீண்டும் விசாரணை நடந்தது. சரபோசியின் சுவீகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சரபோசியை சென்னையில் தங்கவைத்து சுவார்ட்சின் மேற்பார்வையில் ஆங்கிலக் கல்வியும் பல கலைகளும் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஏற்ற அறிவுரைகளை கடிதங்கள் மூலம் சுவார்ட்சு சரபோசிக்கு எழுதி அனுப்பினார். சுவார்ட்சு கிழக்கிந்திய ஆங்கிலக் கம்பெனியிடம் வாதாடி பல முயற்சிகள் செய்து, இறுதியில் கி.பி.1798-இல் அமர்சிங்கிற்கு ஓய்வளிக்கச் செய்து சரபோசியை அரசராக்கிய பெருமை இவரையே சேரும். ஆனால் சரபோசி அரசுக்கட்டில் ஏறுவதற்கு சிறிது காலம் முன்பாக 13.2.1798 இல் சுவார்ட்சு மரித்தார்.

சரபோசி, சுவார்ட்சுக்குத் தமது அஞ்சலியையும், நன்றியையும் செலுத்தி அரசு மரியாதையுடன் அடக்கம் செய்து, கல்வெட்டையும் அமைத்தார். கல்லறைக் கல்வெட்டில்,

" நீர் உறுதியாய் இருந்தீர், எளிமையும் ஞானமும்
உண்மையும், தூய்மையும், மாய்மாலமின்றி
அநாதைகளின் தந்தையாய், விதவைகளின் ஆதரவாய்
எத்துயருக்கும் ஆறுதலாய்
நம்பிக்கையின்மையின் நம்பிக்கைக்கு ஒளிதருபவராய்
செய்கையிலும், வழிகாட்டலிலும் சரியானதையே காட்டி,
இளவரசர்களுக்கும், மக்களுக்கும், எனக்கும் ஆசீர்வாதமாய்
இருந்தீர்
என் தந்தையே! நீர் எம்பால் வைத்த நல்லெண்ணத்திற்கு
யான் தகுதியுடையவனாயிருப்பேனாக"

என்று இரங்கல் பாவைத் தெரிவித்தார். இவ் விரங்கற்பாவானது சிறுவயது முதல் சரபோசிக்கும் சுவார்ட்சுக்கும் இடையிலிருந்த நட்பையும், அன்பையும், மதிப்பையும் வெளிக் கொணர்வதாக அமைந்துள்ளது.

சுவார்ட்சு மறைவிற்குப் பின் ஜான் காஸ்பர் கோலப், உறால் உறாப்பர், இஸ்மிட்டஸ், பிரதர்டன், உறாப்ரே, கேரிக் போன்ற மிசனரிகள் சரபோசியின் நட்பைப் பெற்று, பள்ளிக்கும், அநாதை இல்லத்திற்கும் உதவித் தொகைகளையும் நிலங்களையும் நன்கொடையாகப் பெற்றார்கள்.

<u>சரபோசியும் மேனாட்டு அதிகாரிகளும்</u>

<u>கவர்னர் ஜெனரல்</u>

<u>வாரன்ஹேஸ்டிங்ஸ்</u>(கி.பி.1777-1785)

இவர் முதல் கவர்னர் ஜெனராக இருந்தவர். இவரது படம் 2.3.1826 ஆம் ஆண்டு தஞ்சைக்குக் கொண்டு வரப்பட்டபோது சரபோசி அரசு மரியாதையுடன் படத்தை ஏற்று அரண்மனையில் வைத்தார்.

<u>காரன்வாலிஸ்</u>: கி.பி.1786 முதல் 1805 வரை கவர்னர் ஜெனராக இருந்தவர். முதலில் அமர்சிங்கை அரசப் பதவியில் அமர்த்த தஞ்சைக்கு வந்தார். அமர்சிங் ஆங்கிலேய அரசின் ஆணையை ஏற்று நடக்காததால் அமர்சிங்கைப் பதவியிலிருந்து விலக்கி, சரபோசியின் அரசுரிமையை நிலைநாட்டு-வதற்காக மீண்டுமொரு முறை தஞ்சாவூருக்கு வந்தவர்.

கவர்னர்கள்

லார்டு ஹோபார்டு: இவர் 7.9.1794 முதல் 21.2.1798 வரை கவர்னராக இருந்தவர். இவர் சரபோசி தஞ்சையின் மராட்டிய அரசனாக முடிசூடுவதற்கு ஆங்கில அரசின் உரிமையினை லண்டனிலிருந்து பெற்றுத் தந்தவர். சரபோசிக்குப் பட்டாபிசேக நாளையும் குறித்து, சென்னையிலிருந்து தஞ்சைக்கு அனுப்பி வைத்தவர். சரபோசியிடம் மிகுந்த அன்பு கொண்டவராக இருந்தார். தான் வேட்டைக்குச் செல்லுங்கால் சரபோசியையும் உடன் அழைத்துச் சென்றவர்.

சர்.தாமஸ் மன்றோ (கி.பி.10.6.1820-6.7.1827)

நிலச் சீர்திருத்தத்தில் தலைசிறந்தவர். இவர் 6.8.1826 ஆம் ஆண்டு தஞ்சைக்கு வந்தார். சரபோசி, இளவரசர், மூன்று மாப்பிள்ளைகள் இன்னும் பலருடன் கவர்னரைப் பார்க்கச் சென்றார். அரசு மரியாதையை ஏற்றுக் கொண்ட கவர்னர் சிறிது நேரம் சரபோசியுடன் பேசினார். கவர்னருடன் வந்தவர்களுக்கு சரபோசி இரண்டு குதிரைகளையும், ஒரு யானையையும் பரிசாகக் கொடுத்தார்.

ரெசிடெண்டுகள்

இவர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் பிரதிநிதிகளாக தஞ்சை போன்ற சிற்றரசர்களின் தலைநகரங்களில் தங்கி, அச்சிற்றரசர்களை மேற்-பார்வை செய்யும் அரசின் ஆட்சியாளராக விளங்கியவர்களாவர். சரபோசியின் காலத்தில் பெஞ்சமின் டூரின், சார்லஸ் ஹாரிஸ், ஜார்ஜ் ஸ்டார்டன் ஆகிய மூவர் தஞ்சையின் ஆட்சிநிலையையும், மக்கள் வாழ்க்கை நிலையையும் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சென்னை கவர்னரால் நியமிக்கப்பட்டவர்கள். இக்குழு தம் கருத்தைக் கூறியதும், தஞ்சை அரசை தமக்குரியதாக ஆக்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு பெஞ்சமின் டூரிக்கு சென்னையிலிருந்து ஆணை வந்தது. அதன்படி அவர் முயற்சி செய்து வென்றார். சரபோசியின் காசி யாத்திரையின்போது கயையிலிருந்தும், காஞ்சிபுரத்திலிருந்தும் கடிதங்கள் எழுதினார்.

வில்லியம் பிளாக்பன்

சரபோசியின் மகன் சிவாஜியின் திருமணம் 30.6.1818-இல் நடைபெற்றது. அத்திருமணத்திற்கு வந்த சர்தார்களுக்கு மரியாதை செய்த விபரத்தைத் தெரிவித்தார். இன்னொரு சமயம் பிளாக்பன் மலையாள கலெக்டர் மக்லோட் என்பவருடன் வந்து சந்தித்தார். இவர்களை சரபோசி அரசு மரியாதையுடன் வரவேற்று, ஆலோசனை நடத்தினார்.

ராம் மாஸ்டர்:

அமர்சிங் காலத்தில் ரெசிடெண்டாக இருந்தவர். இவரை சுவார்ட்சு, சரபோசிக்கு ஆசிரியராக நியமித்தார். இவர் தங்குவதற்கு தற்பொழுது பீட்டர்ஸ் மேல்நிலைப் பள்ளியிருக்கும் கட்டிடத்தை அரசு கொடுத்தது. இவர் சரபோசிக்கு நல்ல நண்பராகவும் ஆசிரியராகவும் விளங்கினார்.

ஜான் ஃபைஃப்

கி.பி.1825 முதல் 1838 வரை ரெசிடெண்டாக இருந்தவர். சுவார்ட்சு செய்த பணி அனைத்திற்கும் ஆதரவு கொடுத்தார். கி.பி.1825-இல் முக்தாம்பாபுரம் சத்திரத்திற்குச் சென்றார். அங்கு ஐந்து பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டு, சத்திரத்தைப் பற்றிய தகவல்களையும் சரபோசியின் நிர்வாகச் செய்திகளையும் அறிந்தார். கி.பி.1826-இல் சேதுபாபா சமுத்திரம் என்ற ஊருக்குச் சென்று வந்தார். சரபோசியுடன் நல்லுறவு வைத்திருந்தார்.

ஜெ.பிளாக்பன்

இவர் பொறுப்பு ரெசிடெண்டாக இருந்தவர். சரபோசி அரசர் 8.3.1832-இல் மரணமடைந்தபோது சென்னை கவர்னருக்கு அறிவித்தவர்.

கொழும்பு கவர்னருடன் சரபோசி

கி.பி.15.9.1823 இல் கொழும்பு கவர்னர் நாகப்பட்டினம், நீடாமங்கலம் ஆகிய ஊர்களில் தங்குவதற்கு சரபோசி உதவி செய்தார். தஞ்சையில் சரபோசியைச் சந்தித்தபோது பதினைந்து குண்டுகள் வெடித்து, அரசு மரியாதை செய்து வரவேற்றார்.

சரபோஜி மன்னர் பிள்ளைத்தமிழ்

தவத்திரு புலவர் சொக்கலிங்க சுவாமிகள்
811 தத்தோஜியப்பா சந்து
தஞ்சாவூர்

தஞ்சையில் நாயக்க மன்னர்கள் நல்லாட்சி செய்த பின்னர் மன்னர் ஆதி சிவாஜி மன்னரின் இளவல் எகோஜி மன்னரால் தஞ்சையில் மராத்திய மன்னராட்சி மலர்ந்தது. அம்மன்னர் வழித்தோன்றலாய் வந்த இரண்டாம் சரபோஜி மன்னரே இப்பாட்டுடைத் தலைவர்.

கலைமன்னர் சரபோஜியின் காலத்திய வரலாற்றின் அடிப்படையில் ஆங்காங்கு மறைந்து கிடக்கும் செய்தியினை எளியேனுக்குத் தெரிந்த மட்டில் ஒவ்வொரு பாடலிலும் அமைத்துப் பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் நூறு பாடல்களைப் பாடியுள்ளேன்.

பருவத்திற்கு ஒன்று வீதம் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மாமன்னர் சரபோஜி பிறந்தநாள் விழாக் கருத்தரங்கில் 10 பாடல்கள் ஒலிக்கின்றன. இந்நூல் முழுமையும் அச்சேறத் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,
தேவாரச்சீர் பரவுவார், தேவாரப்பெருநி
தவத்திரு புலவர் சொக்கலிங்க சுவாமிகள்

சரபோஜி மன்னர் பிள்ளைத்தமிழ்

காப்பு

திருவுடையான் மன்னித் திகழ்ந்தொளிரும் தஞ்சைப்
பெருவுடையார் தன்னருளைப் பெற்றோன் - நிருபன்
சரபோஜி பிள்ளைத் தமிழ்பாட வைந்து
கரயானை தன்பதமே காப்பு

1. காப்புப் பருவம்

பெருவுடையார்

வேலவன் கோலமும் வென்றியும் வீரமும்
விளங்கிடு மிராச ராசன்
விருப்புட னெடுத்ததோர் விண்ணுயர் கோயிலுள்
விடங்கனாய் வீற்றி ருப்பன்

பாலகன் அழுதிடில் பாற்கடல் அழைப்பவன்
பார்புகழ்தென் மேரு தன்னில்
பாங்குட னுறைதரு பிரகதீ சர்பெரும்
பரமனைப் போற்றி செய்வாம்;
தாலமார் தஞ்சையின் தகுதியிற் சிறந்ததோர்
தாருவாரந் திருவா ரூரார்
தியாகேசர் மீதுபல சிருதிகள் புனைந்ததே-
வேந்திரக் குறவஞ் சிநூல்
சீலமார் புமிநூல் முதலிய வியற்றிச்
சிவவழி பாட்டி னாலே
சிவபுஜா துரந்தர மென்றுலகு போற்றிடும்
சிற்பனைக் காக்க வென்றே!

2. செங்கீரைப் பருவம் (நாயக்கர் தர்பார் உறால்)

முன்னமுயர் நாயக்க மன்னர்கள் தங்கியே
முடியாட்சி செய்த தோட்டம்
மாகமா மாகாய முட்டிடும் மண்டபம்
மாலுயர் உள்வி தானம்
தன்னிலணி மேற்சுவர் மேலே விளங்கிடும்
தயரதன் பெற்றெ டுத்த
தாசாதி ராமனின் பட்டாபி ஷேகசுதைத்
தனியழகு கொண்டி லங்க
மன்னாதி மன்னர்கள் மகிவாட்சி செய்தமே
மகிழ்ந்திட்ட ஆட்சி பீடம்
மேலாக நின்றுநீ சரசோதி மாலதனை
மாண்புடன் வனைகல் நன்றாம்
சின்னப்பு கன்னப்பு சொன்னப்பு கொண்டவா!
செங்கீரை யாடி யருளே!
செகம்புகழ் சரபேந்திர சத்ரபதி ஐயனே!
செங்கீரை யாடி யருளே!

3. தாலப்பருவம் (சங்கீத மகால்)

கலைஞர் இசைஞர் பாடும் பாட்டொலி
கவிஞர் மேடை முன்
கட்டிய நீண்ட சதுரச் சிறிய
குளத்தின் தண்ணீரின்
அலையில் தாக்கிய ஒலியது பெருகி
அசைவற் றெழுமதனை
அளிந்த மிருந்தே அந்தப் புறத்தார்
அரசர் தம்மோடும்
சிலையத வினிமை கேட்டு மகிழச்
சிறக்கும் சிலாடகமாம்
சிற்றிடை வெளிகொள் சாளரம் கொண்ட
சங்கீத மாலதனைத்
தலைவா போற்றினை தாய்போல் சரபா!
தாலோ தாலேலோ!
தஞ்சையில் மிஞ்சிய விஞ்சையர் சிங்கமே!
தாலோ தாலேலோ!

4. சப்பாணிப் பருவம் (18 கானாக்கள்)

நிதியிட்டு வைக்கவும் நகைநட்டு வைக்கவும்
நவதானியம் வைப்பதற்கும்
நல்நகை செய்யவும் கூடாரம் வைக்கவும்
நல்யானை கட்டுதற்கும்
நிதிகெட்டு மாய்ந்திடும் அமர்க்கலன் வைக்கவும்
வேட்டைக்கு வேண்டுதற்கும்
வெடிமருந் தாக்கவும் வரிவசூ லிக்கவும்
விஸ்தீர ணந்தனக்கும்

அதிகார மற்போர் மருந்துகள் வைக்கவும்

ஆவனம் வைப்பதற்கும்

ஆலிவகை தண்ணீர் சுவைநீர் தனக்கும்

ஆடைகள் தைப்பதற்கும்

சதிகொண்ட பதினெட்டு கானாவ மைந்தவா!

சப்பாணி கொட்டியருளே!

சரபேந்திர பூபால சந்திரபதி ஐயனே!

சப்பாணி கொட்டியருளே

5. முத்தப் பருவம் (முத்தப் பிறக்குமிடங்கள்—20)

கரும்பு செந்நெல் கனிவாழை

கொக்கு கற்பார் நங்கையர்தம்

கழுத்து சிப்பி மீன்நந்து

கமுகு சங்கு குஞ்சரத்தின்

மருப்பு முதலை மதி யுடும்பு

மூங்கில் தாமரை பசுவின்பல்

மேகம் நாகப் பன்றிப்பல்

முத்தப் பிறக்கும் இடமென்றே

இருபது குறித்தார் மேலோர்கள்

இத்தனை முத்தும் நின்கனிவாய்

இனிய சுவையின் முத்தத்தின்

இன்பம் தனக்கே நிகராமோ!

கரும்பு மணக்கும் தார்மணக்கும்

செல்வா முத்தந் தருவாயே

சருவா பரனா திருவாயால்

சரபா முத்தந் தருவாயே!

6. வருகைப் பருவம் (நல்லெழுத்துப் படம்)

பரத்தை மறைக்கும் பார்பூதம்

புறத்தில் மறைந்த வாறதுபோல்

பரமன் தன்னை நினைவூட்டும்

படத்தைக் காண வாராயோ!

கரத்தால் வரைந்த எழுத்துள்ளே

கரந்த எழுத்தின் தனியழகு

காய்பூ இலைகள் கரைகாட்டும்

கொடிகள் தம்மின் முகப்புள்ளும்

அரன்தன் நாமம் 'சிவ' என்றே

அருளும் சுவடி காசிதமாம்

அச்'சிவ பஞ்சே க'மென்னும்

அழகு மராத்தி மொழிச்சுவடி!

சரதக் கீர்த்தி சகதேவா!

சரபா வருக வருகவே!

சித்தர் போற்றும் சத்திரபதிச்

சரபா வருக வருகவே!

7. அம்புலிப் பருவம் (பேதம்) (மகால் கொண்டது)

ஒருகலை கொண்டுநீ யுல்கெலாஞ் சுற்றியும்

உயர்கலை யுன்னிலில்லை

ஓரிடத் திருந்தவன் ஓராயி ரக்கலைகள்

ஒக்கவிவ் விடத்திலுண்டு

கருவிலில் மாசுபட்டக் காசமும் முயலெனும்

களங்கமாம் கறைகளுண்டு

குடிபடை காப்புசெங் கோலோச்சு முறையெனும்

கறையலால் கறைகளில்லை

வ

வருத்தமே யமெரிக்க விண்வெளி வீரர்கள்
வென்றன ருன்றடலை
வீரமொடு வெற்றிபெற விண்ணாட்டு மண்ணாட்டு
வட்டார்கள் வென்றதில்லை
அருச்சனைக் குகந்தவன் ஆதலா லிவனுடன்
அம்புலீ! யாட வாவே!
ஆசமுக நேசப்ர போசியா மிவனுடன்
அம்புலீ! ஆடவாவே!

8. சிற்றில் பருவம் (பிரகதீசரைக் காணப் புறப்படல்)

பதங்கள் கொடுக்கும் பரிசுடைய
பெரிய கோயில் தனிஉறையும்
பிரக தீசப் பெருமானின்
பாதம் வணங்கப் பத்தியுடன்
மதனன் போலும் அழகுடையாய்
மணிகள் பதித்த அணியுடையாய்
மனம் குளிர மகிழ்ந்தெடுக்கும்
மன்னா தெருவில் புறப்பட்டாய்
விதவித மான வீடுகளும்
விசால மான வாயில்களும்
வாசக சாலை விளங்கிடவே
வீதியிற் சமைத்தோம் மணலாலே
சதங்கைப் பதத்தால் சரபேந்திரா!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சிந்தா மணியே சரபோஜி!
சிறியேம் சிற்றில் சிதையேலே!

9. சிறுபறைப் பருவம் (மன்னர் வழிவழி)

அமர்சிங்கு என்றுமொரு ஆட்கக் கோடகர்
அரியணை யாவல் தாண்ட
ஆயிரத் தெழுநூற்று எண்பத்தெட்டினில்
அண்டர்கோன் மகுட மேற்றார்

எமதுமா ராசனே! இரண்டாம் சரபோஜிநீ
எல்லாரும் சுவார்ச்சு தன்வால்
ஆயிரத் தெழுநூற்றுத் தொண்ணூற்று எட்டினில்
ஆண்டவா மகுட மேற்றாய்
இமயத்துப் புகழோடு ஈற்றிலும் சிவாஜியாய்
ஏராறு மாயி ரத்து
எண்ணூற்று முப்பத்து மூன்றுமுத லம்பத்து
ஐந்தளவுந் தஞ்சை தன்னைச்
சமரின்றி செங்கோல் செலுத்தினா ரென்றுநீ!
சிறுபறை முழக்கி யருளே!
சரபேந்திர பூபால சத்ரபதி ஜயனே!
சிறு■றை முழக்கி யருளே!

10. சிறுதேர்ப் பருவம் (வாழ்த்து)

வான்முகில் உலகுக்கு வேண்டிய அளவுக்கு
வளமையைச் செய்து பெய்ய
வாகான வின்பத்தை வையக மாந்தர்க்கு
விடையவன் வழங்கி வாழ
தேன்மொழித் தென்மொழி வடமொழி பிறமொழிகள்
தனியறிவு தந்து வாழ
தானான வேதங்கள் தருமங்கள் சன்மார்க்கம்
தரணியில் தழைத்து வாழ
ஆன்றோர்கள் கலைவீரர் சைவமும் தமிழுமாய்
அறுபத்து மூவர் வாழ
ஆழ்வார்கள் இந்நூலைக் கற்றாரும் கேட்டாரும்
அகிலத்து மன்னி வாழ
சான்றோர்கள் எல்லோரும் சந்ததமும் வாழநீ!
சிறுதே ருருட்டி யருளே!
சீர்கலை சுற்றவா சரபோஜிக் கொற்றவா!
சிறுதே ருருட்டி யருளே!

சரபோசி காலத் தமிழ் இலக்கியங்கள்

முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி,
இணைப்பேராசிரியர்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை.

முன்னுரை

இரண்டாம் சரபோசி மன்னர் காலத்தில் (கி.பி. 1798-1832) இலக்கியங்கள், கலைகள் போன்றவை சிறந்த முறையில் வளர்ச்சி அடைந்துள்ளன. இவர் காலத்தில் அரசியல் குழப்பங்கள் இல்லாமலிருந்த காரணத்தினாலேயே அதிக அளவில் தமிழ், தெலுங்கு, மராத்தி, வடமொழி போன்ற மொழிகளில் இலக்கியங்களும், பல புதிய கலைகளும் தோன்றலாயின. இவர் காலத்தில் மலர்ந்த தமிழ் இலக்கியங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

ஆதரித்த புலவர்கள்

சரபோசி மன்னர் அரசவையில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், வேலாயுத வாத்தியார், திருவேங்கடத்தாபிள்ளை, வேங்கடாசலம் பிள்ளை, சுப்பராயக் கவிராயர், அனந்தபாரதி ஐயங்கார், வேதநாயக சாத்திரியார் போன்ற புலவர்கள் சிறந்து விளங்கினர். இவர்களை மன்னர் ஆதரித்துப் போற்றியுள்ளார். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழிலும் சிறந்து விளங்கித் தலைமைப் புலவராக விளங்கினார்.[1] சுவார்ட்சு பாதிரியாரின் பாதுகாப்பில் அவருடைய மாணவராகச் சரபோசி மன்னர் இருந்தபொழுது வேதநாயகரும் அவருடன் சேர்ந்து கல்வி பயின்றார். சரபோசி மன்னர் வேதநாயகத்தை 'அண்ணா' என்று அன்புடன் அழைத்து வரலானார்.[2] இப்புலவர்கள் தாங்கள் பாடிய இலக்கியங்களில் தங்களை ஆதரித்த சரபோசி மன்னரைப் போற்றிக் கூறியுள்ளனர்.

இலக்கிய வகைகள்

சரபோசி மன்னர் காலத்தில் அந்தாதி, உலா, கோவை, குறவஞ்சி, மருத்துவம், தூது, கண்ணி, கப்பல் பாட்டு, மாலை, புலம்பல், நாட்டுப்புறவியல், கீர்த்தனை, சரித்திரம், வண்ணம் போன்ற இலக்கிய வகைகளில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் அந்தாதி, உலா, கோவை, குறவஞ்சி போன்ற இலக்கிய வகைகளில் அமைந்துள்ள நூல்களை மட்டும் இக்கட்டுரை ஆராய்கிறது.

.. 2

அந்தாதி இலக்கியம்

தமிழ் இலக்கியச் சிற்றிலக்கிய வகைகளுள் எண்ணிக்கையில் முதலிடம் பெற்றுத் திகழ்வது 'அந்தாதி' இலக்கியமாகும். இவ்வகையில் ஒரேயொரு நூல் மட்டுமே சரபோசி காலத்தைச் சார்ந்ததாகக் கிடைக்கிறது. அந்நூல் 'ஞான அந்தாதி' எனும் கிறித்தவ சமயத்தைச் சார்ந்ததாகும். இதை வேதநாயகர் இயேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடியுள்ளார்.

திருமறையில் இடம்பெற்றுள்ள இசரவேல் நாட்டை ஆண்டு வந்த தாவீது மன்னனின் புதல்வன் 'ஞானவான்' என்று போற்றப்பட்ட சாலமோன் பாடிய 'உன்னதப் பாட்டை' முதநூலாகக் கொண்டு வேதநாயகர் இந்நூலைப் பாடியுள்ளார். ஞானமணவாளன் எனவும் வான மணவாளன் எனவும் குறிப்பிடப்படும் கிறித்து இந்நூலின் பாட்டுடைத் தலைவராவர். 'நாயகி' என்று சொல்லப்படுவது திருச்சபையாகும். 'உன்னதகீதம்' என்பது சாலமனின் காவியமாகும். இக்காவியத்திற்கு ஓர் உரை போல இவ்வந்தாதி அமைந்துள்ளது. இதனை "இறைவன் அருளினால் ஞான சலோமோன் அமைத்த புராணம் எனும் சித்திர உன்னதகீத சுலோகத்தைச் சொல்லுவேன்" என்று வேதநாயகர் கூறுகின்றார்.

காப்புச் செய்யுளை வெண்பாவிலும் நூலினைக் கலித்துறையிலும் ஆசிரியர் பாடியுள்ளார். 'ஆதித்தன்' எனும் மங்கலச் சொல்லால் தொடங்கி இறுதிப்பாடலில் 'ஆதியையே' என்று மண்டலித்து முடியுமாறு பாடியுள்ளார்.

பரம்பொருள் ஆன்மா உறவினைத் தலைவன்–தலைவி (காதலன், காதலி) உறவுநிலையாகக் கொண்டு அகப்பொருள் சுவை பொங்கித் ததும்பக் காதலோவியமாக வேதநாயகர் காட்டியுள்ளார். இவ்வாறு இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயுள்ள உறவைக் காட்டும் மரபினைத் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போன்ற பத்திமைப் பனுவல்களில் காணமுடிகின்றன.

மேலும் வேதநாயகர் பாடிய இப்பனுவலில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் அன்பு உணர்வு இழையோடுவதைக் காணமுடிகின்றது.

உணர்ச்சியின் எல்லையில் நின்று, ஒருவரையொருவர் அடையத் துடித்து நிற்கும் காதலர்களின் உள்ளத்தில் ஏக்கம், தவிப்பு, அச்சம், காதல் நிறைவேறுமா என்ற ஐயம் ஆகியன ஒரேயடியாகக் குடிபுகுந்து வேதனையைத் தருகின்றது. வேதநாயகர் இந்நூலின் காதலர்கள் கொள்ளும் அன்பின் வேதனை மிக்க அதேநேரத்தில் துன்பம் நிறைந்த அன்பை (frustrating love, suffering love) வெளிப்படுத்துகின்றார்.

உலா இலக்கியம்

இவ்வகையில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய தஞ்சைப் பெருவுடையாருலா, கொட்டையூருலா (கோடீச்சுர உலா), வேதநாயகர் இயற்றிய ஞான உலா ஆகிய மூன்று நூல்கள் அடங்குகின்றன. இவற்றுள் கொட்டையூருலா இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

தஞ்சை இராசராசேசுவரத்தில் எழுந்தருளியுள்ள பெருவுடையார் பிரகதீசுவரர் மீது 313 கண்ணிகளால் பாடப்பெற்ற '<u>தஞ்சைப் பெருவுடையாருலா</u>' எனும் நூல் இருபது தலைப்புகளில் அமைந்துள்ளது.

பாட்டியல் நூல்களில் உலாவிற்குக் கூறப்படும் முன்னெழுநிலை, பின்னெழுநிலைகளில் இவ்வுலாவின் கண்ணிகள் அமைந்துள்ளன.

இறைவனின் பெருமைகள், புராண மரபுக் கதைகள், அடியார்களின் பெருமைகள், தஞ்சை நகரின் பெருமை போன்றவற்றை ஆசிரியர் இதில் கூறியுள்ளார். மேலும்,

"சந்தமுறு
நானிலமுஞ் செங்கோ டைத்து மெழிற்றஞ்சை
மாநகர மன்னனெதிர் வந்திறைஞ்ச"[3]

என்று சரபோசி மன்னரைக் குறிப்பிடுவதும் இவண் நினைக்கத்தகும்.

வேதநாயகர் பாடிய '<u>ஞான உலா</u>'வில் அமைந்துள்ள 676 கண்ணிகளில் முன்னெழுநிலை மட்டுமே உள்ளது. பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உள்ள பின்னெழுநிலைப் பகுதி முற்றிலும் இடம்பெறவில்லை. உலா இலக்கியங்களுள் அளவில் பெரிய நூலாகத் திகழும் இந்நூலில் இயேசுபிரான் உலா வருவதாகவோ, உலா வரும் தலைவன் உலா வருவதற்கென மேற்

.. 4

கொள்ளும் செயல்களோ இவ்வுலாவில் காணப்படவில்லை. தவிரச் சிற்றின்ப உணர்விலிருந்து விடுபட்டு, மெய்யுணர்வுக் கருத்துக்களைத் தாங்கி நிற்கும் இந்நூலில் எழுபருவப் பெண்கள் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை. பாட்டுடைத் தலைவனான இயேசுபிரானின் புகழை உள்ளீடாக வைத்து வேத நாயகர் பாடியுள்ளார். எனவே இந்நூலைப் புறப்பொருள் துறையைச் சார்ந்த பாடாண்திணையில் அடக்கிக் கூறுவது பொருத்தமுடையதாகும்.

கோவை இலக்கியம்

அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்த சிற்றிலக்கிய வகைகளுள் கோவை என்பதுமொன்று. சோழ நாட்டில் பாடல் பெற்ற தலமாகிய கொட்டையூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கோடீச்சுரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சிவக்கொழுந்து தேசிகரால் பாடப்பெற்ற 'கோடீச்சுரக்கோவை' எனும் நூல் சரபோசி காலத்தைச் சேர்ந்த தாகும். 444 பாக்களைக் கொண்ட இந்நூலில் முதல், கரு, உரிப் பொருள் அமைதியும், சொற்பொருள் நயங்களும் மிகுதியாக அமைந்துள்ளன. தலச்செய்திகள், சிவபெருமான் பெருமை, திருவருள் செயல்கள், புராண மரபுக் கதைகள், பழக்க வழக்கங்கள், பழமொழிகள் போன்றவற்றை ஆசிரியர் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இந்த ஒரு நூல் மட்டுமே சரபோசி காலத்தைச் சார்ந்ததாக இவ்வகையில் அமைகிறது.

குறவஞ்சி இலக்கியம்

சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும், பெத்லகேம் குறவஞ்சியும் சரபோசி காலத்தைச் சார்ந்தனவாக அமைகின்றன. சரபோசி மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சிவக்கொழுந்து தேசிகரால் பாடப் பெற்ற நூலே '<u>சரபேந்திர பூபாலக் குறவஞ்சி</u>'யாகும். 71 பாக்களைக் கொண்டு 20 உட்பிரிவுகளாக அமைந்த இந்நூல், நேரிசை ஆசிரியப்பா, வெண்பா, கொச்சகக் கலிப்பா, ஆசிரிய விருத்தம் ஆகிய இயற்றமிழ்ச் செய்யுள்களால் ஆகியது.

குறவஞ்சி இலக்கியங்களுள் சிறப்பானதாகப் பல்லோராலும் போற்றப்பெறும் நூலாக இது திகழ்கிறது. இந்நூலில் இறைவன் பெருமை,

.. 5

தஞ்சையின் சிறப்பு, தமிழின் பெருமை, இயற்கை வளங்கள், தலங்களின் பெருமை, பழமொழிகள், குறிவகைகள், பழக்க வழக்கங்கள் முதலான பலவற்றைக் காணமுடிகின்றன.

சரபோசி மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற நூலாதலின் அம்மன்னரைப் பற்றி இந்நூலின் மூலம் அறியவருவன வருமாறு :

போசல குலத்தில் பிறந்தவர்; ஆகமம், கலைகள், அருமறை, புராணம், நூல் பலவும் நன்குணர்ந்தவர்; படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இவற்றை நன்குணர்ந்தவர்; சிறந்த சிவபத்தர்; எல்லா உயிர்க்கும் தண்ணளி புரிபவர்; அரசு இருக்கையில் கவலை இல்லாமல் வீற்றிருப்பவர்; உலகு மன்னர்கள் வந்து அடிபணியும் தன்மை உடையவர்; காசிக்குச் சென்று கங்கையாற்றில் நீராடி விசுவநாதனின் தாமரைப் பாதங்களை எதிர்பணிந்து வேண்டிய வரங்களை விருப்புடன் ஏற்றவர்; இவர் ஆட்சியில் மக்கள் எவ்விதக் கவலையுமின்றி வாழ்கின்றனர்; காட்சிக்கு எளியவராயும் கடுஞ்சொல் ஏதும் கூறாதவராயும் ஆண்டு வருகின்றார்; தம்மை நாடிவரும் இரவலர்க்கும் தம் புகழ் பாடி நிற்கும் புலவர்களுக்கும் வரையாது வழங்கும் வள்ளல் தன்மை உடையவர்.

வேதநாயகரின் '<u>பெத்லகேம் குறவஞ்சி</u>' எனும் நூல், "சங். குரு ஜே.சி. கோலேப் ஐயரின் அனுமதிப்படிப் 'பெத்லகேங் குறவஞ்சி' தமிழில் இசைக்கப்பட்டு மகாராசேந்திர சரபோஜி மஹாராஜ சபையில் அரங்கேற்றப்பட்டது"[4] என்பதற்கேற்பத் தஞ்சை அரண்மனையில் சரபோசியின் முன்னிலையில் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டதை அறிய முடிகிறது.

கிறித்தவத் திருமறைச் செய்திகளைக் கூறவும், பாமர மக்களிடையே கிறித்தவ நற்செய்திகளைப் பரப்பவும் ஏற்புடையதாகக் குறவஞ்சியின் அமைப்பு முறை காணப்பட்டது. அதனால் வேதநாயகர் கிறித்துவையும் கிறித்தவத் திருச்சபையையும் உருவகமாகக் கொண்டு இப்பனுவலை இயற்றினார்.

இந்நூல் 72 தலைப்புகளில் மிக அதிகமான பாக்களைக் கொண்டு அமைந்துள்ளது. 'கவனிப்பு' எனும் பகுதி மட்டுமே உரைநடையில் உள்ளது.

.. 6

கட்டியக்காரன் மேடையில் தோன்றியது முதல் உலா வந்த தலைவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி புலம்பியது வரை உள்ளவற்றை முதல் பகுதியாகவும்; குறவஞ்சி தோன்றித் தன் நாடு சாதி முதலான வளங்களையும் கூறித் தலைவிக்குக் குறி சொல்லியது வரை உள்ளவற்றை இரண்டாவது பகுதியாகவும்; சிங்கனும் அவன் நண்பனும் பறவைகளைப் பிடித்துத் தன் மனைவி குறவஞ்சியைக் காணாது புலம்புதலும் இறுதியில் இருவரும் ஒன்று சேருவது வரை உள்ளவற்றை மூன்றாவது பகுதியாகவும் வேதநாயகரே பிரித்துள்ளார். இசை நாட்டிய நாடக மரபுக்கேற்ப அமைந்துள்ள இந்நூல் விருத்தம், தாழிசை, கழிநெடில், வெண்பா, அகவல், கலிப்பா, கலித்துறை, கட்டளைக் கலிப்பா, சிந்து, 64 அடிச் சிந்து ஆகிய இயற்றமிழ்ச் செய்யுள்களைக் கொண்டுள்ளது.

மருத்துவ இலக்கியம்

சிவக்கொழுந்து தேசிகர் வாதரோகம், சன்னிரோகம், குன்ம ரோகம், உளமாந்தை, சயம், மூலம், இளைப்பு, குட்டம் ஆகிய நூல்களையும்; வேலாயுத வாத்தியார் சிரோரோகம், விஷரோகம், குன்ம ரோகம், விரேசன முறையும் அதிசார சிகிச்சையும், காசரோகம், நீரிழிவு, விரணம் கரப்பான் ஆகிய நூல்களையும்; திருவேங்கடத்தாபிள்ளை வாதரோகம், கர்ப்பிணி, பாலரோகம் ஆகிய நூல்களையும்; வேங்கடாசலம்பிள்ளை பாண்டு, காமாலை எனும் நூலையும்; சுப்பராயக் கவிராயர் சுரரோகம் எனும் நூலையும் எழுதியுள்ளனர். இந்நூல்கள் அனைத்தும் 'சரபேந்திர வைத்திய முறைகள்' என்று சரபோசி மன்னரின் பெயரில் வெளிவந்துள்ளன. அனைத்து நூல்களும் செய்யுள் வடிவில் அமைந்திருப்பது இவண் குறிப்பிடத்தகும்.[5]

முடிவுரை

தஞ்சை மராத்திய மன்னர்களில் இரண்டாம் சரபோசி மன்னர் காலத்திலேயே மிகுதியான அளவில் தமிழ் இலக்கிய நூல்கள் மலர்ந்துள்ளன. ஏனெனில் இவர் காலத்தில் அரசியல் குழப்பங்கள் இல்லாமல் இருந்தன.

சரபோசி மன்னர் தம் அரசவையில் பல புலவர்களுக்கு ஆதரவு

கொடுத்துப் பல இலக்கிய நூல்கள் மலர்வதற்கு உறுதுணையாக இருந்துள்ளார். சரபோசி அரசவையில் பல நூல்கள் அரங்கேற்றம் செய்யப்படுவதையும், புலவர்களைப் பாராட்டி மன்னர் பல பரிசுகளையும் அளித்துள்ளமையையும் அறியமுடிகின்றன.

சரபோசி மன்னரின் நண்பராகவும் ஒருசாலை மாணாக்கராகவும் திகழ்ந்த வேதநாயகர் ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் படைத்துள்ளார். இவர் படைத்துள்ள இலக்கியங்களை அந்தாதி, உலா, தூது, குறவஞ்சி, கண்ணி, கப்பல் பாட்டு, மாலை, புலம்பல், கீர்த்தனை, நாட்டுப்புறவியல், சரித்திரம், வண்ணம் போன்ற இலக்கிய வகைகளாக அமைவதைக் காணமுடிகின்றன.

தஞ்சைப் பெருவுடையாருலா, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, பெத்லகேங் குறவஞ்சி ஆகிய நூல்கள் சிறந்த இலக்கியங்களாக எக்காலத்தும் நிலைத்து வருவதை இலக்கிய வரலாற்றால் அறியமுடிகின்றன.

சரபோசி காலத்தைச் சார்ந்த இலக்கியங்களில் அந்தாதி, உலா, கோவை, குறவஞ்சி போன்ற இலக்கிய வகைகளில் சைவ சமயம், கிறித்தவ சமயம் ஆகிய இரு சமயங்களின் கொள்கைகளும், சமயக் கருத்துக் களும், புராணக் கதைகளும் ஏராளமாக அமைந்துள்ளன.

அக்கால மக்களின் பழக்க வழக்கங்கள், மொழிநடை, ஆடை அணிகலன்கள், விழாக்கள், கலைகள், நம்பிக்கைகள் போன்றவற்றைச் சரபோசி காலத் தமிழ் இலக்கியங்களில் காணமுடிகின்றன.

குறிப்புகள்

1. ம.சா.அறிவுடைநம்பி, _தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்_ பகுதி 1, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994, ப.13
2. தயாமணி மனாசே, _வேதநாயக வேதசாஸ்திரி_, கிறிஸ்தவக் கலை-தொடர்பு நிலையம், சென்னை, 1975, ப.23.
3. _தஞ்சைப் பெருவுடையாருலா_, 57.
4. சி.வி.சவரிமுத்து (உ.ஆ.), _வேதநாயக சாஸ்திரியாரின் ஜெபமாலை விரிவுரையும் திறனாய்வும்_, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1987, ப.28.
5. 'சரபோசி கால மருத்துவம்' என்ற தலைப்பில் தனியானதொரு கட்டுரை இடம்பெறுவதனால் இவைபற்றிய ஆய்வு இதில் இடம்பெறவில்லை.

— 0 —

சுவார்ட்ஸ் நினைவுக்கல் பதிக்க அனுமதி வேண்டி சரபோசி எழுதிய கடிதம்

To

The Honourable Society for promoting Christian knowledge.

Honourable Sirs,

I have requested of your missionaries to write to you, their superiors and friends, and to apply to you in my name, for a monument of marble, to be erected in their church that is in my capital and residency, to perpetuate the memory of the late Rev.Father Swartz, and to manifest the great esteem I have for the character of that great and good man, and the gratitude I owe him, my father, my friend, the protector, and guardian of my youth; and now I beg leave to apply to you myself and to beg that, upon my account, you will order such a monument for the late reverand missionary, Father Swartz, to be made, and to be sent out to me, that it may be fixed to the pillar that is next to the pulpit from which he preached. The pillars of the church are about two cubits broad.

May you honourable sirs, ever be enabled to send to this country such missionaries as are like the late Rev. Mr.Swartz.

I am, honourable sirs,

Yours, faithfully and Truly

Serfojee Rajah

Tanjore, May 28th 1801

<u>கம்பெனி உயர் அலுவலர் கடிதம்</u>

8.3.1832 அன்று சரபோசி காலமானார். தஞ்சையில் இருந்த ரெசிடெண்ட் பொறுப்பு வகித்த ஜே.பிளாக்பர்ன் 9.3.1892 இல் சென்னை கவர்னருக்கு எழுதிய கடிதம்.

"The Right Honourable The Governor will be much grieved to be informed His Highness Maharaja Serfoji is no more.

His decease took place at 4 a.m. yesterday morning and his life had been despaired of for 18 hours previous to the final dissolution.

The ceremonies prior to the removalof the body in processio then commenced and by 6 O'clock pm the corpse was consumed in sight of an assembled multitude of little short of 90,000 persons and I endeavoured that every possible honour should be paid on the part of the British Government.

During the protracted and varying state of His Highness's illness I passed much of my time in the Palace as did also Mr. Assistant Surgeon Bill and Mr.Acting Superintendent Surgeon Currie and I cannot resist bearing my testimony to the firmness perfect resignationand cheerfulness with which His Highness hore it throughout. The time carried attendance solicitute and care of some of His Highness' relations Principal Officers and servent was such as to impress me with the highest respect for the kindne of heart and social qualities that could have called them forth in so eminent a degree. The testimony of deep respect and regret shown towards the corpse on the whole line of the procesion by all rank of people, two thirds of whom must have been in the intimate knowledge of his behaviour to and Government of his subjects goes far to prove the moderation the equity and liberali of his never did I witness one where the expressions of regret were so touching or apprently so sincere, it seemed as the whole community were deprived of their common father and friend. Our common feeling of sorrow seemed to pervade the whole and I am assured that the whole population of the Fort in number about 25, abstained from good the whole day and that upwards 30,000 persons again attended His Highness Sivaji when he returned in collect the ashes of his father this morning.

It will be proper to bring in the observation of the Right Honourable the Governor, that the fact of the Queen's having been dissuaded from ascending the funeral pyle of her husband will have most effectually and entirely broken the practice of this place such as permission can now never again be given from the Palace.

May I request the favour of you to procure me the orders of the Government for the installation of Hish Highness of Raja Sivaji.

May I request you also to bring to the Right Honourable the Governor's notice the extract from the general letter of the Court of Directors under date January 12th 1831, contained in your's of the 1st November 1831 directing the discontinance of the office of Resident on the demist of His Highness the late Maharaja and with reference in the subsequent recommendation of the Government for the continuance of the office and procure me his commands".

I have the Honour to be

Sir,

Your most obedient servant,

Sd/-

J. Blackburn

Acting Resident

Tanjore

March 9th 1832